KLANG, SEREMBAN, IPOH.

CURRENT ACCOUNT and SAVING FUND ACCOUNTS opened: FIXED DEPOSITS received:-Terms which are liberal may be ascertained on application.

Drafts granted upon and Bill negotiated and collected at JAFFNA and at any of the BRANCHES and AGENCIES.

பாங்க் ஒவ் மலாயா லிமிட்டட்

மலாய் நாட்டில் வசிக்கும் இந்தியா-இலங்கை வாசிகளின் வசதிக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற இவ்வங்கியில்:—

மிகவும் சொற்ப தொகையுடன் கணக்குத் தொடர்ந்து செக்குவெட்டலாம்,
நியாயமான பொறுப்புடன் கொடுக்கல் வாங்கல் செய்யலாம்,
இந்திய இலங்கை ஆகிய இடங்களுக்கு சரசமான விலைக்கு உண்டியல்கள் கட்டலாம்,
மாதாந்தரம் நடத்தி வரும் பல சீட்டில் பங்குபெறலாம்,
நம்பகரின் கைத்தொழில், கமத்தொழில், வியாபாரம் முதலியன விருத்திசெய்வதற்கோ,
அந்தியகால ஆறுதலான வாழ்விற்கோ, வேறு பல மனத்தேறுதலுக்கோ இவ்வங்கி உற்ற சிநேகிதனைப்போல உதவிபுரியுமென்பதற்கு, இதில் சேர்ந்து ஒத்துழைத்து பற்றுவரவு செய்துவரும் பல்லாயிரம் கண்பர்கள் அத்தாட்சியாயிருப்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோலக் காணலாம்.

கணக்குத் தொடர்ந்துசெக்குவெட்ட விரும்புவோர், விஷயத்தை நேரேவந்து வங்கியின் மானேஜரிடம் எவ்வேளையிலும் பேசிக் கொள்ளலாம்.

D. V. KANDIAH, Secretary

The Ceylonese Unemployment Committee.

NOTICE.

Jobs For Unemployed Ceylonese.

The Ceylonese Unemployment Committee invites applications for training and employment from Ceylonese Youths who have passed Junior or Senior Cambridge Examinations.

Applicants, when selected, will be eligible to draw:—

(a) An allowance of $6|- per month during the period of their training;

(b) A pay of $15|- per month, after successful training, for candidates with Junior Cambridge Certificates;

(c) A pay of $20|- per month, after successful training, for candidates with Senior Cambridge Certificates:

Employees whose work and conduct are satisfactory, will be eligible for increments of salary at $5|- after every six months of service until they reach $40|- p.m., whereafter annual increments will be payable.

Appointments will be found in the above minimum scales on such occupations as Teachers in English or Vernacular schools, Overseers, Dressers, Conductors, Clerks, etc.

R. V. KARLAKANDAN,
Chairman,
Ceylonese Unemployment Committee.

Kuala Lumpur,
25th October, 1937.

"வழி காட்டி"

—:o:—

யாழ்ப்பாணத்தவர் ஐக்கிய சங்க சஞ்சிகை.

பொருளடக்கம்: பக்கம்

பாழும் போலிக் கௌரவம்	1.
பத்திராதிபர் குறிப்புகள்	3.
விக்கிரகாராதனை	5.
தாயாரின் கடிதம்	7.
மனைவியின் யுக்தியினல் கணவனுக்கு நேரிட்ட ஆபத்து நீங்கியது	11.
கிரஹகலக்ஷ்மி	13.
கரைச்சி நீர் பாச்சற் பகுதியிற் செய்யும் வேலைகள் ...	15.
நவீன நாகரீகம்	17
சமயோசித புத்தி	21.
தமிழ்ப் பத்திரிகைகளும் அன்னிய பதங்களும் ...	22
சம்பாஷணை	24.
பெண்கல்வி	26.
நகையெனும் கொடிய பேய்	29.
எனது அபிப்பிராயம்	30.
சங்கீதம்	31.
தமிழணங்கின் சந்தேக நிவர்த்தி	34.
நீங்களறிவீர்களா?	36.

"வழி காட்டி"

யாழ்ப்பாணத்தவர் ஐக்கிய சங்க முன்னேற்ற உயரிய மாதப்பத்திரிகை.

மலர் க.	ஈசுர ஆண்டு, மார்கழித் திங்கள்.	இதழ் கூ

ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு—நம்மில்
ஒற்றுமை நீங்கிலனேவர்க்கும் தாழ்வு.

—:o:—

பாழும் போலிக் கௌரவம்.

இந்தப் பாழும் கௌரவத்தினால் மனஸ்தாபந்தம் அல்லல் கொஞ்சமல்ல. மனுஷர் என்றோன் போதுப்படச் சொல்ல வேண்டும்? நம்மவர் என்றால் போதும். நம் சாதியினரே விசேஷமாக இந்தப் பாழும் கௌரவத்தால் பாதிக்கப்படுகின்றனர். மற்ற சாதியத்தார் என்ன வேலையையும் கூசாது செய்யும் மனப்போங்கு உடையவர் என்பது யாவருமறிந்ததே.

நம்மவர் வயிற்றுப் பிழைப்புக்கு வழியில்லாமலிருந்தாலும் இந்தப்பாழும் கௌரவத்தினால் ஏதும் தொழில் செய்ய அஞ்சிப் பட்டினி கிடந்து சாகிறார்கள், அல்லது தங்கள் சொந்தக்காரர் வீடுகளில் போய் அவர்களுக்குப் பாரமாயிருந்துவிடுகின்றனர். இப்படியாக பிழைப்பதா அல்லது தன் சொந்த சம்பாத்தியத்தினால் வயிற்றைக் கழுவுவதா கவுரவமென்பது அவர்கள் அசட்டு மூளைக்கு எட்டவில்லைப் போலும். இல்லை, அப்படிச் சொல்லிவிடவும் முடியாது. இது சிறு வயசிலிருந்து படியப்பட்ட ஒரு பாடம். இந்தப் பாழும் பழக்கத்தை விட்டுவிடுவார்களானால் பின் நம்மவர் மேன்மையடைவதற்குத் தடையேதும் உளதோ?

நம் குழந்தைகளுக்குச் சிறு வயசிலிருந்தே இந்தப் பாழும் கௌரவத்தினால் வருங்கேட்டைப் போதித்து வரவேண்டும். சிறுபிள்ளைகள் என்ன அனாவசியமும் கூசாமல் செய்ய ஆவலுடையவர்கள். பெரியோர் கூட்டும்போது அந்தக் கூட்டுமாறைப் பறித்துத் தாங்கள் கூட்ட விரும்புவார்கள். அவர்கள் விருப்பத்தைக் கெடுக்காமல் விட்டுவிடவேண்டும். அப்படி அவர்கள் கூட்டிக் கொண்டு நிற்கும்போது ஆரும் சிநேகிதர் நம்மைப் பார்க்க வந்தால் 'கூட்டுமாற்றைக் கொண்டு உள்ளுக்கு ஓடிப்போ" என்று அந்தப் பாழும் கௌரவத்தை அவர்கள் சிறு மூளையில் நாம் பதியவைத்தலாகாது. ஏன்! அவர்கள் கூட்டினாலென்ன? கூட்டட்டும். நம்மைப் பார்க்க வந்தவரும் சிறு பிள்ளைக்கும் நாம் பழக்கும் பழக்கத்தைக் கண்டு ஆச்சரியப்படுவதுடன், அதுதான் நல்லது என்றும் சொல்வார்கள். அப்படியே தாங்களும் தங்கள் பிள்ளைகளுக்குப் பழக்க வேண்டுமென்றும் விரும்புவார்கள்.

இன்னும் நம் குழந்தைகள் கடைக்குப் போனால், ஏதும் வாங்கினால், அதைத் தாங்களே கொண்டு வரவேண்டுமென்று விரும்புவார்கள். அந்த ஆவலையும் நாம் தடுக்கக் கூடாது. அதில் ஒரு தாழ்வுமில்லை. தன் பொருளைத் தான் கொண்டு வருவது தாழ்வு என்று எந்த மடையன்தான சொல்லுவான். அது தாழ்வு என்று பழக்கப்பட்டதனால்தான் நம்மக்கள் இப்போ என்ன வேலையைச் செய்யவும் கூசுகிறார்கள். நம் சிறுவர்க்கு நாம் இப்போதிருந்தே தன் சுயபுத்தி கொண்டு நடக்க கற்பித்து வந்தோமானால் நாளடைவில் அவர்கள் எவ்வேலையையும் செய்ய பின்னிற்க மாட்டார்கள். அந்தப் பாழும் கௌரவத்தினால் கஷ்டப்படவும் மாட்டார்கள்.

நம் மூதாதையர் ஆதிகாலத்தில் தன் தன் சாப் பாட்டுக்குரிய வஸ்துப்பொருள்களை தாங்களே உற் பத்தி செய்து சாப்பிட்டு வந்தனர். தற்காலத் தில் இந்தப் பாழும் கௌரவத்தினால் அது அகௌரவமென மதிக்கப் படுகின்றது.

"உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லைக் கண்டீர்
உழுதுண்டு வேறூர் பணிக்கு"

என்பதுபோல் இந்த உத்தியோகத்தை நம்பியிரு ந்தவர் பாடு எல்லாம் இப்போ கொஞ்ச காலத்தி ற்குமுன் நிதர்சனமாகக் கண்டோமே.

இப்போ இந்த ஐக்கிய சங்கத்திலே ஏதோ மோட்டார் பழுதுபார்க்கும் வேலையில் ஆளெடுப் பதற்கு விளம்பரம் போட்டோம். ஆனால் அதற் கு இரண்டு மனுத்தான் கிடைத்தது. வேறு ஏதும் உத்தியோகமாயிருந்தால் நூறுபேராவது அதற்கு மனு எழுதிப் போடாமலிரார். இது என்ன நியாயமென்று நினைக்கிறீர்கள். அந்தப் பாழும் கௌரவத்தின் மேன்மைதான். எந்த நாளும் அடிமைகளாய் வேலை பார்ப்பது கௌரவ மாம். தாங்களே பழகிக்கொண்டு ஒரு கடை யை வைத்துக் காலக்ஷேபம் செய்வது அகௌர வமாம். ஆனால் தற்காலத்திய சிறுவரிடமாகிலும் இத்தகையான மூட எண்ணம் வரவொட்டாமல் தடுத்து வந்தோமானால் இன்னும் கொஞ்ச நாட் களில் நாம் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு இரையாகாமல் தப்பித்துக்கொள்ள வழியுண்டு.

பிறசாதியார் சாப்பாட்டுக் கடை யென்றும் பலசரக்குக் கடையென்றும் புடவைக் கடை யென்றும் வைத்திருந்து எவ்வளவு சம்பாரிக்கி றார்கள். நம்மவர் ஒன்று வைப்பதற்கு அங்கே யும் அந்தப் பாழும்கௌரவம் குறுக்கிடுகின்றது. அப்படித் தப்பித்தவறி வைத்துவிட்டபோதி லும் மற்ற சாதியார் செய்வதுபோல் தாமேகூட நின்று அதை நடத்துவதுடன், தானும் ஒரு கூலி யாள்போல் நின்று விற்க வெட்கமுற்று கூலியாள் வைப்பார்கள். கணக்கெழுதுவது கூலியாள். இப்படியான ஆளவல்களெல்லாம் அன்னியர் கை யில் விட்டால் நாளடைவில் என்ன ஆகும். அது வுமன்றி வரவுக்குத் தக்க செலவின்றி அதிகம் ஆளை வைத்தால் உருப்படுவதெப்படி?

இன்னும் சிலர் தம் உத்தியோகத்திலிருந்து கொண்டும் துணி வாங்கி விற்கின்றனர். ஆனால் அதை வெளியில் சொல்ல வெட்கப்படுகின்றனர். வேறு சிலர் சமையலாள் இன்றிச் சமைக்க மனமி ருந்தும், தேக பலமிருந்தும், இந்தப் பாழும் கௌரவத்தின் மேன்மையால் வேலையாளை வைத் துக்கொண்டு அல்லலுறுகின்றனர்.—சிலர் வேலை யாளின்றி இருந்துகொண்டும் அதை வெளியிற் சொல்வது கௌரவக் குறைவென்று, வேலையாளி ருக்கிறானென்றே சொல்லிவிடுகின்றனர்.

இவை யெல்லாம் எத்தனை மதியீனம். கள வெடுக்காமல், பொய் சொல்லாமல் தன் தன் பொ ருளைக் கொண்டு, செவ்வையாயும், சிக்கனமாயும், குடும்பத்தை நடத்தித் தங்கள் சாப்பாட்டைத் தாங்களே புனிதமாகச் சமைத்துச் சாப்பிட்டுச் செட்டாக சீவிப்பவர்களை இகழ்ச்சியாகப் பேசுப வன் முழு மூடன். அவற்றைச் செவிசாய்த்துக் கேட்பவன் அவனிலும் மூடனே. அவசியமின்றி வீண் பெருமைக்காக ஒன்றிற்கு இரண்டு வேலை யாள் வைத்து, அனாவசியமாய்த் தன் காசைச் செலவழிப்பவன், புத்தியற்றவனும், தற்பெரு மைக்காரனுமொழிய, முன் சொன்னவன் கௌர வம் குறைந்தவனென்று ஆர் வாய்கூசாது சொல் லத் துணிவர்.

எல்லாவற்றிலும் இழிவான ஒரு குணம் நம்ம வரிலுண்டு ஒரு கெட்ட பழிப்பு. நாம் செய்யா மல் நம் மூதாதையர் எவரோ செய்திருந்தாலும், இவன் அப்பக்காரியின் பேரனல்லவா! இவன் சோற்றுக்கடைக்காரனின் மகனல்லவா! இவர் களுக்கு இந்தப் பணம் எப்போ வந்தது, அவர் கள் முன் இருந்தது தெரியாதா என்று தங்கள் சிற்றறிவுக்கேற்ப மிகவும் கேவலமான தொனி யில் சொல்லி விடுகிறார்கள். வேறு சாதியார் முன் என்ன நிலைபரத்திலிருந்தும் பின் தங்கள் கெட்டித்தனத்தால் மேனிலையடைந்தவர்களை மிக வும் புகழ்ந்து, அவர்கள் வாழ்க்கை முழுவதை யும், புஸ்தகரூபமாய் வெளியிட்டு விடுகிறார்கள்.

நல்ல நிலைபரத்திலிருக்கும் சீனத் தவக்கைகளு டன் கதைத்துப் பாருங்கள். அவர்கள் தாங்கள் சிறுவயசில் பட்ட கஷ்டங்களும், கைக்காடியிழுக் கும் கூலிகளாகவோ, ரோட்டில் திரிந்து விற்கும் விற்பனைக்காரராகவோ, எப்படிக் கஷ்டப்பட்டு வேலை செய்து தாம் அந்த நிலைபரத்தை அடைந் ததாகத் தம் வாயாலேயே சொல்லுவார்கள். அவர்களிலும் பரம்பரையான பணக்காரர் உண்டு தான், ஆனால் தன் முயற்சியால் முன்னுக்கு வந்த வர்களே அதிகம். அதை வெளியிற் சொல்வது கௌரவக் குறைவாக அவர்கள் எண்ணுவதே கிடையாது.

கொஞ்சக் காலத்திற்கு முன் ஆங்கில நாட்டில் மந்திரி பதவி வகித்திருந்த "ராம்சே மெக்டொனல்ட்" என்பவரின் சீவிய சரித்திரம் அறியீர்களா? அவர் ஓர் மீன் பிடிக்கும் செம்பட் டவனின் மகனும். அப்படியிருந்தும் அவரின் செய் கைகளை எவ்வளவு பெருமையாக அவரின் ஊர் வர் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இன்னும் முசோலினி யென்றும், ஹிட்லர் என்றும், இருக் கும் சர்வதிகாரிகளின் முற்கால சீவியத்தைப்

பாருங்கள். இவற்றை யெல்லாம் அவர்களது தேசத்தவர்பெருமையாக எடுத்துக்காட்டி வருவதனாலன்றே அவர்களும் ஆவலாக முன்னேறி வருகின்றனர்.

நாமும் இனிமேலாவது வீண் அவசியமற்ற பழிப்பு நெழிப்புகளுக்கு நம் மூளையைச் செலவிடாமல் நம்மவர் எந்த வேலையைச் செய்ய எத்தனித்தபோதிலும், அவர்களுக்கு அநுசரணையாய் நின்று கைதூக்கி வரவேண்டும். அப்படி யாவரும் துணிந்து எழுந்தால் நம்மவர் வேலையில்லாத்திண்டாட்டத்தினால் கஷ்டப்படவேண்டி யிருக்குமா?

டஞ்சமா பாதகங்களை விலக்கி நேர்மையாக ஒரு வேலையைச் செய்து பிழைப்பது கௌரவக் குறைவா? அல்லது லஞ்சம் வாங்கிப் பொய் சொல்லி, அழுப்பி, பொய்ச்சாட்சி சொல்லி இவற்றினால் வயிற்றைக் கழுவுவது கௌரவக் குறைவா? கடவுளுக்கு ஏற்குமா? என்பதை சிந்தித்துப் பாருங்கள். உலகமே ஒரு தராசுகோல். அதில் அவரவர் தந்தமக்கு எதெது ஏற்றதோ அதையே போட்டு நிறுத்துக் சொள்வார்கள். ஆகையால் அசட்டு வார்த்தைகளுக்குச் செவி கொடாமல் சுய புத்தி கொண்டு நடந்துவர வேண்டும்.

இன்னும் இந்தப் பாழும் கௌரவத்தை எத்தனையோ விதமாக எண்ணிக்கொண்டே போகலாம். ஆனால ஒரு பாவி சோற்றிற்கு ஒரு சோறு பதம் பார்த்தால் போதாதா? இப்படியான போலிக் கௌரவங்களை முளையிலிருந்தே கிள்ளி எறிய வீரத் தாய்மார்களே முன் வாருங்கள்! அந்தப் பெருஞ் சுமையை தலைமேல் சுமந்து விட்டதால் சரியாய் கண் பார்த்து முன்னுக்குக் கால் வைக்க முடியவில்லை. பாரம் பின்னுக்குத் தள்ளுகிறது. வீரர்களே! இளைஞர்களே! வாலிபர்களே! இந்தப் பெரும் சுமையை நம்மவர் தலையிலிருந்து இறக்கிவிட முன்வாருங்கள்!

... பத்திராதிபர் குறிப்புகள் ...

இந்துக்கள் விக்கிரகாராதனையை மிக விசேஷமாகவே எண்ணி வருகிறார்கள். இப்போ கொஞ்சக் காலத்திற்கு முன் நம் தாய் நாட்டுப் பத்திரிகைகளிலிருந்து வெளியான "கல்லிற்செம்பிற் கடவுளிருக்கை" என்ற தலையங்கத்துடன் வெளியான கட்டுரை அனேகர் வாசித்திருப்பீர்கள். பள்ளிக்கூடத்தில் முதலில் எண்ணும் எழுத்தும் கற்பிப்பதிலேயே உருவ வழிபாடு அமைந்துள்ளதாம். ஐந்தும் ஐந்தும் பத்து என்று யாவர்க்கும் தெரியும். ஆனால் அதை அறியாச் சிறுவர்க்கு எப்படி விளங்க வைப்பது. ஒரு கையிலுள்ள ஐந்து விரலையும், மற்றக் கையிலுள்ள ஐந்து விரலையும் சேர்த்துக் கூட்டிக் காண்பித்தால்தான் இலகுவில் உணர்வார்கள். இவ்வூரில் நெருப்புக் குச்சிகள் சேர்த்துக் காட்டிக் கொடுக்கிறார்கள். எவ்வித உருவமில்லாமல் சிறுவர் மனதில் படியவைப்பது கஷ்டமே ஆதலால் உருவ வழிபாடு நம் மூதாதையாரால் எவ்வளவோ கருத்துடனேயே அனுஷ்டிக்கப்பட்டது. கடவுள் எங்குமே இருக்கிறார் என்ற எண்ணம் யாவருக்கும் இருந்த போதிலும், கோ-இல் என்று சொல்லப்பட்ட ஒரே இடத்தில் பக்தி சிரத்தையுடன் யாவரும் கூடி அவரை ஸ்தோத்கரிக்க வேண்டுமென்ற எண்ணம், எல்லா மதஸ்தர்களிடமும் குடிகொண்டிருக்கிறது. அந்த இடத்தில் சிலர் உருவத்தை வெளியில் வைத்துப் பூஜிப்பர். சிலர் மனதில் வைத்து ஸ்தோத்தரிப்பர். எல்லாம் அவரவர் பக்தியைப் பொருத்தது.

* * *

இவ்வூரில் வதியும் சகோதரிகளில் அனேகருக்குத் தங்கள் தாய் மாரிடமிருந்து இப்படியான அன்புக் கடிதங்கள் அனேசம் கிடைத்திருக்கும். அப்படியிருந்தும் சகோதரி அமிர்தவல்லி தன் தாயாரின் கடிதத்தைப் பகிரங்கப்படுத்த எண்ணியதின் நியாயத்தை வாசித்து அறிந்து கொள்ளுங்கள். இப்படியான கடிதங்கள் உங்களுக்கும் கிடைத்தால் நமக்கு அனுப்பத் தவறாதீர்கள்.

* * *

இப்படியான யுக்தி தர்காலத்தில் செய்ய இயலாவிடினும் பெண்கள் புருஷனுக்கு ஆபத்து வந்தகாலை அதை நீக்க வேண்டிய கடமையும் தந்திரமும் வாய்ந்தவர்கள் என்பதைக் காட்டுகிறது. விக்கிரகாராதனை என்ற கட்டுரையுடன், இதையும் சேர்த்தனுப்பிய சகோதரி சுசி அவர்களுக்கு எம்நன்றி உரித்தாகுக. முந்திய கட்டுரை போன மாசமே கிடைக்கப் பெற்றும் இடமின்மையால் தாமதிக்கலாயிற்று. அதைக் கவனியாது இம் முறையும் எழுதி அனுப்பிய சகோதரியின் தயாள குணத்தைத் கோரி இரண்டையும் இம்முறையே வெளியிடலானேம்.

சிறிதாவது நம்மவர்க்குப் பிரயோஜனமளிக்கப் படாத கட்டுரைகள், வீண் விவாதங்கள், நம் சஞ் சிகையைப் பற்றி அதிசயிப்பவரின் அதிசயங்கள், யாவும் அனுவசியமென எண்ணி விட்டுவிட் டோம். சகோதர சகோதரிகள் இனியேனும் தங்கள் விலையேறப்பெற்ற நேரத்தையும் கிடைத் தற்கரிய மூளையையும் பிரயோஜனமுள்ள வழி யில் செலவிட்டு நம்மவர்க்கு நன்மை. பயக்கக் கூடிய நன்மையான கட்டுரைகள் எழுதி உதவு வார்கள் என்றே எண்ணுகிறோம்.

* * *

பத்திரிகையே வேலையாகவிருந்து பத்திரிகை நடத்துவதே சுலபமான காரியமல்ல அப்படியிரு க்க பலதுறைகளிலும் இருக்கும் நாம் அதைக் கொண்டு நடத்த எண்ணியிருப்பது எப்படியென்று விளங்கவைப்பது அனுவசியம். பலரின் வேண்டு கோளுக்கிணங்கி தமிழ்ப் பக்கத்தைக் கூடுதல்பண் ணி இருக்கிறோம். அவர்களின் வாழ்த்துரை களால் நாம் உற்சாகமடைந்த போதிலும், அறிவுக் குரிய கட்டுரைகளே அவர்கள் எழுதி உதவாததற் காக வருந்துகிறோம்.

* * *

சங்கீதத்தினால் வசியமாகாத ஜீவராசிகளேகிடை யாது. அப்படியான அருமையும் பெருமையும் வா ய்ந்த சங்கீதத்தை நம்மவர் ஆதிகாலந் தொட்டே வி ரும்பி வருகின்றனர். வாத்தியக்கருவிகள் இல்லாத காலந்தொட்டே அவர்கள் பட்சிசாலங்களின கீத ங்களைக் கேட்டு ஆனந்தித்திருக்கின்றனர். இதை யறிந்தே தெய்வப் புலமைவாய்ந்த திருவள்ளுவ நாயனாரும்

"செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்
செல்வத்துளெல்லாம் தலை" [அச்செல்வம் என்று கூறியுள்ளார். அப்படியிருக்கத் தற்கா லத்தில் சிலர் "பெற்றோர் அறியாதவராகையினால் தான் பிள்ளைகள் சங்கீதத்தை சரியாய்ப் படிக்கா விட்டாலும், அதைப்பெற்றோரால் உணர முடிய வில்லை" என்கின்றனர். அப்படியானாலும் அன் னிய பாஷையாகிய ஆங்கிலப்படிப்பு இவர்கள் மூளையில் எப்படிப்புகுந்தது. அன்னரின் பெற் றோர் அல்லது மூதாதையர் ஆங்கிலங்கற்றிருந்த னரோ சங்கீதம் நம்மவர்யாவரும் அறியவேண்டிய அரிய வித்தையானதினால், அதை நம் வழிகாட் டியின் மூலம் சிறிது சிறிதாக வெளியிட விரும்பி னோம். விளங்காதவர் கேள்விகளைக் கேட்டு விள ங்கிக் கொள்வதே அழகு. அதைவிட்டுப் புலவரை அளவுகோல் கொண்டு அளக்கவும் தராசுகோலி விட்டு நிறுக்கவும் நாம் எண்ணவில்லை. சங்கீத வித் வான்களே! தயவுசெய்து இனிமேல் உங்கள் புகை யை எமது வழிகாட்டி மூலமாகக் கக்காமல் நேரி லே விட்டுக்கொள்ளுங்கள். எமக்கு அறிவுக்கேற்ற தான சங்கீதமுறையைமட்டும் எழுதி உதவினால் பெரும் உபகாரமாயிருக்கும். மனுஷரைபோ அல் லது அவர்களின் புலமைத்தன்மையையோ அளக் கும் கருவி வழிகாட்டியிடம் கிடையாது சங்கீதம் அளக்கும் கருவியே நம்மிட மிருப்பதால் அளவு க்கு மிஞ்சி நீளமான விதண்டாவாதக் கடிதங்க ளைப பிரசுரிக்க வழிகாட்டி இடமளிக்க மாட்டா ளென்றே அஞ்சுகிறோம்.

* * *

கிரஹலக்ஷிமி மிகவும் விசேஷமான கட்டுரை. பெண்கள் தாங்கள் படித்தணருவதுடன் தங்க ளோடவருக்கும் படித்துக் காட்டி அவர்களும் உணரும்படி செய்வதுடன், அதற்கான முறை களைச் செய்யவும் உதவி புரிய வேண்டுப்.

* * *

கரைச்சி நீர்ப்பாய்ச்சற் பகுதியில் செப்யும் வே லைகள் நம்மவர் அறிந்திருப்பது மிகவும் நன்மை பயக்கும். வேலையில்லாமல் அல்லலுறுபவர் யாவ ர்க்கும் இவை யெல்லாம் சிறந்த வழிகாட்டியாகும்.

* * *

தருணத்தில் சமயோசித புத்தியுடன் நடக்கக் கூடிய கெட்டித்தனம் யாவர்க்கும் வேண்டும். மற் றவர்க்கும் தனக்கும் நன்மை பயப்பதான சம யோசித புத்தியே சிறந்தது. –

* * *

தமிழ் பத்திரிகைகளில் அன்னிய பதங்களைச் சேர்ப்பது அழகல்லத்தான். நாம் ஆங்கிலத்தைப் படித்து அதிலேயே இத்தனை வருஷத்தையும் கழித்துவிட்டவர்களானதினால் செந்தமிழ் பாவிப் பது கஷ்டமே. ஆனாலும் இயன்றவரை தமிழில் எழுதவே எண்ணியுள்ளோம். தமிழை விருத்தி பண்ண வேண்டும் என்றும், அதன் நன்மைகளை யும் ஆங்கிலத்திலேயே எடுத்துரைக்கும் நம் சகோ தரர்கள் தங்கள் ஆர்வமிக்க கட்டுரைகளில் சில வற்றையேனும் தமிழில் எழுதி உதவினால் மிகவும் நன்மையாகும்.

* * *

சகோதரர் சிதம்பரம்பிள்ளை அவர்களால் எழு தப்பட்ட "பெண்கல்வி" மிகமிக அருமையான கட்டுரை, யாவரும் மெச்சக்கூடியது. சகோத ரிசளுக்கு மிகுந்த புத்தியளிக்கக கூடிய கட்டுரை யாவரும் அகத்தியம் வாசித்தணர வேண்டியது. மிகுதி அடுத்த இதழில் வெளிவரும். இப்படி யான அறிவுக்குகந்த கட்டுரையே நாம் விரும்பு வது.

* * *

கடிதங்கள் எழுதுபவர்கள் கூடியவரைபில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் எழுதினால் பிரச ரிக்கப்படும். மற்றவை திருப்பி அனுப்பப்படவும் பாட்டாது என்பதை நேயர்கள் அறிய வேண்டு கிறோம்.

... ... விக்கிரகாராதனை ... ...

விக்கிர காராதனை என்பது:— ஓரிடத்திலோ, ஓர்பொருளிலோ, விசேஷித்து, அடங்கியிருக்கும், சக்தியாகிய ஈஸ்வர ஸ்வரூபத்தை ஆராதிப்பது. நம்மைப்படைத்துக் காத்துத் தம் பாதாரவிந்தத்திற் சேர்த்துக் கொள்ளும் சர்வேஸ்வரனிடம் நாம் நம் முடைய நன்றியறிதலைக் காட்டவேண்டியது மிகவும்மவசியம். ஆனபடியால் ரூபிகளாகிய நாம் அரூபியாயிருக்கும் ஈஸ்வரனிடம் எவ்வாறு நன்றியறிதலைக் காட்டக் கூடும்?

அன்பர்களே! நான் இதை எழுதத் தொடங்கி ஐந்து நிமிஷத்திற்குள், ஒலிபரப்பும் கருவியிலிருந்து, இரம்பவும் அருமை வாய்ந்த ஓர் கவிஞர் திருவடி சரணம் என்னும் பாட்டுப் பாடினர். அதை இந்நேரத்தில் கேட்கவும் என் மனமானது இரம்பிய ஆனந்தமாயிருந்தது. ஏதோ எல்லாம் வல்ல இறைவனின் கருணைதான் இதுவும் இதை விரித்து எழுதினால், தொடங்கிய காரியம் மூடிவு தெங்ஙனம். ஆனபடியால் இதை இவற்றோடு விடித்து மறுபடி எழுதத் தொடங்குகிறேன்.

அதாவது, ஓர் சுத்தமான இடத்தில் எம்மனதிற்கு விரும்பிய படங்களை வைத்து அபிஷேகம் முதலியவற்றால், அப்படத்தில் அவருடைய சக்தியை ஏற்றி, ஈஸ்வரன் எங்கும் நிறைந்தவரென்பது உண்மைபானாலும், அவருடைய பூரண சக்தியை அதனிடம் விளங்கும்படி மகாமந்திரங்களை உச்சரித்து, அந்தப் படத்தில் விளங்கும் ஈஸ்வரனுக்கு நம்முடைய தேகத்தைத் தத்தஞ்செய்கிறோம். இரு கைகளையும் அவருக்கு அபிஷேகாதிகள் செய்வதில் உபயோகிக்கிறோம். அவருக்குப் பூசைசெய்வதற்கு வேண்டிய புஷ்பங்களை எடுத்து வருகிறோம். ஈஸ்வரனுடைய திருவடிகளைக் கண்டு கண்களானந்திக்கின்றன. நம்முடைய மனம் அவரிடம் செல்கின்றது. அவருடைய கதைகளைக் கேட்பதிலே காதை உபயோகிக்கிறோம். இவ்வாறாக நம் தேகத்தையும், மனதையும் சில நாழிகை பரியந்தமாவது, ஈஸ்வரனிடம் வைத்து, எப்பொழுதும் அவ்வாறு தியானிக்கும் பழக்கத்தை உண்டாக்கிக் கொள்கிறோம்.

இதுநிற்க, தினந்தோறும் எத்தனை பாலைகள், செய்கிறோர். எத்தனை சீவன்கள், நம்மால் படிந்து போகின்றன. ஓர் மனிதனைக் கொலைசெய்தால் இராசாங்கத்தார் அவனை விசாரித்து, கொடுந்தண்டனையாகிய தூக்குத்தண்டனை விதிக்கிறார்கள். ஒரு ஆட்டையோ, மாட்டையோ கொன்றால், அவனுக்குச் சிறுதண்டனை விதிக்கிறார்கள். சீவன் மனுஷரிடம் இருப்பதுபோலவேதான் மாட்டினிடமும் இருக்கிறது. ஆதலின் மாட்டைக் கொல்வதுங் கொலையே. அப்படிக் கொல்லும் மனிதனைக் கண்டால், நாம் எவ்வளவு அருவருப்புக் கொள்கிறோம்.

நாம் தினமும் எத்தனையோ சீவன்களை வதைக்கிறோமே அதைச் சற்றுக் கவனித்துப் பார்ப்போம். நாம் தரையில் நடக்கும் பொழுது, ஆயிரக்காணக்கான எறும்புகள், நம்முடைய கால்களில் அகப்பட்டு நசுங்கி மடிந்து போகின்றன. நாம் குடிக்குந்தண்ணீரில், எவ்வளவோ பூச்சிகளுண்டு. அவைகள் நம் கண்களுக்குத் தெரிவதில்லை. பூதக் கண்ணாடியைக் கொண்டு பார்த்தோமானால், அதில் நிறைந்துள்ள பூச்சிகளைக் காணலாம். ஆனால் தற்காலத்தில், இந்தத் தண்ணீருக்காக இரம்பவுங் கஷ்டப்பட்டு, எவ்வளவோ மருந்துகள் கலந்து, தண்ணீரில் ஒருவித கிருமியுமில்லையென்று, சொல்லிப் பாவிக்கிறார்கள். இதுவும் பாவந்தான்.

இதெல்லாமிருக்கட்டும். வாழை, தென்னை, முதலிய மரங்களில் சீவனில்லையா? அவைகளையும் நாம் பாவிக்கிறோம். இதுவும் கொலைப் பாவந்தான். ஆனால் என்னதான் செய்வது, எவ்வாறு நம்முடைய உயிரைக் காப்பாற்றுவது. பிறருடைய பிரயோசனத்திற்காக நம்முடைய உயிரைக் காப்பாற்ற வேண்டிய நாம், மேற்சண்ட மரம், புல் பூண்டு முவலிய வைகளைப் பெயர்ப்பதும், எறும்பு பூச்சி, முதலியவைகளைக் கொல்வதும், பாவமாகாது.

அந்நியரையும், எமது உயிரையும், காப்பாற்றுவதற்காக நாம், மாமிசம் புசிக்க வேண்டியதவசியமில்லை. ஆதலின் மாமிச பட்சணத்தை நிவர்த்திக்க வேண்டும். நாம் உயிரைக் காப்பாற்ற வேறு வகையில்லையே என்னும் இன்றியமையாத தோஷத்தால், காய், கறி, பதார்த்தங்களைப் புசிக்கலாமேயன்றி, மாமிசம் புசிப்பது மிகவும் பாவமாகும்.

வாசகர்களே! ஒன்றை எழுதத் தொடங்கி, இன்னொன்றை எழுதலானேன்.

சர்வேஸ்வரன், சர்வவியாபகர் என்னுங் கருத்தைக் கொண்டே எல்லோர்க்கும் அதை மெய்ப்பிக்குமாறே நமது முன்னோர்கள், லிங்கம் முதலியவற்றை வைத்துப் பூசித்திருக்கிறார்கள். அதை நாங்களும், அதாவது வரவர பின்னால் வருஞ் சந்ததியாரும் இதைப பூசித்தே வருகிறோம்.

அந்நிய மதஸ்தர்கள், உங்கள் சுவாமி செம்பிலும், கல்லிலுமா இருக்கிறார் என்று அறியாமையாற் கேட்கின்றனர். ஆதிகாலத்தில் ஒரு கல்லை இரண்டாக உடைத்து, ஒன்றை விக்கிரகமாக்கி மிகவும் பக்தியுடன் பூசித்தார்களாம். இனனொன்றை வாசற்படிக்குக் கல்லாக உபயோகப்படுத்தித் தினந்தோறும் மிதித்து, வந்தார்களாம்.

"சும்மாதனு வருமோ சும்மா பிணிவருமோ
சும்மா வருமோ சுகதுக்கம்—நம்மால்முன்
செய்த வினைக்கீடாச் சிவனருள் செய்விப்ப
[தென்றுல்
எய்தவனை நாடியிரு."

"அன்றே யனுதி யமைத்தபடி யல்லாதொன்
றின்றே புதிதாய் இயையுமோ—என்றுஞ்
சலியா தியற்றுவான் தன்னையே நோக்கி
மெலியா திருந்துவிடு."

"எவ்வுயிருங் காக்கவோரீசனுண்டோ வில்லையோ
அவ்வுயிரி னைமொருவனல்லவோ—வவ்விப்
பொருவதம் நெஞ்சே புழுங்குவதும் வேண்டாம்
வருகுவதந் தானே வரும்."

என்றபடி. அவரவர்க்குள்ள துக்கத்தையும் துன்பத்தையும் அறவொழித்துச் சந்தோஷமாக சர்வேஸ்வரனை பூசித்தால் எல்லாம், சூரியனைக் கண்ட பனிப்போல மாறிவிடும்.

பூர்ண சம்பன்ன பொருளுமாய், சகல பொருட்களுக்கும் மேலான வஸ்துவாய், எல்லா ஒளிகளுக்கும் மேலான ஒளியுமாய், சோதிப் பிரகாசமாய், எல்லா அழகுக்கும் மேலான அழகாய், சிறப்பாய் விளங்கும் கடவுளே! பரஞ்சோதி. அப்பரஞ்சோதியின அணுப்பிரமாணமாகிய சிற்சோதியான ஆத்மா நமக்குள் அமைந்திருக்கின்றது.

"உன்தடைய தியானமதே மகத்தாம் வெற்றி
உன்தடைய தியானமதே மகத்தாஞ் சித்தி
மன்தடைய தியானமதே மகத்தாம் இன்பம்
மின்தடைய தியானமதே மகத்தாம் ஞானம்
மனதடைய தியானமதே மகத்தாம் மோட்சம்
மனதடைய தியானமதே மகத்தாம் தியாகம்
மனதடைய தியானமதே சித்தாசித்திபாகம்."

அப்படி, ஒருமனதாய் நின்று தியானிப்பதற்கு வைராக்கியம் வேணும். அப்படியின்றேல் முடிந்தவரை மனதை ஒடுக்கி, தினந்தோறும் ஈஸ்வரனைத் தியானிக்கவேணும்.

மற்றவர்களை மயக்கும் நிமித்தம் கடவுளைக் கண்டேன், கண்டேன் என்று சொல்லி, வீண்காலங் கழிக்கிறார்கள் சிலர். ஆனால் பரம பக்தராகிய மாணிக்கவாசகர் கூறியபடி "ஒருத்தனை உன்னையோலமிட்டலறி உலகெலாந் தேடியுங்காணேன்" என்று, உண்மைபேசி உலகத்தில் உலாவுவது மிகவுஞ் சிறப்பாகும். பற்றற்றார்க்குப் பலனுண்டு பரமுத்தியுண்டு. உள்ளதுபேசில், மெய்பது காணும். நிஜமுள்ளோர்க்கு, நித்தியமுண்டு. என்பது திண்ணம் இது நிற்க.

ஞானமணி விளக்கைய் விளங்கிய தாயுமானசுவாமிகள், பரமதயாளுவாய், கிருபாமூர்த்தியாய், பக்தியும், ஞானமும் நிரம்பிய புண்ணியராகவே யிருந்தாரென்பதாமறிய, அவரது அருள்சொரியும், திருப்பாடல்களில், பக்திதளும்பும், பராபரக் கண்ணியே போதுமானது.

"எவ்வுயிரு மென்னுயிர் போலெண்ணி
[யிரங்கவுநின்
தெய்வவருட்கருணை செய்யாய் பராபரமே."
"தம்முயிர் போலெவ்வுயிருந் தானென்று
[தண்ணருள் கூர்
செம்மையருக் கேவலென்று செய்வேன்
[பராபரமே."

இதுபோன்ற பக்தி தான் பக்தி. இதைப் பரபக்தி என்பர். பொருள் வேண்டும், பிள்ளை வேண்டும், கீர்த்தி வேண்டும், என்பதாகக் கடவுளைப் பிரார்த்திப்பதும், கேட்டவை கிடைத்தால் கோயிலுக்குப் போதலும், நினைத்தபடி பிரார்த்தனை செய்வதுமாம். தாம் கோரியபடி கிடையாது போனால் கடவுளுக்குக் கண்ணில்லையா? ஒருகண்ணில் வெண்ணையும், மற்றொரு கண்ணில் சுண்ணம்புமா இருக்கிறது. துஷ்டர்களுக்கும், பாவிகளுக்கும், சகலசம்பத்தையுங் கொடுக்கிறாரே நாம் எவ்வளவு புண்ணியஞ் செய்தாலும், நம்மை ஏன் இப்படிப் பரீட்சிக்கிறார். இது வென்ன கொடுமை, என்று தெய்வத்தைப் பலவாறாக நிந்தித்து நோகிறார்கள் இது அபரபக்தி.

உண்மைப் பக்தனுக்கு, எல்லாம் ஈஸ்வரரூபமாகவேதோன்றும். அவன் யாரிடமும், அன்பு பாராட்டி நடப்பான். அவனை எல்லோரும் இகழ்ச்சிப்பார்கள். உலகத்தில் அவனன்றி ஒன்றும் நடவாதென்றே நினைப்பான். ஈஸ்வரனும் மெய்ப்பக்தர்கள் விருப்பியதை அளித்து, அவர்களின் தேகாந்தத்தில் முத்தியையு மளிப்பாரென்பது திண்ணம். இவ்வுண்மையை விளக்கவே பட்டினத்தாரும்.

"அன்றென்று மாமென்று மறுசமயங்கள்
ஒன்றோடொன் றெவ்வா துரைத்தாலு—மென்று
மொருதனையே நோக்கு வாருள்ளத்திருக்கு
மருதனையே நோக்க வரும்."

என உரைத்தார். நிற்க

தாயுமானசுவாமிகளும், உலகத்தில் பெரும்பாலும் நடந்து வருவதைக் கருத்திற் கொண்டே:—

அவனன்றி யோரணுவு மசையாதெனும் பெரிய
வாப்தர் மொழி பொன்று கண்டால்
அறிவாவதேது சில வறியாமையே தினை
அறிந்தார்கள றியார்களார்
மௌன மொடிருந்ததாரென் போலுடம்பெலாம்
வாபாய்ப் பிதற்றுமவரார்
மனதெனவு மொருமாயை யெங்கேயிருந்து வரும்
வண்மை யொடிரக்க மெங்கே
புவனம் படைப்பதென் கர்த்தவிய மெவ்விடம்
பூத பேதங்க ளெவிடம்
பொய் மெயிதமகிதமேல் வருநன்மை தீமையோடு
பொறை பொறுமையு மெவ்விடம்
எவர் சிறிய ரெவர் பெரியரெவருறவ
[ரெவர்பகைஞர்
யாதுமூனா டன்றியுண்டோ
இகபர மிரண்டினு முயிரினுக் குயிராகி
யெங்கு நிறைகின்ற பொருளே."

எனப்பாடினர். உத்தம பக்தி முதிர்ந்து, மெய்ஞானமடைந்த, முதியோர் வாக்கு இப்படித் தானிருக்கும். என்னபக்தி! என்ன ஈஸ்வரத்தியானம்!

"நித்தியமாய், நின்பலமாய், நிட்களமாய், நிராமயமாய், நிறைவாய், நீக்கச் சுத்தமுமாய்த், தூரமுமாய்ச், சமீபமுமாய்த், தரியநிறை, சுடராயெல்லாம் வைத்திருந்த தாரகமாயானந்த பயமாகி, மனவாக்கெட்டாது, சித்துருவாய் நின்ற வொன்றைச் சுகாரம்பப் பெருவெளியைச் சிந்தை செய்வாம்.

ஆகையால் அன்பின் மிக்க அருஞ் சகோதரிகளே! இன்னும் இதை விரித்தெழுதலாம். ஆனால் இவ்வளவுதான் என் சக்திற் கேற்றது. நாம் ஒவ்வொருவரும் காலை மாலை ஒவ்வொரு மணித்தியாலமோ, அல்லது சிறிதளவு நேரமோ எம்பெருமானை நமஸ் கரித்து வரவேண்டும். பெரியோராகிய நாம் இப்படிச் செய்வதை எங்கள் சிறு பாலர்களும் பார்த்துத் தாக்களும் அப்படியே, செய்கிறார்கள். ஈசனின் பாதத்தைத் தொட்டு நமஸ்கரித்துநறு மலர் தூவுகிறார்கள். இவற்றைக்காணவே, எங்கள் மனம இரம்பிய ஆனந்தம் மடைகிறது.

தோன்றுத்துணையாய் நின்று அருள் புரியும் ஈஸ்வரனிடம் எம் நன்றியறிதலைக் காட்டவேணும்.

பக்தியே முத்திக்கு வித்தாம்.

சுசி.

... ... "தாயாரின் கடிதம்" ... ...

நான் எனது பெற்றோருக்கு ஒரே மகளானதினால் என்னை இவ்வூருக்கு அனுப்ப முதலில் அவர்களுக்குக் கொஞ்சமேனும் விருப்பமில்லை. ஆனாலும்,

நாடெலாம் செந்நெல் விளையினும்
நாட்டின் நதியெலாம் நவமணி தரினும்
காடெலாம் ஆடை காய்க்கினும் மேகம்
கனகமே பொழியினும் மடவாய்
ஆடலே புரியும் அம்பலவாணர்
அவரவர்க் கமைத்ததே யல்லால்
வீடெலாம் கிடந்து புரண்டுருண்டழினும்
விதியலால் வேறுமொன் றுளதோ?

என்ற ஆன்றோர் வாக்குப் பொய்யாகுமா.

எனக்கு இவ்வூரில் சீவிக்க வேண்டுமென்ற பிராப்தமிருந்ததினால், இவ்வூர் உத்தியோகஸ்தருக்கே மனையாளாய் என் பெற்றோரைப் பிரிந்து ஆழாழி சமுத்திரமுங் கடந்து, இவ்வூருக்கு வர நேரிட்டுவிட்டது. பெற்றோரை விட்டுப் பிரிவது எனக்கும் மிகுந்த மன வருத்தத்தைக் கொடுத்தது. கல்யாணமாகி மூன்று மாசம் எங்கள் ஊரில் எங்கள் வீட்டில் மிகவும் குதூகலமாகக் காலங் கழித்து வந்தோம். நானே ஒரே பெண், அதிலும் ஆங்கிலம் கொஞ்சம் படித்தவள். ஆதலால் எனது தாயார் என்னை அப்பாலுள்ளவர் பக்கத்துக்கே அழைப்பதில்லை.

எனது தகப்பனார் ஊரில் ஓர் ஆங்கிலத்தமிழ் ஸ்கூலில் ஆசிரியர். என்னை நன்றாக ஆங்கிலம் கற்பிக்க வேண்டுமென்றும், கலியாணம் இப்போ அவசரமில்லை யென்றும், ஒரேயடியாக நின்றவர் தான். ஆனால் என் விதியும் தாயாரின் போதனையும், அவரை அவ்விதம் செய்யவொட்டாமல் தடுத்துவிட்டது. எனது தகப்பனாருக்குத் தமிழில் அவ்வளவு விருப்பமில்லை. அம்மாவை சுத்த கர்நாடகம் என்று சொல்வார்.

எனது தாயார் தமிழில் பாண்டித்தியம் வாய்ந்தவரென்றே சொல்லவேண்டும். எனெனில், எடுத்ததிற்கெல்லாம், ஒரு குறளோ, வெண்பாவோ சொல்லி முடித்துவிடுவார். என் தகப்பனாருக்கு இது ஒன்றும் விளங்காததினாலோ அல்லது என்ன காரணத்தாலோ அம்மாவுக்கு பாட்டுப்

பெட்டி என்றே பெயர் வைத்து விட்டார். எங் கேனும் வெளியே சென்று வீடு திரும்பிய நேரத் தில் அம்மாவை எதிரில் காணவிட்டால் "எங்கே பாட்டுப் பெட்டியைக் காணமே" என்பார்.

"நாடு சுற்றும் நாதனை
வீட்டில் காணமல்
பாட்டுப் பெட்டியுமிதோ
வாட்டமுற் றிருக்கின்றதே"

என்பார் தாயார்.

இப்படியே அவர்கள் பொழுதும் சந்தோஷ மாகப் போய்க் கொண்டிருந்தது. நான் முன் கூறியபடி ஈற்றில் அம்மாவின் சொற்படி எனக் குச் சிறு வயசில் விவாகமாய்விட்டது. நானும் என் நாதருடன் பிரயாணத்துக்குச் சித்தமா னேன். அப்போது அம்மா பட்ட பனவருத்தம் கொஞ்சமல்ல. "என்ன செய்வது கலியாணம் கட்டிக் கொடுத்துவிட வேண்டுமென்று அவ சரப்பட்டேனே! இனி என்னருமைச் சுமாரத்தி யின முகத்தை எப்போ காணப்போகிறேனே! கண்ணுக்கெட்டாத் தேசத்திற்கு அவளை அனுப்பி விட்டுத் தனித்திருந்து புலம்பப் போகிறேனே!" என்று ஏங்குவார்.

என்ன செய்வது அதெல்லாம் எண்ணுவதற்கு நேரம் கடந்து விட்டதல்லவா? இனி நான் என் பத்தாவுக்குச் சொந்தமானவளன்றோ? அவர்கள் வருந்துவதைப் பார்த்து என் மனமும் கலங்காம லில்லை. நான் என்ன செய்யலாம், அவர்கள் தானே விரும்பிக் கட்டிக் கொடுத்தவர்கள், இனி நான் என் பத்தாவின் கட்டளைப்படி நடக்க வே ண்டியவள், என்று எனக்கு நானே சமாதானம் சொல்லிக் கொள்வேன். இப்படியே நாட்கள் நேறந்து சென்று எங்கள் பயணநாளும் வந்துசேர் ந்தது. என் நாதரும் என் தகப்பனாரும் எங்கள் பெட்டிகளைப் புகைரதஸ்தானத்திற்கு அனுப்ப ஆயத்தப்படுத்துகிறார்கள். அப்படி எல்லாம் ஆயத்தமாகும்போது நான் என் மாதாவிடமேகி வணக்கமுடனே தொழுது,

"மேதினியிலென்னை விருப்பமுடன்பெற்றெடுத்த தாயே நான் போய்வாறேன் தக்கமதிசொல்லிவிடும் அம்மாநான் போய்வாறேன் ஆசீர்வதித்தனுப்பும் என்றருமை மாதாவின் பொற்பாதம் தெண்ட [னிட்டேன்
தெண்டனிட்ட சேயாளைநீச் சேர்த்தணைத்து [முத்தமிட்டு
வண்டார் குழலழகி மாதாவும் ஏதுசொல்வாள்
கண்மணியே போய்வா என்கைக்கிளியே போய்வா
விண்மணியே உங்களுக்கு மெய்ப்பாளர் தஞ்ச [முண்டு
போன இடத்தில் நீ புத்திபுடனே இருந்து
ஞானமுடன்வீட்டை நடத்துவாய் கண்மணியே"

என்று சொல்லி அழத் தொடங்கிவிட்டார்.

எனக்குமோ துக்கம் தொண்டையை அடை த்துவிட்டது. அம்மாவுக்குக் கொஞ்சம் விக்கல் ஒப்பது இன்னும் ஏதோ புத்திமதிகள் சொன் னார். ஆனால் ஒன்றும் எனக்கு ஞாபகமில்லை. பெற்றெடுத்த மாதாவின் பிரியாவிடைகள் பெற்று, மற்றுமுள்ள பேர்களதனை பிரிவாவிடைகள் கேட் டேன். பெரியோர்கள் ஆசி சொன்னார், பெண் கள் வந்து வாழ்த்தினார்கள், உறவோர் அனைவோ ரும் உவந்து புகழ்ந்தார்கள். என்னருமைத் தாயாரைக் கண்ணால் பார்க்கவே சகிக்கவில்லை. என்னால் வாய் திறந்து பேசவே முடியவில்லை. அம்மாவும் புகைரத ஸ்தானத்திற்கு வந்தால் தன் கவலையதிகரிக்கும் என்று வீட்டிலேயே வழியனு ப்பி நின்றுவிட்டார். வாய் பேசாமல் தலையும் கண்ணுமே என் மாதாவிடம் விடைபெற்றுப் புகைரத ஸ்தானம் வந்துசேர்ந்தோம்.

என் தகப்பனாரும் கூடவே தெயிலேறிக் கொ ழும்புவரையும் வந்தார். கொழும்பு வந்து சே ருந்தானையும் நான் ஊற்றின கண்ணீர் கொஞ்ச மல்ல. என் தகப்பனாரும் என் நாதரும் எவ்வ ளவு புத்தி சொல்லியும் என்னால் தாங்க முடிய வில்லை. பெற்ற தாயின் அன்பை மறப்பது முடி யுமா?

எனது தகப்பனார் எங்களைக் கப்பலேற்றிவிட்டு என்னைப்பார்த்து, "பிள்ளை கவனமாகப்போ, காகி தம் எழுது, வீணுக விசனப்படாதே, உனக்கு எல்லாக்தும் எல்லாமாய் உன் நாதரிருக்கிறார், வீணுக வருந்தாதே, நான் போய் வருகிறேன்" என்று சொல்லிக் கண் கலங்கிக்கொண்டு இறங் கிப்போனார். என்னால் தாங்க முடியாதவாறு அழுகை மேலிட்டுவிட்டது. ஐயோ நான்பட்ட மனவேதனை கொஞ்சமல்ல. இனி எனனால் வி பரிக்கவும் முடியாது.

ஓபாத அழுகையுடனும், மனக்கவலையுடனும், இவ்வூர் வந்து சேர்ந்தேன். வந்து சேர்ந்தும் வீட்டினெண்ணந்தான். தபாற்காரனையே பார்த் தபடி நாட்களை எண்ணி வந்தேன். நான் இவ் வூர் வந்து நான்கு நாட்களால், தபாற்காரன் என் னிடமொரு கனத்த, பெருத்த கடிதத்தைத் தந்து போனான். விலாசம் என் பெயருக்குத்தான் இடப்பட்டிருந்தது. முத்திரையும் எங்களூர் முத்திரையானதினால் மிகுந்த சந்தோசத்துடன் உறையைக் கிழித்து வாசிக்கத் தொடங்கினேன்.

அமிர்தவிலாஸ,
5—8—30.

ஜகதீசன் திருவருளால் சுகத்துடன் இருக்கும் என் அன்பின் திரளான, ஆசையின் உருவான, ஒரே பேரான, அருமைக் குமாரத்தி அமிர்தவல்லி அறிய எழுதிக் கொள்வது, இவ்விடம் நானும் உனது தகப்பனாரும் நல்ல சுகமே இருக்கிறோம். உவ்விடம் நீயும் உன் பிராணபதியும் சுகமே போய்ச்சேர்ந்து சந்தோசமாய் இருக்க எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். நீ கப்பலில் ஏறிப்போகும்போதும் கண் கலங்கினதாகக் கேள்வியுற்று நானும் மிக வருந்தினேன். என்னருமைக் கிளியே நாங்கள்தான் உன்னை விட்டுப் பிரிய மனம் வருந்தினோம், நீ மனம் வருந்துவதைப் பார்ப்பதும் கேட்பதும்தான் எங்களால் சகிக்கக்கூடியதா யில்லை.

பெண்களின்பாடு எங்கும் இப்படித்தானே கொஞ்சநாட்களுக்குத்தான் பெற்றோரின் பிள்ளைகள், மிகுதி நாட்களெல்லாம் இன்னொருவரின் பத்தினியாய் இருக்க வேண்டியவர்களல்லவா? இவ்வளவு பற்றுள்ள பிள்ளையைப் பெற நாங்கள் முன் ஜென்மத்தில் என்ன தவம் செய்தோமோ. என்ன இருந்தாலும் என் இரத்தினமே இனி நீ உன் பத்தாவுக்குரியவள். எங்களையே நினைத்து நீ ஏங்க வருந்துவது ஒரு வேளை அவருக்கு வெறுப்பாக இருக்கலாம். இனி நீ அவர் விருப்பத்திற்கும் அவர் சந்தோசத்திற்கும் நடக்கவேண்டியவள். ஆதலால் எங்களைப்பற்றி விசனிப்பதை மறந்துவிடு. ஆனாலும் நாங்கள் உன்னையே தஞ்சமென்று உன் எழுத்தைப் பார்த்தாவது ஆறியிருக்க எண்ணியிருப்பவரானதினால், எங்களுக்கும் கிழமைக்கொரு கடிதம்போட மறந்து விடாதே. தப்பிதம் ஒன்றும் இல்லாமல் கெட்டிக்தனமாக உன் குடும்பத்தை நடத்திக்கொள்

தப்பிதம் நீ செய்தாயானால்
தாரணியிலுள்ளவர்கள்
அப்பன் குணமென்றுன்
ஐயாவை நிந்தை சொல்வார்
உன் மீதிலொரு குற்றம்
உண்டானால் என் மகளே
என் மீதிலேற்றி இவள்
தாயின் குணமென்பார்
பிள்ளை செய்த குற்றம்
பெற்றோர்க்கு நிந்தையம்மா
எள்ளளவும் நிந்தை
எங்களுக் குண்டாகாமல்
ஊரார்க்கும் நாட்டார்க்கும்
உற்ற முறையார்க்கும்
யாரார்க்கும் நல்ல பிள்ளையாய்
நடக்க வேண்டுமம்மா
வீட்டுப் பொருளைதையும் நீ
வீணில அழியாதே
கேட்டவருக் கெல்லாம் நீ
கேட்டபடி ஈயாதே
கூனர் குருடர் பல
குறைவுள்ள பேர்கள்தமை
ஈனமுள்ளார் என்று
இகழ்ந்து நீ தள்ளாதே
ஏழைகளைக் கண்டால்
இரங்கி நீ பிச்சையிடு
பசித்தவருக்கன்ன மிடு
பாவை இளங்குயிலே
வஞ்சர மில்லாதவருக்கு
மனங்குளிரத் தானமிடு

பிச்சை யென்று வருகிறவர்களுக்கு இல்லையென்னுமல் பிச்சைபோடு. ஆனால் குறி சொல்லுவோம் சாஸ்திரம் சொல்லுவோம் என்று வருகிறவர்களை நம்பாதே.

வேலைக்காரரை அணுவும்
வெஞ்சினமாய் பேசாதே
சோலைக் கிளியே அவர் முன்
துர் நகையும் கொள்ளாதே
பாரிய புத்திகளும்
பலரும் மதிக்க நல்ல
காரியக்காரி என்று
கண்மணியே நீ நடப்பாய்
வாசல்களும் திண்ணைகளும்
மற்று முற்றம் வீதிகளும்
ஆசனமும் சுத்தமுற
அணுதினமும் காப்பாற்று
பாத்திரங்கள் எல்லாம் நீ
பா ணைய தேன் மொழியே
நேத்திரங்கள் தோன்ற
நித்தம் விளக்குளிப்பாய்

வெங்கலப் பாத்திரங்கள்தானே உவ்விடமும் பாவிப்பீர்களென நினைக்கிறேன். அந்தப் பாத்திரங்களில் அழுக்கேறினால் மிகவும் அசிங்கமாயிருக்கும். ஆனால் நிதமும் விளக்கிப் பாவித்தால் அதற்கு நிகரானது ஒன்றுமில்லை. பசியோடு ஆவலாகச் சாப்பிட வரும் உன் நாதர் எல்லாம் புனிதமாக இருந்தால் எவ்வளவு மனத் திருப்தியுடன் சாப்பிடுவார். புனிதமாயிருப்பதில் நீ கை தேர்ந்தவளானதினால் உனக்கு அதிகம் சொல்ல வேண்டியதில்லை.

கண்போலும கண்ணினிய
கரிய விழிபோலும்

பண்போனும் இன்மொழியே
உன் பத்தாவைக் கப்பாற்று
சணவருடன் எதிர்த்து
கண்டபடி சொல்லாதே
மணவாளர்க் கிவ்வுலக
மன்னவரும் தான்நிகரோ
மாலையிட்ட நற் கணவர்
மனதிலொரு கோபம் வந்தால்
பாலையொத்த சந்திரமுகப்
பாவையே நீ சகிப்பாய்
கலியாணம் செய்த நல்ல
கணவன் ஒரு சூரியனும்
நலமான பத்தினியாம்
நங்கை ஒரு சந்திரனும்
மன்னவர் ஓரரசும்
மனவி ஒரு மந்திரியும்
என்னும்படி யோக்கியமாய்
இசைந்துநட என் மகளே,
தேன் மொழியே மற்றவர்கள்
சினந்து விசன்முற
நான் பெரியர்ள் என்று
நகைக்க நடவாதே
குஞ்சி யழகும் கொடுந்தாணைக்
கோட்ட ழகும்
மஞ்சளழகும் அழகல்ல
மா மயிலே
நல்லவ ளென்று
நாவல்லோர் தாம் புகழும்
கல்வி யழகே
கனவழகாம் கண்மணியே
வாசிப்பும் ஆராய்வும்
மனத் தியானத்துடனே
யோசிப்புமே நமக்கு
யோக்கியமென் பாக்கியமே

நீயோ நன்றாகக் கற்றவள். தற்காலம் கற்றவள் என்றதும், ஆங்கிலப் படிப்பையே கருதுகிறார்கள். ஆனால் நீயோ ஆங்கிலம் மட்டுமன்றித் தமிழிலும் நன்றாகக் கற்றவளானதினால் வேறு எண்ணங்களில் சிந்தனையைச் செலுத்தாமல், வீட்டு வேலைகள் முடிந்து சும்மா இருக்கும்போது நம் ஆன்றோர் எழுதியுள்ள அருநூல்களை வாசிப்பதில் உன் நேரத்தைச் செலவிடு.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக.

என்று நாம் வாசித்ததை மனசில் பதித்து அதன்படி ஒழுகி வருகிறபடி படித்ததனால் பயன். வீட்டிலெத்தனை வேலைக்காரரிருந்தாலும் நீயும் வேலையிற் பங்கெடுத்துக் கவனித்து வருவாயானால் அவர்களும் சிரத்தையுடன் செய்வார்கள். இல்லையேல் வேலையாட்கள் எல்லாம் அழித்து வைத்துவிட்டுப் போய்விடுவார்கள்.

சோம்பலின் அப்பமது
சுந்தரியே பெண்களைப்பின்
தேம்பி அழச் செய்யும்
சிலநாளில் வாழ்வழியும்
வீடு மிக நிறைய
வெகு பொருளுண்டாயிருந்தும்
பேடை மயிலே நீபின்
சோம்பி நில்லாதே
வஞ்சிரங்கள் இல்லை எந்தன்
மனதுக்கிசைய இந்த
அஸ்த கடகமது
அழகு கொடுக்கவில்லை
நகையில்லை ஆஸ்தி யில்லை
நான் நினைத்தபடி நடக்க
வகையில் லென்னுமந்த
மங்கைகள்போல் சொல்லாதே
தக்க குணமுடைய
சற்புருஷ னுண்டானால்
எக்குறையுமுண்டாமோ
இனிய கிளிமொழியே
பெண்ணே குணமுடைய
புருஷனுண்டா மாகில்
என்றே குறைவு வரும்
எடுத்ததெல்லாம் லாகூடும்
அன்புடைய நற்புருஷன்
ஆனால் அவரோடல்
வன்பெரிய பொன் குடையும்
மாளிகையும் ஆகாரோ
சற்குணநல் நாயகனைச்
சார்ந்த பெண்கள் பாக்கியத்தை
கற்கண்டே நான் உரைக்கக்
கரையுண்டோ இப்புவியில்
நல்ல மாப்பிள்ளை கண்டாய்
நமது குலதெய்வம்
சொல்ல உன் பங்காச்சு
சுவாமியை நீ தோத்தரிப்பாய்.

நீயும் நாங்களும் செய்துகொண்ட பூசா பலத்தினால் தேடக்கிடையாத குணவாளனை மணவாளனாக அடைப்பப் பெற்றாய். அவரே எங்கள் துக்கமெல்லாம் மறக்கப்பண்ணி உன்னை ஆதரிப்பாரென்ற தென்புடனிருக்கிறோம். கிழமைக்கொரு கடிதம் மறவாது எழுதுவாய் என்று வழிபார்த்து அதையே தஞ்சமென்று நம்பியிருக்கிறோம். எல்லாவற்றிலும் புத்தியுடன் நடந்து மேன்மையாய் வாழ்ந்திடுவாய் என் இரத்தினமே. உன் உடம்பையும் கவனமாய் பாதுகாத்துக் கொள்ளும்படி உனது தந்தையார் எழுதச் சொன்னார்.

தாலியிலும் மாலையிலும்
கனமதிய வேளையிலும்
வாலைக்கிளியே நீ
மா பரனைக் கைவணங்கு
எவரை மறந்தாலும்
இரவு பகலாதரிக்கும்
அவரை மறவாதே
அவரே உன் தஞ்சமல்லால்

உந்த அன்னிய நாட்டில் உங்களுக்கு வேறு யார் துணை. அவரே துணை நின்று உதவிபுரிய வேண்டுமாய் இரவு பகல் அவரடி தொழுது வருகிறேன்.

ஆசீர்வாதம்.

இங்ஙனம்,

தாயார், தங்கம்மாள்.

அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் இந்த மாபெருங் கடிதத்தை புத்தி புதைந்துள்ள பாரதக் கடிதத்தை, என் அம்மாவின் அற்புதக் கடிதத்தை மிகுந்த ஆவலுடன் வாசித்து முடித்தேன். இவ்வளவையும் எப்படித்தான் பாடம்பண்ணி வைத்திருந்தார்களோ என்று மிகுந்த ஆச்சரியப் பட்டேன். இவைதான் நான் வெளிக்கிடும்போது சொல்லியிருக்க வேண்டும். மறுமுறையும் வாசித்தேன். என் தாயாரின் படிப்பையும் விவேகத்தையும் வியந்தேன். உடனேயே மறு மொழியும் எழுதி அனுப்பிவிட்டேன். இந்தக் கடிதத்தை நிதமும் வாசித்து இயன்றளவு நடந்து வருகிறேன். ஆனால் சமையல் பாகம் தெரியாததினால் நான் பட்ட கஷ்டமும் என் அனுபவமும் இன்னொரு முறை எழுதுவேன். இப்போ எனது தாயாரின் நீண்ட கடிதத்தை வாசித்து அலுத்திருப்பீர்களானதினால் இன்னும் கஷ்டம் கொடுக்க விரும்பவில்லை.

அமிர்தவல்லி.

மனைவியின் யுக்தியினால் கணவனுக்கு நேரிட்ட ஆபத்து நீங்கியது.

ஓர் சிறு கதை.

அளகாபுரி என்னும் பட்டிணத்தில் நளகேசரி யென்னும் ஓர் அரசன் இருந்தான். அவனுக்குக் கலாபூஷணி என்னும் ஓர் மனைவி யிருந்தாள்.

அவள் மகா விவேகசாலியாகவும், தன் கணவனுக்கு அப்போதைக்கப்போது தகுந்த யோசனை சொல்ல வல்லவளாயுமிருந்தாள்.

இப்படி யிருக்கும் காளில், அப்பட்டணத்திலிருந்து வேறோர் பட்டணத்திற்குப் போகும் வழியில் இருந்த ஓர் பெரிய ஆலமரத்தில் ஒரு வேதாளம் (அதாவது ஒரு வகைப் பேய்) வசித்துக் கொண்டு, பிரயாணிகளுக்கு அடிக்கடி தன்பங்களைச் செய்து கொண்டே வந்தது. அதன்பேரில் அந்நாட்டு ஜனங்களெல்லாங்கூடி, இதைப்பற்றித் தங்கள் அரசனிடத்தில் வந்து ஓர் நாள் முறையிட்டுக் கொண்டார்கள்.

இதைக்கேட்ட அரசன் தன்னுடைய தளகர்த்தனை யழைப்பித்து, "நீ போய் அந்த வேதாளத்தைப் பிடித்துத் தண்டித்து, அந்த வழியில் இருக்காமல் சனங்கள் வரத்துப் போக்கில்லாத வேறோரிடத்திற்கு ஓட்டிவிட்டு வந்துவிடு" என்று சொல்லியனுப்பினான்.

அப்படியே அந்தத் தளகர்த்தனும் அரசனுடைய ஆக்கினையின்படி ஆல மரம் நிற்குமிடம் சென்று, அதிலிருந்த வேதாளத்திற்கு அரசனுடைய கட்டளையை அறியும்படி சொன்னான்.

இதைக்கேட்ட வேதாளமானது, அவனைப் பார்த்து நகைத்து, போ போ, பயித்தியக்காரா! உங்கள் அரசனுக்கும் புத்தி யில்லை. உனக்கும் புத்தியில்லை. நான் அந்த அரசனுடைய ஆக்கினைக்கு உட்பட்டவனென்று அவன் நினைத்துக் கொண்டிருக்கிறது வீண் எண்ணம். என்னைப் பிடிப்பதற்கு உன்னாலுமாகாது; உங்களுடைய அரசனாலுமாகாதென்று அவனுக்குப் போய்ச் சொல்! என்று சொல்லிவிட்டு, அந்தத் தளகர்த்தனுடன் கூட வந்திருந்த யானை, குதிரை, காலாள் முதலிய சேனைகள் இருந்த இடத்தின்பேரில் பெரிய மலையைத் தூக்கிக் கொண்டுவந்து அவ்விடத்திற் போட்டு, அவைகளையெல்லாங் கொன்று விட்டது.

இதைப் பார்த்த தளகர்த்தன் பயந்து, ஓ, ஓ! இது ஏது விபரீதமாயிருக்கிறதே, "கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது" போல் ஆயிற்றே, இன்னுஞ் சற்றுநேரம் இதனுடன் பேசிக்கொண்டு

நிற்பேனேயானால் இது என்னையுந் தன் வாயில் போட்டுவிடும் போலிருக்கிறது. ஆகையால், நாம் தப்பிக் கொண்டு ஓடிப்போவது நல்லது, என்று ஒரே ஓட்டமாய் ஓடிப்போய், அரசனிடத்தில் நடந்த சேதிகளைச் சொன்னான்.

இதைக்கேட்ட அரசன் அதிக கோபங் கொண்டு, தன்னுடைய சேனைகளை எல்லாம் ஆயத்தப்படுத்திக் கொண்டுபோய், ஆலமரத்தைச் சுற்றி நிற்கவிட்டு அந்த வேதாளத்தைப் பிடித்துக் கொண்டான்.

இப்படியாக அரசன் கையில் அகப்பட்ட வேதாளம் அவனைப் பார்த்துச் சொல்கிறது:—"ஓ! நளகேசரி என்னும் அரசனே! என்னைப் பிடித்து விட்டதனால் நீ பெரிய மகா வீரனென்று நினைத்துக் கொள்ளவேண்டாம். இப்படி எத்தனைபேர் பேர்கள் என்னைப பிடித்து மற்றபடியும் பயத்தினால் விட்டிருக்கிறார்கள். அதில் நீயுமொருவனென்று நினைத்துக் கொள் என்று சொன்னது.'

இதைக்கேட்ட அரசன், "ஓ வேதாளமே! நீ சொல்வது எனக்கு நன்றாக விளங்கவில்லை. உன்னைப் பிடித்தவர்கள் மறுபடியும் ஏன் விட்டுவிட்டார்கள்? சொல் என" அதிக கோபத்துடன் கேட்டான்.

அதற்கு வேதாளம் சொல்கிறது:—"ஓ! அரசனே! நான் என்னேரமும் என் சக்திக்குத் தகுந்த காரியங்களைச் செய்துகொண்டே யிருக்க வேணும் இது என் இயற்கை. என்னைப் பிடிப்பார்கள் என்சக்திக்கேற்ற வேலையை ஓயாமல் இட்டுக் கொண்டே யிருக்க வேண்டும். அப்படிச் செய்வதற்குச் சற்றுத் தாமதிப்பார்களானால், என்னைப் பிடித்தவர்களையே நான் சாப்பிட்டு விடுவேன். அப்படி யெனக்குத் தக்க வேலையிடுவதற்கு உனக்கு வலிமை யிருந்தால் என்னைப் பிடித்துக் கொண்டு போகலாம். இல்லாவிட்டால், பேசாமல் என்னை விட்டுப்போட்டு நீ வந்த வழியைப பார்த்துச் செல்" என்றது.

இதைக் கேட்ட அரசன், இந்த வேதாளத்திற்குத் தகுந்த வேலை நம்முடைய இராச்சியத்தில் இல்லாமற் போய்விட்டதா? என்று நினைத்து, நல்லது அப்படியே என் சக்திக்கேற்ற வேலைகளை என் இராச்சியத்தில் காண்பிக்கிறேன் வா! என்று அதைப் பிடித்துக் கட்டிக் கொண்டு தன் நகரம் வந்து சேர்ந்தான்.

அந்த அளகாபுரி பட்டணம் வந்து சேர்ந்த வுடனே வேதாளம் "அரசனே! நீ எனக்கு என்ன வேலை காட்டுகிறாய் என்று கேட்டது.

அதற்கு அரசன், "இதென்ன! ஊர் வந்து சேர்ந்த உடனே வேலையிடச் சொல்கிறதே" என்று இதற்கு ஒரு பெரிய வேலையாய்க் கொடுத்துவிட்டோமானால், அடிக்கடி வந்து நம்மை வேலைகேட்க மாட்டாது என்று யோசித்து, ஓர் பழைய கோட்டையைப் பிரித்து வேறு இடத்திற் கட்டிவிட வேண்டுமென்று சொல்லிக் கட்டவேண்டிய இடத்தை அரசன் அதற்குக் காட்டினான்.

இவன் காட்டின சிறிது நேரத்திற்குள் இவனுடைய உத்தேசப்படி கோட்டையைக் கட்டி முடித்து விட்டு, வேதாளம் அரசனிடம் வந்து, "இராசாவே, நீர் காட்டிய வேலை செய்து முடிந்துவிட்டது. வேறு என்ன வேலை சொல்லப் போகிறீர்? உடனே சொல்லும்!" என்றது.

அதற்கு அரசன், இதென்ன! "சனியனை விலைக்கு வாங்கியது போல் ஆச்சுதே" என்று, மனதிலெண்ணிக் கொண்டு, இப்படிப்பட்ட அசாத்தியமான வேலைகளை யெல்லாம் அநேகமாய்ச் சொல்லியும், அவைகளை வேதாளமானது ஒரு நொடியிற் செய்து முடித்துவிட்டு, அரசனிடம் வேலை கேட்டுக் கொண்டே வந்தது.

வேலை சொல்வதற்கு அரசன் கொஞ்சம் தாமதித்தால் "என்? இராசாவே! உம்மைப் பட்சிக்கட்டுமா? என்று கேட்கும்.

இப்படியாக வேதாளத்திற்கு வேலை சொல்லிக் கொண்டிருப்பதே அரசனுக்கு வேலையாய் விட்டது.

"ஓ! ஓ! இந்த வேதாளத்திற்கு ஓயாமல் வேலை சொல்ல யாரால் முடியும்? எப்படியும் நாம் இதற்குப் பட்சணமாய் விடுவது நிச்சயந்தான்" என்று மனதில் தீர்மானித்துக் கொண்டான்.

இந்த ஆச்சரியத்தைக் கேட்ட கலைபூஷணி என்னும் அவ்வரசனின் மனைவி, உடனே விரைந்தோடி வந்து, வேதாளத்துக்கு வேலையிட்டு அரசன் மூர்ச்சையா யிருப்பதைக் கண்டு அரசனுக்குத் தைரியஞ் சொல்லி, "ஓ! பிராணநாதா! நீர் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். வேதாளம் வேலை கேட்டவுடன், என் மனைவியை வேலை கேள் என்று சொல்லிவிடும். அது 'பின்னும் நல்லதாயிற்று' என்று என்னிடத்தில் வரும். நான் பேசிக் கொள்கிறேன்" என்றாள்.

வேதாளம் மறுதடவை வேலை கேட்க வந்த போது, அரசன் அப்படியே சொல்லி விட்டான்.

அந்தப்பிரகாரம் அவ்வேதாளம் கலைபூஷணியிடம் வந்து, "அம்மணீ! நான் செய்யத்தக்க வேலை யாது?" என்று கேட்டது.

கலைபூஷணி உடனே தன் கூந்தலை யவிழ்த்து, அதில் ஒரு தலை மயிரை யறுத்து அதன் கையிற் கொடுத்து, "ஓ! வேதாளமே! இதை நாறுபோல் பிளந்து. ஒன்றின்மேல் ஒன்று கீழே சாயாமல் நேராய் நிற்க வைத்து, அதன் உச்சியில் நீ அசை

பாபல் உட்கார்ந்து காட்டிவிட்டு, பின்பு வேறே வேலைகட்கு உத்தரவு கேள்" என்றாள்.

வேதாளம் அதை வாங்கிக் கையில் வைத்துக் கொண்டு நாலு பாகமாய்ப் பிளந்தது; அதற்கு மேல் பிளப்பது அதற்கு அசாத்தியமாக முடிந்தினால், ஐயோ! இதை நாலாய்ப் பிளப்பதற்கே அசாத்தியமாய் விட்டதே, இதை எப்படி நூறாய்ப் பிளப்பது? சமுத்திரங்களெல்லாம் தாண்டி விட்டு, ஓர் சிறு வாய்க்காலில் வந்து அகப்பட்டுக் கொண்டோமே." என்று வேதாளம் விசனப்பட்டுக் கொண்டு கலாவதியிடம் வந்து நின்றது.

அவளும் அதைப் பார்த்து, "நான் உனக்காக அநேக வேலைகளை ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறேன். முன்னே கொடுத்த வேலை என்னவாயிற்று?" என்று கேட்டாள்.

அதற்கு வேதாளம் இராஜனுடைய மனைவியைப் பார்த்துச் சொல்லுகிறது:—"அம்மணீ! நானிதுவரையில் எத்தனையோ இராசாக்களை ஏமாற்றிக் காலம் தள்ளிக் கொண்டு வந்தேன். இன்றைக்கு உன் கையில் அகப்பட்டுக் கொண்டேன். நீ கொடுத்த வேலை என்னால் செய்யச் சாத்தியமானதாயிருக்கவில்லை." என்று அவளின் காலில் விழுந்து கும்பிட்டு "இனி, தாயே! உனக்கு அடிமை நான், நீ யிட்ட வேலைகளை நான் செய்து கொண்டிருக்கிறேன். நான் வலிய இனி வேலை கேட்கிறதேயில்லை. எனக்கு இதோடே புத்தி வந்தது" என்று சொல்லித் தன்னையே நொந்தது.

பின்பு, அரசன் இவைகளையெல்லாங் கண்டு தன் மனைவியின் விவேகத்திற்காகவும், தந்திரத்திற்காகவும், அதிக சந்தோஷப்பட்டு, இப்போது தான் நம்முடைய உயிர் அபாயத்திலிருந்து தப்பிக் கொண்டது, என்று சந்தோஷமடைந்து, அச்சந்தோஷத்திற்கு அறிகுறியாய்த் தன் ஊர் எங்கும் ஓர் விருந்து செய்யும்படி உத்தரவு கொடுத்தான்.

இவ்விதமாகவல்லவோ நாம், நமது கணவர்களுக்கு இடையூறு வந்தகாலத்து நாம் அவர்களைக் காப்பாற்றுவதற்கேதுவான வகை தேடவேண்டும்.

சுசி.

:--: கிரஹலக்ஷ்மி :--:

ஸ்ரீ வித்யா.

இவ்வுலகிலுள்ள ஒவ்வொருவரும் கல்வி கற்பது அவசியம். கல்வி வாசனை அறியாத மனிதன் விலங்குகளுக்கு சமமென்று கருதப்படுகிறான். கல்வி புருஷர்களுக்கு எவ்வளவு அவசியமானதாகக் கருதப்படுகிறதோ, அதேபோல் பெண்பாலருக்கும் கல்வி அவசியமானது.

ஒரு கல்விமானுக்கு ஓர் கல்வி கற்காத மூடப் பெண் மனைவியாக வாய்ந்தால், ஒரு வண்டிக்கு ஒரு எருமைக் கடாவையும், மற்றும் ஒரு குதிரையையும் சேர்த்து ஜதையாகப் பூட்டி ஓட்டினால் அந்த வண்டி எவ்வளவு நன்றாக ஓடுமோ, அதுபோலவே அவர்கள் குடும்ப காரியங்களும் நடைபெறும். ஒரு தேசத்து அரசனுக்கு செங்கோல் புரிவதற்கு அவனுடைய அமைச்சன் எவ்வாறு உதவியாளாக விருக்கிறானே, அவ்வாறே குடும்பமென்னும் ராஜ்யத்தை செங்கோல் புரிவதற்கு, அதின் அரசனான மனிதனுக்கு, அவனது மனைவியே அமைச்சனுக் கொப்பாக, உதவியாளாக விருக்கிறாள். ராஜ்யத்தின் அமைச்சன் புத்திமானாக வில்லாவிடில் அவ்விராஜ்யத்தின் காரியங்களனைத்தும் கெட்டழிந்து விடுவதன்றி, ராஜ்யத்திற்கும் கெட்ட பெயர் வர நேரிடும். இவ்விதமே கிரகலக்ஷ்மியானவள் புத்திசாலியாகவும், கல்விக் களஞ்சியமாயும், இராவிடில் அக்குடும்பத்திற்கும் மேற் சொன்னபடி கஷ்ட நிசை ஏற்படும். ஆகையால், பெண்கள் கல்வி கற்பது மிகவும் அவசியமென்று ஏற்படுகிறதல்லவா?

நம்மவரில் சிலர் இவ்வாறு கூறுவதை நாம் பல தடவைகள் கேட்டிருக்கிறோம். "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பென்ன படிப்பு? படித்துக் கிழித்து இவர்கள் உத்தியோகமா செய்யப் போகிறார்கள்? எவ்வளவு படித்தாலும் கடைசியில் இந்தப் பெட்டைக் குட்டிகள் ஒரே வேலை தான் செய்கிறதுகள். கலியாணத்தைப் பண்ணிக்கொண்டு குடும்பத்தைக் கவனிப்பதும், குழந்தைகளை பெற்று வளர்ப்பதையும் விட்டு, வேறு என்ன சாதிக்கப் போகிறார்கள்! இந்த மஹாகாரியத்திற்காக பணத்தைச் சிலவழித்து வீணாக சிரமப்பட்டு இவர்களை என்னத்திற்குப் படிக்கவைக்கவேண்டும்?" என்று பெண் கல்வியை இகழ்ந்து சில அஞ்ஞானிகள் கூறுவதைக் கேட்க என் மனம் பதறுகிறது. இவர்கள் நினைப்பதுபோல் கிரஹலக்ஷ்மியானவள் தன் கிரஹ காரியங்களை ஒழுங்காகச் செய்வதும், குழந்தைகளை ஆரோக்கியவந்தர்களாக வளர்த்து அவர்களை முன்னுக்கு கொண்டு வருவதும் எவ்வளவு கஷ்டமான காரிய

மென்பதை உணர்ந்தாரில்லை. ஓர் கிரஹ லக்ஷ்மி யானவள் எவ்வளவு கஷ்ட நஷ்டங்களை சகித்துக் கொண்டு, குடும்பமென்ற சமுத்திரத்தில் எவ்வ ளவு சுழிகள், அலைகள், மடுவுகள் முதலியவை களான கண்டங்களைக் கடந்து தப்பித்துக் கொ ண்டு நீந்துகிறளென்பதை கிரஹலக்ஷ்மியாக விருக்கும் பெண்களே அறிவார்களன்றி, மற்றவர் எவ்விதம் அறியக்கூடும்? கல்வியானது இவளுக்கு குடும்ப காரியமென்ற சமுத்திரத்தில் கிடைக்கும் 'மிதக்கும் கட்டைக்கு' சமானமானதாகும். எவ் விதம் சமுத்திரத்தில் தவிக்கும் மனிதனுக்கு ஓர் மிதக்கும் சட்டை பேருதவி செய்கிறதோ, அவ் விதமே கல்வியும் கிரஹலக்ஷ்மிக்கு உதவியாகி றது. பெற்றோர்களே! ஆகையால் பின்னுக்கு கிரஹலக்ஷ்மியாக விளங்கப்போகும் பெண் குழந் தைகளை நன்றாகப் படிக்க வைத்து கை தேர்ந்த கிரஹலக்ஷ்மிகளாக தயாரிப்பீர்களாக.

உலகில் வீரனென்றும் தீரனென்றும் கல்விமா னென்றும் பெயரெடுத்து போற்றப்படும் மனித னிலிருந்து அதி மூட மதியாக விருக்கும் மனி தன் வரையில் ஒவ்வொரு மனிதனும் முதன்முதல் தனது குழந்தைப்பருவத்தில் அவனது தாயாரால் திருத்தப்பட்டு படிப்படியாய் பள்ளிக்கூடம், கலா சாலைகள் முதலியவைகளில் கல்வி பயின்று முன் னுக்கு வருகிறான். ஆகையால் மனிதனின் பழ க்கவழக்க குணங்கள் முதன்முதல் அவனது தாயாரால்தான் திருத்தப்படுகிறதென்பது வெ ட்ட வெளியாகிறதல்லவா? ஓர் குழந்தை முன் னுக்கு புத்திசாலியானவனாகவும், மற்றும் கல்விமா னான மனிதனாகவும், விளங்க வேண்டுமென்றால் அவனது முதன்முதல் உபாத்தியாயராகப்பட்டவ ளான தாயார் இந்த நற்குணங்களால் அமைக்கப் பட்டு வித்தியாவதியாக விளங்கவேண்டுமல்லவா?

தந்தையானவன் எப்படிப்பட்ட கல்விமானை யுங்கூட அவனுக்கேற்றபடி தாயாரும் கல்வி பயி ன்றவளாக இல்லாவிடில், குழந்தை முன்னுக்கு வருவது கஷ்டமே. ஏன் என்றால் குழந்தையா னது குழந்தைப் பருவத்தில் தாயின் அருகிலே யே விருக்கிறது. தந்தையானவனோ சம்பர்த்திப் பதற்காக நாளில் முக்கால் பங்கு சமையத்தை விட்டு வெளியிற் சென்று வேலை செய்வதில் கழி க்கிறான். சாப்பிடுவது, தூங்குவது, குளிப்பது முதலான வேலைகள் செய்யும் நேரம் மட்டுந்தான் அவன் வீட்டிலிருக்க முடிகிறது. அவன் இந்த சொற்ப சமயத்தில் குழந்தைக்கு எந்த மட்டிலும் புத்தி கற்பிக்க முடியும்? வாசகர்களே! நீங்களே யூகித்துப் பாருங்கள்! ஆகையால் குழந்தையா னது நல்லதோ கெட்டதோ எந்தப் பழக்க வழக் கத்தையும் தாயாரினிடத்திலிருந்தே கற்றுக் கொ ள்ளுகிறது. தாயாரும் தன் குழந்தையின் பிரா யத்துக்கேற்றவாறு கர்த்தாவாக விளங்குகிறாள்.

குழந்தைகள் இளஞ் செடிகளுக்குச் சமானம். "விளையுட் பயிர் முளையிற் தெரியும்" என்னும் பழ மொழிப்போல், குழந்தைகளை நாம் இளம்பிரா யத்திலேயே நல்ல வழிக்குக் கொண்டு வரவேண் டும். அதுவுமன்றி, செடியை வளைப்பது சுலபம். ஆனால் மரத்தை வளைப்பது அசாத்தியம். ஆகை யால குழந்தைகளை சிறு வயதிலிருந்தே சற்குண சந்தர்களாகவும், சற்சீலராகவும், கல்விப்பிரியர் களாகவும் தாயார் செய்யவேண்டும். பெரியர் களான பின்பு, அவர்கள் துன்மார்க்கர்களாகவோ, துஷ்டர்களாகவோ விளங்கினால் அவர்களை சன் மார்க்கத்தில் திருப்ப முயற்சிப்பது வீண்தான்.

ஆகையால் தாயாரானவள், அசடு அற்று புத்தி சாலியாக விருப்பாளேயானால், அவளது முயற் சியால் குழந்தை புத்திசாலியாக விளங்குவான்.

இதற்கு நம் புராண இதிகாசங்களில் கூட பல உதாரணங்கள் கிடைக்கின்றன. லட்சுமணன் தன் தாயாரான சுமித்திரா தேவியிடம் சென்று ராம ருடன் தானும் கூடப்போகிறேனென்று சொல்ல, சுமித்திரா தேவியானவள் "என் சக்களத்திப் பிள்ளை எப்படியாவது போகட்டும், நீ என்னுடன் இவ்விடமே சௌக்கியமாக இரு" என்று சொல் லாமல், "சீதையே நானென்றும் ராமனே உனது தந்தை யென்றும், கானகமே அயோத்தி என் றும் நினைத்துக் கொண்டு போய்வா" என்று அன்பு மொழிகள் மொழிந்து அனுப்பினாள். அவள் கல்வி கற்காவிடில் அப்படிப்பட்ட நல்ல புத்திமதியைத் தன் மகனுக்குக் கூறிச் சந்தோஷ மாக அவனை அனுப்ப அவளுக்குத் தெரிந்திருக் குமா? இதைப்போலவே சீதை, சாவித்திரி, அருந் ததி முதலிய அனேக பண்டைக்கால இந்து பெ ண்களின் உதாரணங்களை எடுத்துக் கொள்ளுங் கள். பெண்கள் நன்றாக கல்வி பயின்று குண வதிகளாக விளங்கினால், அவளே தன் குழந்தை களை நல்வழியில் பிரவேசிக்கச் செய்து, உலகத் துக்கு நன்மை செய்வாள். நம் தேசத்தில் பெண் கல்வி முன்னேறினாலொழிய நம் தேசம் சுதந்தரம் பெறுவதுங் கடினம். ஆகையால், தேசபக்தர்கள் அனைவரும் பெண் கல்வி முன் னேற்றத்தைக் கருதி முதன்முதல் தொண்டு புரி வது அவசியம். தமிழ் கல்வியே நம் பெண்களுக் கு முக்கியம் வேண்டும். பள்ளிக்கூட வசதிக் களற்றவர்கள் வீட்டிலேனும் தகுந்த உபாத்திமா சரை கொண்டு தங்கள் பிள்ளைகளுக்குப் பண் டைக்காலச் சரித்திரங்களையும் ஒரு பாடமாகச் சேர்த்துப் படிப்பித்து வந்தால் நம் பெண்கள் யா வரும் கிரஹலக்ஷ்மிகளாக விளங்கி வருவதற்குத் தடையேதும் உளதோ?

S. R. Vijalaxmi

கரைச்சி நீர்ப்பாய்ச்சற் - - - - - பகுதியிற் செய்யும் வேலைகள்.

இந்த விஷயத்தில் யான் தொடங்கிக் கொள்வதற்கு முன் இதன் தோற்றங் கொண்டு உழைத்து நின்ற வேலைகளனைத்தையும், இச்சங்கற்பத்தில் அறிதல் விரும்பத் தக்கதாகும். இவ் விருப்பம் என்னிடமெழுந்ததாயினும் உங்கள் பலரின் எண்ணங்கள் அனைத்தஞ் சேர்ந்து வாழக் கூடிய ஆற்றலை எடுத்துக் கொண்டது. உதாரணமாக, ஒரு விஷயத்தின் முன் பின் தோற்றம் எங்களனைவர் உள்ளத்திற் தோற்றினாலல்லவோ நிறைந்த ஆயுளைப் பெற்று வாழக் கூடும். அன்றே ஆயுளைத் தேய்த்துக் கொள்ளக் கூடும். விஷயங்கள் எதுவாகினுஞ் சரி மர்மமாக விருந்திடில் மகத்தான பலனை யெதிர்பார்த்தல் மிகக் கஷ்டம். திருத்திக் கொள்வதற்கு அறிவும் அனுபோகமும் புலப்படவாவது ஏற்படவாவது தருணங்கள் இருந்தும் பலனைப் பெற முடியாது மாய்ந்து போகும். இத்தகைய தவறுகளை நாம் விலக்கிக் கொண்டால் உலக மக்களின் பிரியமான நட்பையும் அனுதாபத்தையும் பெற்றுக்கொண்டு பொது வேலையிற் சித்தி அடையக் கூடும். பொது வேலைகளில் நாம் ஈடுபட எம்மை நாம் திருத்திக் கொள்ளும் பொழுது மேற்கூறிய உண்மையை விலக்கா தொழியின் நற்பலனை எதிர்பார்க்க முடியாது.

இற்றைக்குச் சற்றேறக்குறைய இருபதாண்டுகளுக்குமுன் வல்லரசுகள் யுத்தவெறி கொண்ட காலவெல்லையில் தேசங்களனைத்தும் நீர் வற்றிய தடாகத்து மச்சவினங்கள் போல் பாலர் தொடங்கி வயோதிபரீறாகப் பஞ்சமென்னும் பாவிக்கடிமைப்பட்டலோலிடல் வதங்கித் திக்குமுக்காடி உயிர் விட்டும் என்புடல் சுமந்து நோய்க்கிரையாகி அங்கலாய்த்துக் கொண்டு விண்ணை யிழித்தனர். என்னே பஞ்சத்தின் வலிமை. பஞ்சம் பாரைத்தான் விட்டது. கொடிது, கொடிது பஞ்சம். அதனிலுங் கொடிது இளமையிற் பஞ்சமென்று கூறும் மூதுரை பொய்யாவகை உண்மைப்படுத்திய பெருமை போர்க் கோலங் கொண்டு நின்ற மன்னர்க்கன்றி வேறு யாருக்குளது. அன்று குடியோம்பிய தொல்லை மன்னர்களின் கொடை முரசு நாடெங்கும் மலிய பஞ்சமெனும் பாவி மாய்ந்து மடிந்து போயினன். இன்று குடியோம்பும் மன்னர்களின் சூட்சி முரசு காட்டிற் புகுந்து பஞ்சமெனும் தொனிகளை உறுமிப் பல்லாயிரக் கணக்கான மக்களை வாயிற் போட்டுக் கொண்டது. "என்னன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம், உய்வில்லை இன்னன்றி கொன்ற மகற்கு" எனும் புதிய வேதத்தை நாம் ஏக காலத்தில் அறிந்து கொண்டோம். இதைவிட நமக்கு வேறு மூல பாடம் வேண்டியதில்லை. பஞ்சங் காட்டும் தெய்வத்துடன் கும்பிடு போட்டுக் கொண்டு வரங் கிடந்த காலமெல்லாம் மலை ஏறிக் கொண்டது. அறிஞர்களுள்ளத்தோர் புது ஊக்கந் தலைகாட்டிற்று. நம் நாடு பிறநாட்டிடம் இரந்தேன் உணவை முற்றுக எதிர் பார்க்க வேண்டும். நம் நாட்டிற்கு நாமே உணவளிக்கும் பொறுப்பை ஏன் ஏற்கக் கூடாதென்பதைபோன்ற ஊக்கம். இது முதிர்ந்ததும் இதற்குவேண்டிய தொழிலை நடத்த ஒரு சங்கம் தோன்றிற்று. சங்கம் தோன்றிய நோக்கம் எதுவோ அதற்குப் போர் ஒழுங்கு அமைத்துக் கொள்ள வேண்டியதால் கூட்டு முதல் சமுதாய சங்கமெனும் பெயரைச் சுமந்து கொண்டது இச்சங்கமதன் பேருக்கமைய உணவுப் பொருளை விருத்தி செய்யவேண்டி நீர்ப்பாச்சற் தொழிலை யேற்றுத் தஷ்ட மிருகங்கள் மலிந்த பரந்தன் காட்டை அழித்துச் செந்நெல் விளையக் கூடிய களனியாக்கியது. காடளிந்து விளைநிலங் காணும் வேலையில் அநேகம் பணத்தைத் திரள் திரளாகக் கொட்டியது. கஷ்டத்துக்கும் பொருட் செலவுக்கும் தகுந்த வருமானத்தைப் பெற்றுக் கொள்ளக் காத்திருப்பது பூச்சியமாயிற்று. இந்த நிலையில் கூட்டு சமுதாய சங்கத்தார் என்ன செய்ய முடியும்? தம் வேலைகளையும் ஊக்கங்களையும் கட்டி ஒருடறம் வைத்தனர். பலனைக் கருதாது தொழிலைச் செய்து முடிக்கும் நியதி இருந்தும் பலனைக் கருதும் வேலைபோக தொடங்கி நின்றதால் வேலைகளை மீண்டும் தொடங்கிக் கொள்ளுதல் அசாத்தியமாயிற்று. எனினும் இத்தொழிலுக்கமைந்த இடம், பொருள், ஏவல் உணர்த்தையும் யோசிக்கின் மூலப் பெருமை இச்சங்கத்தைச் சார்ந்து நிற்றல் பெரிதும் பொருத்தமுடைத்தாகும். இச்சங்கத்திற் சேர்ந்து உழைத்தோர் ஊக்கங்களனைத்தும் உடன் பலனைக் கொடாத போதிலும் அடிப்படையான தொழிலைத் தொடங்கி தலைகொடுத்து ஊக்கப்படுத்திய பெருமை யென்றும் அழியாது நிலைத்து நிற்கப்புதிய முறைகளை மேற் கொண்டது. சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு நிலங்களைப்

பாகம் பாகமாகப் பிரித்துக் கொடுத்தது. தனித்துஞ் சேர்ந்தும் உணவை விளைவித்துக் கொள்வது சொர்க்கமன்றி வேறில்லை. 80,000 புஷல் நெல்லை வருஷந்தோறும் கொடுத்துக் கொண்டும் 750 ஏக்கர் விளை நிலத்தைப் பரந்தன் காடு பரந்தன் கழனியாக மாற்றி வைத்துக் கொண்டு மிருப்பதை மலாய்நாட்டு நண்பர்கள் நன்கு கண்ணுற்று மகிழ்வெய்தின போற்றுரை பல செப்பிச் சீர்பெறுதற் கழனியாகி நிற்கும் விந்தையை வியந்தனர். நாமேன் பல கூறி விபற்ற வேண்டும்? ஈண்டு பரந்தன் கழனி நாட்டுப் பொருள் அபிவிருத்தி சமுதாயமாக மாறி நன்கு உழைத்து வருவதைப் பார்த்துக் கேட்டும் மகிழக் கூடிய மக்கத்தான நிலைக்கு வந்தது. நம் நாடு பெற்ற பாக்கியமெனில் மிகையாகா. ஒருவன் நீரில் இறங்கிய மாத்திரத்தில் நீந்துவானென்ற அர்த்தமல்ல. நீந்துந் தொழிலில் சித்தி பெறக் கூடிய முறைகளை நீரில் மூழ்கியும் மிதந்தும் கற்றுக் கொள்ளுகிறான். அத்தன்மையன போல் எத்தொழில்களிலாயினுஞ் சரி, ஏற்படுங் கஷ்ட நஷ்டம் வெற்றியின்படிகளுக்கு பல புத்திகளைக் கற்றுக்கொள்ள வசதி கொடுக்கின்றன. ஆரம்பத்தில் தடித்து நின்ற கஷ்ட நஷ்டங்கள் இப்பொழுது நாட்டுப் பொருள் அபிவிருத்தி சமுதாயத்திற்குப் புதிய நன்முறைகளைக் கற்பித்தன.

தம்மிடத்திலுள்ள விளை நிலத்தைப் பங்குபங்காகப் பிரித்து விற்றுக் கொண்டது. அவ்வப்போது ஏற்படுஞ் செலவுபோக ஆதாயத்தோடு வளர்ந்து வருகிறது. விடாமுயற்சியும் ஊக்கமும் இட்ட முதலுக்கீடான ஆஸ்தியையும் வைத்திருக்கிறது. விளை நிலத்துக்குவேண்டிய முறைகள் தாராளமாகச் செய்யப்பட்டு வருதலால் நிலத்தின் விலை மதிப்புமுயர்ந்து வருகிறது. உண்மை உழைப்பாளிகள் மூனைந்து நின்று நாட்டு விமோசனத்திற்காக பரந்தன் காட்டுடன் போராடி இவ்வெற்றியைப் பெற்றார்கள். இன்னுந் திரளான பலனுக்காக வேலை செய்து கொண்டு விடாப்பிடியாக உழைத்து வருகிறார்கள். இவர்களுக்கு ஊக்கங் கொடுப்பதில் நாமுஞ் சேர்ந்துள்ளோமென்பதை மறந்துவிடக் கூடாது.

இந்த வேலைக்கு இடம் பொருள், ஏவல்களனைத்தும் பின்னமின்றிச் சேர்ந்தாலன்றி எவ்வகையான பலனையுங் காத்திருக்க முடியாது. பின் போட்டுச் செய்யக்கூடிய வேலைகளொன்றும் இக்கருமத்தில் வைத்துக் கொள்ள முடியாது. பண்படுத்துங் காலம் பண்படுத்தியும், விதைக்குங் காலம் விதைத்தும், நீர்விடுங்காலம் நீர்ப்பாய்ச்சியும், காக்குங்காலங் காத்தும், அறுக்குங்காலம் அறுத்தும் தானியமாக்குங்காலம் தானியமாக்கியுங் கொண்டாலன்றி நாட்டுப் பொருள் அபிவிருத்திச் சமூதாயம் உச்சநிலை அடைய முடியாது தத்தளித்துக் கொள்ளுமென்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். இவ்வேலைகளுக்கு வேண்டிய தொழில்களை நாம் எவ்வகையிலும் பின் போட்டுக் கூலி பெற்றுக் கொள்ளும்படி விடுதல் பொருந்தாது. கையிற் பணம் இருந்தாலன்றி வட்டிக்குப் பணம் எடுத்து வேலை செய்யும் வேடிக்கையும் உத்தமமன்று. பின் என் செய்யவேண்டும்? பங்காளர் பணத்தை காலந் தாழ்க்காது கொடுக்குந் தயவை ஏற்றுக் கொள்ள வேண்டும். நாமும் அவர்கள் கையைத்தான் எதிர் பார்க்கவேண்டும். சாலம் நம் கைப்பணத்தை எதிர் பார்த்து நிற்கப் போவதில்லை. கையிற் பண முடிப்பை வைத்துக் கொண்டு நாமே காலத்திற்குப் பொருந்த நிற்கவேண்டும்.

ஒப்படியான பொது வேலைகள் இயங்கும் போது ஒவ்வொருவரும் நம்மைச் சரிப்படுத்திக் கொண்டு எப்பொழுதும் வேலைக்கு உதவி கொடுக்க தயாராய் நிற்கவேண்டும். பலனை எதிர் பார்ப்பதும் குறைகூறுவதும் கடமைகளின் வளர்ச்சிக்குச் சாதகமாக விருக்காதென்பதை அனுபவமுடைய பெரியார்களிடமிருந்து கற்றுக்கொள்ளக்கூடும்.

காலத்திற்குக் காலம் இச்சமுதாயத்தின் முன்னேற்றத்தையும் பலனையும் வன்னிநாடு பண்டைக் காலத்தில் சிறப்போங்கி இலங்கையர்களுக்குவளித்ததுபோல் தற்காலம் எதிர் காலங்களிலும் இலங்கையர் தானியசாலையாக மாறுஞ் செய்திகளை நன்கு அறிவிப்போமாக.

சி. முத்துத்தம்பி.

குவாலலம்பூர்,
10-10-37.

: நவீன நாகரீகம் :

[முற்றொடர்]

அன்று ஞான மலரைப் பற்றிக் கொஞ்சம் சொல்லிவிட்டு நிறுத்திவிட்டேனல்லவா. அவளது உண்மைக் குணமறிய வேண்டுமானால் நேரில் அவளுடன் பேசிப்பார்த்தாலல்லாது நான் சொல்லி விளங்க வைப்பது சுலபமான காரியமல்ல. பாவம் அவள் புருஷன் மகா மானியும் மிகுந்த சாதுவுமானதினால், ஏதோ குடும்பம் ஒப்பேறி வருகிறது என்றுதான் சொல்லவேண்டும்.

பெண்களானாலும் சரி ஆண்களானாலும் சரி பஞ்சப்புலன்களினுணர்ச்சி ஒன்றுதான். சாதுக்களுக்கொழிய மற்றையோர்க்குக் கோபம் சிலசில சமயங்களிலாவது உண்டாகாமலிருக்குமா? ஆனால் ஒரு குடும்பத் தலைவனே, தலைவியோ என்னேரமும் சுடுமூஞ்சிகளாயிருந்தால் குடும்பம் விருத்தியடைவது எங்ஙனம்?

ஞான மலரின் புருடனுக்கு இப்போ சம்பளம் நூற்றிப்பத்து வெள்ளி. சரஸ்வதியின் புருடனுக்கு நானூற்றிநாற்பது வெள்ளி. அப்படியிருந்தும் ஞானமலர்தான் சரஸ்வதியிலிருந்து தாழ்ந்தவளாகவோ சமமானவளாகவோ காட்டச் சம்மதியாள். சரஸ்வதி தன் வீட்டவலைதானே செய்கிறாள். ஞானமலர் எல்லாவற்றிற்கும் வேலை ஆள் வைத்து செய்விக்கிறாள்.

அன்று ஒரு காட்டுச் சேலை வாங்கினாள், "என் வீணாக இப்படிக் காசைக் கொட்டுகிறாய்? ஐக்கிய சங்க சந்திகை நீ பார்க்கவில்லையா? அதிலெழுதியிருந்ததுபோல் ஒன்று உனக்குப் போதுமா? அல்லது இப்படியே ஒவ்வொரு முறையும் ஒவ்வொன்று வாங்க உன்னால்முடியுமா?" என்றேன். அதற்கு அவள் "உன்னிடம் ஒன்றும் இல்லாவிடில் மற்றவர்களையும் அப்படியே இருக்கச் சொல்லுகிறாயோ? உனக்கு வழியில்லாதபடியால் மற்றவர் கட்டுவது உனக்கு வயிற்றெரிச்சலாயிருக்கிறதோ?" என்று செருப்பாலடித்ததுபோல் பதில் சொல்லிவிட்டாள். பின்னொருநாள் சரஸ்வதி இதே கேள்வியைக் கேட்டபோது, "உனக்கென்ன நீ எத்தனை சேலைபெல்லாம் கட்டி அலுத்துவிட்டாய், இனி மற்றவர்க்குப்புத்தி சொல்ல வந்து விட்டாய். உன்னைப்போல் மற்றவர்களும் வந்துவிடப் போகிறார்களென்று உனக்கு வயிற்றெரிச்சலாயிருக்கிறதா?" என்றாளாம். எலும்பில்லாத நாக்கு இப்படிப்பட்டவர்க்கு எந்தப் பக்கத்திற்குத்தான் பிளாது.

ஆனால் இவளைப்படித்தான் சரஸ்வதியைப் போல் வருவது? ஐரோப்பாவில் புருடனது சம்பளத்தைப் பெண்களின் நகைகளிலிருந்து அறிந்துகொள்ளலாமாம். ஆனால் நம் நாட்டிலோ பெண்கள் தங்கள் வல்லமையால், யாவரும் சமமாய் இருந்துவிடலாமென எண்ணிப் பாவம் புருடரை வருத்துகிறார்கள். ஐயோ இப்படியான எண்ணமுள்ளவர்களின் பேதமை என்றுதான் விலகுமோ! நகையையும் துணியையும் அணிந்துகொண்டால் மட்டும் தான் சரஸ்வதியைப்போல் வந்துவிடலாமென எண்ணிக் கொண்டாள் பாவம். புருடன் சம்பளமோ 110 வெள்ளி. அதில் சாப்பாடு, வீட்டுவாடகை, வேலையாள் சம்பளம், பள்ளிக்கூடச் சம்சளம் இவ்வளவும் போக, ஊருக்கு அனுப்பவேண்டும், சேமநிதி கட்டவேண்டும், வருடாவருடம் புதுநகை பண்ணிப் போடவேண்டும், இதற்குள் காட்டுச் சேலை வேறு வேண்டும். இவ்வளவும் சரிவரச் செய்தும், மோட்டார் ஒன்று வாங்கவில்லை யென்றும் புருடனுடன் கோபிக்கிறாள், ஏனெனில் போன மாசம் சரஸ்வதியின் புருடன் ஒன்று வாங்கிவிட்டார்,

இவளின் அட்டகாசம் தாங்காமல் ஒரு நாளைக்கு இவள் புருடன் உன்னால்தானே நான இப்படிக் கடன்காரனாய் நிற்கிறேன் என்று வாயைத்திறந்தால் போதும். "நீயும் ஒரு ஆண்பிள்ளையா? அடுத்தவீட்டுக்காரரைப்பார், அயல்வீட்டுக்காரரைப் பார், முன்வீட்டுக்காரரைப்பார், பின்வீட்டுக்காரரைபபார், அவர்களெல்லாம்கடன் இல்லாமல் காலம்தள்ள வில்லையோ? இது நான் பிறந்தவேளை என்பாழும் விதி" என்று ஓலமிடத் தொடங்கிவிடுவாள். முதலில் நாங்கள் பயந்து விட்டோம். பின் அந்தக் கூக்குரல் எங்களுக்குப்பழக்க மாய்விட்டது. சந்தடி அடங்குமட்டும் நாங்கள் வெளியேதலை காட்டாமல் அறியாதவர்போல் இருந்து விடுவோம்.

ஞானமலருக்கு ஒரு சகோதரி உண்டு. ஐந்தெழுத்தும் பாவனையும் தமக்கையைப் போலவே தங்கையும். அவளுக்கு இன்னும் கலியாணம் ஆகவில்லை. ஆனாலும் சிறிதாவது கூச்ச நாச்ச மின்றி வெளியில் திரிந்து வருவாள். இன்னும் ஞானமலருக்கு மூத்தவரிருவர் கலியாணமாய் வேறு இடங்களில் வசிக்கிறார்கள். இப்பெண்ணுக்கு என்ன பெயரோ தெரியாது பேபி பேபியென்றே ஞான

மலர் அழைக்கிறாள். பேபி என்றால் ஆங்கிலத்தில் குழந்தையைக் குறிக்கும் சொல்லானதினால் இவளும் குழந்தையோ என்று எண்ணிவிடாதீர்கள். இவளுக்கு வயசு இருபத்தெட்டு நிரம்பிவிட்டதாம். இப்படி வபதானவர்களை பேபி என்று அழைப்பதும் நவநாகரீகத்தின் ஒரு அம்சம் போலும்! அல்லது அது ஒரு தமிழ்ப்பெயரோ என்பது எனக்குச் சந்தேகமாக விருக்கிறது!

இந்த பேபி தன் இஷ்டம்போல் வெளியேசென்று வருவாள். வெளியில் செல்ல வசதியில்லாத நேரத்தில், கண்ணைக்கவரும் நிறங்களில் மகா மெல்லிய ஆடை உடுத்தி மிகவும் அழகாகத் தன்னை அலங்கரித்து ரேட்டில் உலாவி வருவாள். வீட்டுக்கு வரும் சினேகிதர்களை வரவேற்பவளும் அவளே.

இப்படியாக எங்கள் பக்கத்தில் ஒரு யாழ்ப்பாணத்துப்பெண் கெட்டுப்போவது எங்களுக்கு மிகுந்த வருத்தமும், வெட்கமுமாய், இருந்ததினால் நானும் அமிர்தமும் ஒருநாள் துணிந்து ஞானமலரைக் கேட்டுவிடுவதெனத் தீர்மானித்தோம். ஒரு நாள் இரண்டுமணி போல் அவள் வீட்டுக்குப் போயிருந்தோம்.

பேபி ஒரு பள்ளிக்கூடத்தில் படிப்பித்துவருவதைச் சொல்ல மறந்துவிட்டேன். அவளுக்கு ஒரு மணிக்குப் பள்ளிக்கூடம் முடிந்துவிடும். நாம் ஞானமலருக்கு அவளின் சம்பளம் கொஞ்சமாவது உதவி வருகிறது இல்லாவிடில மிகுந்த கஷ்டமே. சம்பளத்தை அப்படியே கொண்டுவந்து தமக்கை கையில் கொடுத்து விடுவாளாம். நாங்கள் போயிருந்தபோது ஞானமலரும் பேபியுமாக வந்து உட்கார்ந்தார்கள். பேபி இருக்கும்போது எப்படிக்கேட்பது என்று பேசாமலிருந்து விட்டோம். ஆனால் ஞானமலர் ஏன் மாமி இன்று இவ்வளவு நேரத்துடன் இந்தப்பக்கம் வந்தீர்கள். ஏதோ அலுவல் இல்லாமல் நீங்கள் வெளிக்கிடமாட்டீர்களே, வந்த காரியம் என்ன சொல்லுங்கள் என்று ஒரேபிடியாகப் பிடித்துக்கொண்டாள்.

ஒன்றுமில்லை வீட்டில் அலுவலிருந்ததினால் இத்தனை நாளாய் வெளிக்கிடவில்லை. இன்று சற்று ஓய்வானதினால் உன்னைப் பார்த்துவிட்டுப் போகலாமென வந்தேன். நான் வருவதைப்பார்த்து அமிர்தமும் தானும் கனநாளாய் வரவில்லை என்று வந்தாள் என்றேன்.

ஞானமலர்: அப்படியா நல்லது. குழந்தைகள் எப்படிச் சுகம்தானே? பள்ளிக்கூடம் சோதனை எப்படி? சோதனை முடிந்து விட்டதா? அமிர்தத்துக்குத்தான் இப்படியான தொந்தரவுகள் கிடையாதே.

நான்: குழந்தைகளில்லாதவர்களுக்கு ஒரே அக்கம். ஆனால் குழந்தைகள் உள்ளவர்களுக்கு எத்தனை விதத் தொந்தரவுகள் உண்டு. பன்றி பல குட்டிகளைப் பயன்றது போல் நாமும் பெற்று விட்டால் போதுமென்று இருக்கலாமா? எல்லாவற்றிலும் முக்கியமாக நல்லொழுக்கமே நாம் பிள்ளைகளுக்கு முதலில் கற்பிக்கவேண்டும். "இழுக்குடைபாட்டின் இசை நன்று சால ஒழுக்கம் உயர் குலத்தினன்று" என்ற நீதிவாக்கியத்தின்படி ஒழுக்கமே விழுப்பந்தரும்

ஞானமலர்: ஓம் நீ சொல்வது உண்மையே. அப்படியானால் கலியாணமாகாத உனது சகோதரியை இப்படி வெளியில் திரிய விடுவது அழகா என்று முன்பின் யோசிக்காமல் கேட்டுவிட்டாள் அமிர்தம்.

ஞானமலர்: தற்காலத்தில் யாவரும் இப்படித்தானே திரிகிறார்கள். மாமிகூடத்தன பிள்ளைகளைத்தனியத்தானே பள்ளிக்கூடம் அனுப்பிவருகிறு. சரஸ்வதியின் சகோதரியும் தனியத்தானே போய்வருகிறாள். என்று வாயடித்துவிட்டாள்.

இவ்வுலகில் குற்றம் செய்பவர்களுக்குத் தங்கள் செய்வது குற்றம் என்று தெரியாமலல்ல, தெரிந்துதான் செய்கிறார்கள். யாவருக்கும் இருப்பதுபோல் அவர்களுக்கும் மனச்சாட்சி என்பது இல்லாமலல்ல ஆனால் பிசாசின் அடிமைகளாய் "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்ற மனப்பான்மை உடையவர்களாய் மனச்சாட்சியை எதிர்த்து நடக்கிறார்கள். ஆனால் அதிலும் ஒருவித ரோசமுண்டாகி மற்றவர்களையும் தங்களுடன் சோடிக்குச் சேர்த்துக்கொண்டால் தங்கள் செய்கை மறைந்து விடுமென எண்ணி மனப்பால் குடிக்கிறார்கள். அப்படியானவளே ஞானமலர். இல்லாவிடில், பிள்ளைகள் பள்ளிக்கூடம் போவதையும், இப்படித் தெருவில் அலைவசியமாகத் திரிவதையும், சரிக்கட்டிப் பேசுவாளா. இதற்கு நான் என்ன மறுமொழியைச் சொல்வது. அவளின் புத்தியை வியந்து, மகிழ்ச்சியுற்றேன். அமிர்தமோ படபடவென்று நியாயம் பேசினாள். பிள்ளைகள் பள்ளிக்கூடம் போவதும், குசாலாய் உடுத்தி வெளியில் உலாவவிடுவதும் சமமெனச் சொல்லுகிறாயோ? என்று கேட்டதுதான் என் காதில் விழுந்தது. அமிர்தத்தின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் ஞானமலர் திண்டாடிவிட்டாள். ஆதலால் நானே அவளுக்குப் பரிந்து பேசும்படி நேர்ந்துவிட்டது.

நான்: இனி வயசு வந்த பிள்ளைகள் தற்காலம் பெற்றோர் சொற்கேட்கிறார்களா. என்ன செய்வது இலைமறைவு காய்மறைவு என்று காலந்தள்ள வேண்டியதுதான் என்றேன். அது அவளுக்குப்

பிடித்துக்கொள்ளவில்லை யென்பது அவள் முகத்திலிருந்து விளங்கிக்கொண்டேன். ஆனாலும் அதை நான் காட்டிக்கொள்ளவில்லை. அதற்கு அவள் மறு மொழியாக:—

என்ன மாமி அவ்வளவுகேவலமாக எண்ணிவிட்டீர்களா? நாங்கள் என்ன செய்வது நீங்களே சொல்லுங்கள். எங்கள் பெற்றோருக்கு நாங்கள் நால்வர் பெண்கள். ஒரு ஆண்சகோதரமும் உண்டு. எங்கள் தகப்பனார் இவ்வூரிலேயே உத்தியோகமாயிருந்தும் ஒன்றும் சேகரித்து வைக்கவில்லை. அதனால் எங்கள் மூவருக்கும் ஒருசீதனமும் கொடுக்கவில்லை. சீதனம் இல்லாமல் நம்மவருள் கலியாணம் நடைபெறுவது எவ்வளவு கஷ்டம்மென்பது நீங்கள் அறியாததா. என் பெற்றோர் சாதி மட்டும் பார்க்க வில்லை. சீதனமில்லாது எவன் கேட்டாலும் கொடுப்பதற்கே ஆயத்தமாயிருந்தார்கள். அப்படியான எண்ணமிருந்ததினால் வீட்டுக்குள் மரியாதையாக வைத்திருந்து என்ன செய்வது என்று, வெளியே யாவருடனும் பழகவிட்டார்கள். ஆனபடியினால் தான் எனசகோதரிமாரும் யாதொரு சீதனமுமின்றி இப்படியான உத்தியோகஸ்தரை மணமுடித்து நிம்மதியாக வாழுகிறார்கள். எனக்கும் அவர்களுக்குப்போலவே சீனியர் வரைக்கும் படிப்பித்திருந்தார்கள். அதன்பின் எங்கும் நான் சுயேச்சையாய் போக அனுமதி கொடுத்து விட்டார் எனது தகப்பன். எனது தாயாருக்குமட்டும் இது கொஞ்சமும் பிடிக்கவில்லை. என்ன இருந்தாலும் வயசு வந்த பெண்ணைத் தனியே அனுப்பலாமா என்று கொஞ்சம் தடைபண்ணினவர்கள்தான். பின் என்ன செய்வது, எனது தகப்பனாரது சம்பளம் குடும்பத்தைத் தாபரிக்கப் போதவில்லை. அதனால் நான் உபாத்திமைத் தொழில் செய்து, 60 வெள்ளி வரையில் சம்பாதித்தேன். அது எங்கள் குடும்பத்திற்கு எவ்வளவோ உதவியா யிருந்தது. அதன்பின் என் தாயார் என்னை வெளியில் போகவேண்டாமென்று தடைபண்ணுவது கிடையாது. பள்ளிக்கூடக் கூட்டங்களுக்கும்; விளையாட்டுக்களுக்கும் நான் போக வேண்டியதாய் விட்டது.

இப்படியே நான் விளையாட்டுக்கென ப்போன இடத்தில்தான், என் புருஷனைச் சந்தித்தேன். அவரும் ஒரு உபாத்தியாயரானதினால், அன்று எங்கள் பள்ளிக்கூட விளையாட்டுப் பார்க்க வந்திருந்தார். அவரை நான் பலஇடங்களில் சந்தித்திருக்கிறேனானாலும், நேரில் கதைக்கச் சந்தர்ப்பமேற்படவில்லை. அன்று நானே வருகிறவர்களை வரவேற்கும் வேலையிலிருந்த படியால் நானே வரவேற்று உபசரித்தேன். அவ்வளவு தான் அடுத்தநாள் என் வீட்டுக்கு வந்துவிட்டார். என்தகப்பனார் ஆர் ஆண்பிள்ளைகள் வந்தாலும் என்னையும் என் தாயாரையும் கூப்பிட்டு அறிமுகப்படுத்தும் சுபாவமுள்ளவர். அன்றும் அப்படியே செய்தார் அன்று இவர் எங்களுக்கு எவ்வளவு மரியாதையாகக் காட்டினார் தெரியுமா.

இப்படியே அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வந்து போவார். வீட்டுக்கு மட்டுமல்லப் பள்ளிக்கூடத்திற்கும் வருவார். என் தகப்பனாரும், இவரது குணத்தைப்பார்த்து மிகவும் வியந்தார். அதனால் நாங்கள் தனியே போவதற்கு ஒன்றுக்கும் அவர் ஆட்சேபிக்கவில்லை. ஏதோ தெய்வாதீனமாகக் கலியாணமும் ஒப்பேறி விட்டது. ஆனால் அதன் பின் சுயேச்சையை இழந்தவளானேன்.

அமிர்தம்:—என் சுயேச்சையை இழந்தாய். உனது நாயகரும் அப்படியானவராய் வாய்த்திருக்கும்போது உனக்கென்ன குறை? என்று ஆவலாக்கேட்டாள்.

ஞானமலர்:—முதலில் சீதனம் என்ற பேச்சே இல்லாமல் கலியாணஞ்செய்து பேட்டுப் பின் தனக்கு ஒன்றும் கொடுக்கவில்லை யென்று கொஞ்சம் மூஞ்சை காட்டினார். என் தகப்னார் அதுஒன்றுக்கும் அசையவில்லையானதினால், அவர்களுடன் இருக்கக்கூடாதென்று இந்தவீட்டில் கொண்டுவந்து வைத்தார். பெண்சாதியின் உழைப்பு உறிஞ்சப்படுவது தனக்கு மரியாதையில்லை யெனச் சொல்லி, எனது உபாத்திமைத்தொழிலை நிறுத்தும்படி கட்டாயப்படுத்தினர். அத்துடன் வெளியில்போவதையும் நிற்பாட்டி விடும்படி சொல்லிவிட்டார். பள்ளிக்கூடத்திலிருந்து கூட்டங்களென்றும், சங்கங்களென்றும், எத்தனையோ கடிதங்கள் வந்தும் ஒன்றுக்கும் நான் போக முடியவில்லை. பாருங்கள் எவ்வளவு சுயேச்சையாய் இருந்தநான் இப்போ கூண்டிலடைக்கப் பட்ட பறவையைப் போல் இருக்க வேண்டியிருக்கிறது (என்று துக்கித்தாள்.)

நான்:—பெற்றோர் தேடிச்செய்தால் தான் பெண்ணுக்குப் பிடிக்காத புருஷனைக்கட்டி வைத்து விடுகிறார்கள் என்று சொல்ல மட்டும் கேட்டிருக்கிறேன். ஆனால் எல்லாம் சோதித்து அறிந்த நீ இப்படிச் சொல்லுவது எனக்கு மிகுந்த ஆச்சரியமாயிருக்கிறது. தாங்களே பார்த்துச் செய்து கொண்டால் மிகச் சந்தோஷமாக இல்லறம் நடத்தலாம் என்று அல்லவா சொல்லுகிறார்கள் (என்று மிகுந்த ஆச்சரியப்பட்டேன்.)

சதா ஆங்கிலப்பத்திரிகை வாசிப்பவளான அமிர்தம் இதெல்லாம் கேட்டுவிட்டுச் சொன்னாள், நான் நேற்று பத்திரிகையில் பார்த்தேன், புருடன் குறட்டை விட்டானென்று ஒருத்தி விவாகரத்

துக் கோரினாளாம். ஒருத்தி பதினோராம்நாள் தனக்குப் பிடிக்கவில்லை யென்று கோட்டுக்குப் போனாளாம். இப்படியே பத்திரிகையை விரித்தால் விவாகமும், விவாகரத்துமே புதினங்கள். இதுதான் காதல் விவாகம் என்றாள்.

நான்:—அப்படியா சமாச்சாரம். காதலித்து விவாகம்புரிந்து கொண்டவர்கள் உண்மையில் மிகுந்தசந்தோஷமாகவே காலங் களிப்பார்களென்றல்லவா நான் எண்ணியிருந்தேன். அவர்களுக்குள்ளும் மனஸ்தாபங்கள் உண்டென்பதை இப்போதான் அறிந்தேன். அப்படி யெல்லாம் அறிந்திருக்கும் நீ இப்படி உனது சகோதரியைத்திரிய விடும் நோக்கம் என்ன?

ஞானமலர்:—இவள் இப்போ தானே ஒரு வானத்தேடிக் கொண்டால் பின் ஒருகாலம் எங்களுக்குற்றம் செரல்ல மாட்டாளல்லவா! அத்துடன் இப்போ நாங்கள் பேசப்போனால் சீதனம் கேட்பார்களல்லவா? எங்கள் நிலபரம்தான் நீங்கள் அறிவீர்களே. இப்படி இருக்கும்போது சீதனத்திற்கு எங்கே போவோம் தானாப் ஒருவன் வந்து சிக்கிக் கொண்டால் சீதனம் என்ற பேச்சே இல்லாமல் கொண்டுபோய் விடுவானல்லவா. இவையெல்லாவற்றையும் உத்தேசித்தே நான் அவள்வெளியே போவதைக் கண்டிப்பதில்லை. (என்றாள்)

இவையெல்லாவற்றையும் கவனமாகக் கேட்டுக் கொண்டு ஏதோவாசிப்பது போல் பாசாங்கு பண்ணிக்கொண்டிருந்த பேபி புஸ்தகத்தை வைத்துவிட்டு, "நான் சீதனம் கேட்கும் மாப்பிள்ளையைக் கலியாணம் பண்ணவே மாட்டேன். சீதனம் கேட்பவனைக் கலியாணம் செய்வதிலும் பார்க்க இப்படியே கன்னியாகவே இருந்துவிடுவேன்" என்று சபதம் செய்தாள்.

அமிர்தம்:—உன் தமக்கை மார் மூவர் சீதனமில்லாமலே கலியாணம் செய்து கொண்டிருக்கும் போது உன் சபதம் நிறைவேறுவதற்கென்ன தடை. ஆனால் கண்டபடி யாவருடனும் வெளியிற் செல்லாமல், மரியாதையாக இருந்து, சீதனமில்லாமல் கட்டிக்கொள்ளுவதென்ற சபதத்தை நிறைவேற்றினால் அதுவே கெட்டித்தனம். அதை விட்டு அன்னிய நாட்டாரைப்போல் சீதனமில்லாமல் கட்டிக் கொள்வதற்காக, வரன் தேடித்திரிவது நம்சாதிக் கேற்றதல்ல.

பேபி:—நாங்கள் வரன் தேடித்திரிவதற்காக வெளியில் செல்வதில்லை. சும்மா வீட்டிலேயே அடைபட்டுக் கொண்டிருப்பது எனக்குப் பிடிக்காது அதனால்தான் நான் வேளியில் உலாவப் போய்வருகிறேன்.

அமிர்தம்:—நீ எப்படிச் சொன்னபோதிலும் இப்போ உனது அக்காள் சொன்னது போல் நம் சாதியில் குமர்ப்பெண்கள் தனியே சென்றால் உலகோர் என்ன செல்லுவார்கள். அத்துடன் பின் மரியாதையுடைய பாப்பிள்ளை கிடைத்தால் நீயும் சுயேச்சை இழக்க நேருமே.

பேபி:—உலகத்தவருக்குப் பயந்து நடக்க நாங்களென்ன பயங்கொள்ளிகளா, உலகத்தவர் விரும்பப்படி எல்லாம் நாம்நடக்க முடியுமா? அப்படியானவனை நான் கலியாணம் செய்யச் சம்மதியேன்.

அமிர்தம்:—இவ்வுலகில் நாம் வாழுமட்டும் ஏதோ உலகத்திற்குப் பயந்து நடக்க வேண்டித்தானிருக்கிறது. ஒவ்வொருவரும் உலகத்திற்குப் பயந்து நடப்பதேயில்லை யெனத்தீர்மானித்தால், உலகம் எப்படியிருக்குமோ என்று என்னால் நிச்சயிக்கமுடியவில்லை. உன்னைப் போன்றவர்களிலும்பார்க்க இவ்வுலகில் தன்னை மரியாதையுள்ளவனென்று நாலுபேர் மதிக்க வேண்டுமென்ற எண்ணமுள்ளவர்கள் மிகுந்திருப்பதாலன்றோ உலகம் இப்படி இருக்கிறது. உலகத்தில் நாலு பேருக்குப் பயந்துநடக்காதவரும் மனுடாவரோ

பேபி:—நாலுபேர் நாலுபேரென்கிறீர்களே. அது ஆர்அந்த நாலு பேர்.

அமிர்தம்:—உலகத்தில் நீதி நியாயம் அறிந்தவர்களாய், கல்வியறிவுள்ளவர்களாய் இருப்பவருக்கு நாம் பயந்து நடக்கவேண்டும். அவர்களே அந்த நாலு பேர். (என்றாள்)

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்க நான் ஞானமலரைப் பார்த்து "உனக்குப்பெற்றோர் இவ்விடமே இருந்தால் என் உனது சகோதரி உன்னுடனிருக்கிறாள்" என்று கேட்டேன். அதற்கு அவள் தனது பெற்றோர் இறந்து விட்டதாகவும் அதன் பின்னேதான் தனதுசகோதரி தன்னுடன் வந்திருப்பதாகவும் சென்னாள்.

அமிர்தமும் பேபியும் என்ன பேசி முடித்தார்களோ தெரியாது. மிகுந்த சந்தோஷமாக வார்த்தையாடிக் கொண்டிருந்தார்கள், மணி 4 அடித்த சத்தம் கேட்டுத்திடுக்கிட்டோம். சொல்லிக் கொள்ளக்கூட நேரமின்றி விரைவாக எழுந்து வீடுசென்றோம். வீடுபோகும்போது பாலம் அவள் இந்தப்பாழும் சீதனத்திற்குப் பயந்தே இப்படி விடுகிறாள் என்றுமிகுந்த பரிதாபப்பட்டோம்.

ஆனாலும், ஞானமலர் இப்படி விரிவாகத்தன் சரித்திரத்தைச் சொன்னது எங்களுக்கு மிகுந்த ஆச்சரிய மாயிருந்தது. அடுத்த முறை சஸ்வதியின் சகோதரியைப் பற்றிச் சொல்லுகிறேன்.

அத்துடன், இந்த ஆரவாரம் கேட்டு பக்கத்து வீட்டுச் சுசீலாதேவி வந்ததும், அவள் தனது சரித்திரம் சொன்னதும் எல்லாம் சொல்லுகிறேன். அதிகமெழுத நேரமில்லை.

தேவி.

"சமயோசித புத்தி"

நாம் இயற்கையாகவன்றிச் செயற்கையாலடைய முடியாத சிலகுணங்களுள. அவைகளை "நட்புந் தையையும் கொடையும் பிறவிக்குணம்" என ஔவையார் பகுத்துக் கூறினர். வடமொழி வானர், கொடை, நட்பு, தீரம், சந்தர்ப்பம் அறிந்து காரியம் செய்யும் அறிவு எனப்பகுத் துள்ளார்கள். ஒருவர் ஏதாவது ஒரு விஷயத் தைக் கேட்டால் சரேலென்று அதனைக்கிரகி த்து, அவருக்கு உடனுக்குடனே தவறாமல்பதில் சொல்லி திருப்தி செய்விப்பது மிகக் கடினம். இந்த சாமார்த்தியம் படிப்பினால் மட்டும்வராது

சாதாரணமாக தெனாலிராமன் கதையில் அர சர் "தலைமறைவாயிரு" என்றதற்கு, ராமன் கையா ண்டமுறை எல்லோருக்கும் சரேலென்று மன தில் உதிக்குமா? வாயுள்ள பிள்ளை பிழைக்கும்" என்று ராமன் கூறினதை அவன் மகன் அறிந்து கொண்டு, தான்களவாகப் பறித்த ரோஜாப்புஷ் பங்களை யெல்லாம் தின்றுவிட்டு, காவல்காரர்கள் தன்னை அநியாயமாய் பழிசுமத்தி இழுத்துவந்த தாக, அரசன் முன்னிலையில் நிருபித்து தப்பித்துக் கொண்டது எல்லோரும் செய்யக் கூடியதா?

வடமொழி கவிசிரேஷ்டராகிய காளிதாசர் போ ஜராசனுடைய சபையில் வித்வானாய் அமர்ந்திருந் தார். அப்போஜராஜனுக்கு தலையில் மிகவும் கொ டியதோர் வியாதி உண்டாயிற்று. எந்த வைத்திய ரும் அந்தவியாதியைத் தீர்க்கமுடியவில்லை. இறுதி யில், அசுவனி தேவதைகளைப் பிரார்த்திக்க அவ ர்கள் வந்து, அரசனது தலையை பரிசோதித்து, உள்ளே நிறைய மீன்கள் இருப்பதாகவும், அவை களை அந்நோயின் வலிக்கு காரணம் எனவும், கண்டுபிடித்தனர். ஆகவே அவனது தலையை உ டைத்து அம்மீன்களை வெளிப்படுத்தினால் தான் நோய் நீங்குமெனத் தீர்மான மாயிற்று. அதற்காக தனியான ஓரிடத்தில் "ஆபரேஷன்" நடந்தது. யாரும் அந்த இடத்திற்கு வரக்கூடாது, என்ற கடுமையான உத்திரவு இருந்தது ஆனால் காளிதா சர் மட்டும் ஒளிமறைவாயிருந்து அவைகளைக் கவ னித்து வந்தார்.

அசுவினி தேவதைகள் கபாலத்தை உடைத் தனர். தலையின் உட்புறத்தில் மீன்கள் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன. அவைகளை யெல்லாம் வெகு சீக்கிரத்தில் வெளிப்படுத்தி விட்டு மறுபடியும் மண்டையோட்டைப் பொரு த்தித் தைத்துவிட வேண்டும். அவ்வேளையில் மீன்களை யெல்லாம் ஒரேயடியாய் எப்படி வெ ளிப்படுத்துவதென்று வைத்தியர்களுக்குத் தெ ரியவில்லை. எல்லோரும் தம்முள் கலந்து யோசி க்கலாயினர். அது சமயம் மறைவிலிருந்த காளி தாசர் மெதுவாக "ஒரு பெரிய பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி, அருகே கொண்டு போனால் மீன்கள் யாவும் அதில் வந்து விழுந்துவிடும்" என் றார்; வைத்தியர்கள் அபபடியே செய்தனர். அவ் வாறு சமயோசிதமாகக் கூறிய காளிதாசரை எல் லோரும் புகழ்ந்து வாழ்த்தினர்.

"உன் கணவன் உயிரைத் தவிர, வேறு எதைக் கேட்டாலும் சத்தியமாகத் தருகிறேன்" என்று சொன்ன யமனை நோக்கி "எனக்கு என் பர்த்தா மூலியமாக நூறு குழந்தைகள் தந்தருள வேண் டும்" என்று கேட்டு "சரி அப்படியே தந்தேன்" என்று கூறிய யமனை திண்டாட வைத்த சாவித் திரியின் சமயோசித புத்தி எப்படி யிருக்கிறது பாருங்கள்?

முன்னொரு காலத்தில், சோழராஜன், தன் ஆசி ரியரும், சமஸ்தான வித்வானுமாகிய ஒட்டக் கூத்தருடன் யானை மேலேறி ஊர்வலம் வந்தான். அது இராக்காலம். அப்போதும் மன்னனுக்கு குடை பிடித்து வந்தனர். ஒட்டக் கூத்தரும் அரசனுக்குச் சமமாக யானை மீதேறி வருவது சிலருக்குப் பொறுக்கவில்லை. அதனால் அவரை அவமானப்படுத்த வெண்ணினர். அப் போது ஊர்வலம், ஒரு சிறைச்சாலைப் பக்கமாக வந்தது. அந்தச் சிறைச்சாலையில் ஒட்டக்கூத் தரால் சிறையிடப் பெற்ற சில வித்வான்களும், புகழேந்தி என்ற ஒரு பெரும் புலவரும் இருந்த னர். ஊர்வலம் அவ்விடத்தை அடைந்ததும், சிலர் பரிகாசமாக சிரித்து ஆரவாரம் செய்தனர். அரசன் அவ்வாறு அவர்கள் செய்ததின் காரணத் தை விசாரித்தான். அதற்கு அவர்கள் "அரசே, தேவர்கள் பவனி வரும்போதுதான் இரவானு லும் குடை பிடிப்பதுண்டு. தாங்கள் இப் போது குடை பிடித்து வருதலுக்கு காரணத்தை நம்புலவர், ஒட்டக்கூத்தர் சரியாகக் கூறினால் நாங்கள் அவரை மரியாதை செய்வோம். இன் றேல், அவர் தம்மோடு சமமாக உட்கார அரு கரல்லர்" என்றனர். அரசன் ஒட்டக்கூத்தரை நோக்கினன். அவருக்கு யாதும் பேசமுடிய

வில்லை. அப்போது, சிறையிலிருந்த புகழேந்தி, "நான் சொல்லுவேன்" எனறு கூவினர்.

உடனே அரசன் அவரை வெளிப்படுத்தச் செய்து வினவினன். உடனே, அவர் "பெண்கள், அழகியபர புருஷரைக் கண்ணெடுத்துப் பார்த்தாலும் பதிவிரதாபங்கம் ஏற்படுமென்று நூல்கள் கூறுகின்றன. அதனால் மேலை நகரத்திர மண்டலத்திலுள்ள அருந்ததி யென்னும் பத்தினியானவள் மகா அழகு வாய்ந்த இம்மன்னனைக் காணக் கூடாது என்பது கருதியே இரவிலும் இவருக்குக் குடை பிடிக்கப்பட்டது" எனச் சமயோசிதமாகக் கூறினர்; எல்லோரும் மகிழ்ந்தனர். அரசனும் அவரைப் போற்றி தம் சமஸ்தான வித்வானுகிய ஒட்டக்கூத்தருக்கு சமமாகக் கொண்டு சிறப்புச் செய்தான்.

தனக்கு இருபுறத்திலும் உட்கார்ந்திருப்பவர்கள், ஆடேகழுதை! அடேநாயே!!" என்று கோபாவேசத்துடன் ஏசும்போது "நான் கழுதையுமல்ல, நாயுடல்ல, அவ்விரண்டிற்கும் நடுவிலிருக்கிற மனிதன்!! என்று சாவதானமாகக்கூறிய ஒருவன் எவ்வளவு சமயோசித புத்தி உடையவன் என்று பாருங்கள்!

இத்தகைய சமயோசித புத்தி, துன்பகாலத்தில் அதனை நீக்கி இன்பம் விளைவிப்பதோடு, இன்ப காலத்திலும், அதனை பன்மடங்கு பெருக்கி, யாவருக்கும் சந்தோஷத்தை விளைவிக்கும். இயற்கையாக இதனைப் பெறாம் பாக்கியமில்லாதவரும் பல நூல்களைக் கற்றுத் தேறுவாராகில் நன்மையடையலாம்! "கற்றனைத்து ஊறும் அறிவு" என்றிருப்பதால் நிறையக் கற்று அறிவு மிசப் பெற்று இயன்றவரை சமயோசிதமாகப் பேசவும், காரியம் பெறவும் வல்லவராகக் கூடும்.

பொ. தாமோதரம்பிள்ளை,

தமிழ்ப் பத்திரிகைகளும் - - - - - - அன்னிய பதங்களும்.

இலங்கைத் தமிழ் மக்கள் மூன்றும் வகுப்பு முதற்கொண்டு தங்கள் அறிவை ஆங்கில மொழியால் வளர்த்துவருகின்றனர். ஆங்கிலப் பாடசாலைகளில் ஒருநாள் ஒன்றுக்கு ஒருமணித்தியாலமேனும் தாய்ப்பாஷைக்காகச் செலவிடுகிறார்களில்லை. ஏறக்குறையத் தினம் நாற்பது நிமிஷங்கள்தான் தாய்ப்பாஷைக்காகச் செலவிடப்படுகிறது. மலாயா முதலிய பிறதேசங்களிற் தமிழ் மக்கள் தொடக்கத்திலிருந்தே அன்னிய பாஷையால் மூளையை வளர்க்க வேண்டியவர்களாகக் காணப்படுகிறார்கள். ஆங்கிலப் பாடசாலைகளில் பலபாஷைகளைப பேசும் மாணவர்கள் ஒருங்கேசேர்வதால் ஒவ்வொரு பிள்ளையினுடைய தாய்ப்பாஷையும் கற்றுக்கொடுப்பது சாத்தியமல்ல.

பாடசாலையை விட்டு வெளிப்பறினபின் மக்களுடைய அறிவை வளர்க்கக் கூடியது பத்திரிகைகளே. தற்போதுமக்களிடையே ஏற்பட்டிருக்கும் சிறு விழிப்புத் தாய்ப்பாஷைப் பத்திரிகைகளாலும் தாய்ப்பாஷைப் பிரசங்கங்களாலுமே ஏற்பட்டதெனலாம். அப்படி ஏற்பட்ட சிறு தாய்மொழி அபேட்சையையும் அபிமானத்தையும் இற்றை உலகத்தமிழ்ப் பத்திரிகைகள் குன்றவைக்கிறதாகத் தோன்றுகிறது ஏனெனில் தமிழ்ப் பத்திரிகைகள் தனித் தமிழ்மொழியில் விளங்காது கலப்பு மொழிகள் நிறைந்தனவாகக் காணப்படுகின்றன.

உதாரணமாக ஒரு சிறிது நேரத்தில் ஒரு உயர்தரத்தமிழ்ப் பத்திரிகையில் பொறுக்கி எடுக்கப்பட்ட ஆங்கிலப் பதங்களாவன:—

டிடக்டிவ்	Detective
பிராட்காஸ்ட்	Broad-cast
காம்பவுண்டு	Compound
சப்ளை	supply
ரெவின்யூ	Revenue
கவர்னர்	Governor
ரேடியோ	Radio
எம்பயர்	Empire
கமிட்டி	Committee
வோட்டர்	Voter
மிடில்கோர்ட்	Middle-court
அரஸ்ட்	Arrest
குவரான்டைன்	Quarrantine

இந்தத் தொற்று நோய் தமிழ் உலகில்உள்ள பத்திரிகைகள் எல்லாவற்றிலும் சிறிது சிறிதாய்த் தாவ எத்தனிக்கிறது. காலங்கண்ட சில பத்திரிகைகள் ஆரியத்தையும் ஆங்கிலத்தையும் ஒரு சிறிதேனும் கலப்பதில்லை என்று இறுமாந்து நின்றன. தற்சமயம் அந்த நிதியில் நின்று வழுவத் தொடங்கு

வதாகத் தோன்றுகிறது மாதப் பெயர்களையும் ஆங்கிலத்தில் பொறித்து விடுகிறார்கள்.

ஆங்கிலத்திற் பெற்ற கல்வியைக் கொண்டு தமிழ்ப்பத்திரிகைகளை நடத்துவதால் ஆங்கிலப்பதத்தைத் தவிர்க்க முடியாததேதகுறை. ஆங்கிலத்தில் யோசித்துத் தமிழில் எழுதும் பொழுது ஆங்கிலச் சொற்களுக்குச் சரியான தமிழ்ப் பதம் தெரியாததினால் ஆங்கிலத்தையே தமிழில் வரைந்து விடுகிறார்கள்.

நமது நாட்டு வாலிபர்கள் வெளிநாடடு வெள்ளைச்சுறுட்டைப் பகிரங்கத்தில் தங்கள் கௌரவத்துக்கு இன்றியமையாததென்று பாவிக்கிறார்கள். அதுபோலத்தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களும் ஆங்கிலப்பதங்களை இடை இடையே சேர்த்து வெளியிடுவதால், தங்கள் பத்திரிகைகளின் செல்வாக்கையும் கௌரவத்தையும் அதிகரித்துக் கொள்ளலா மென்று எண்ணுகிறார்களா போலும்.

ஒருபோது அறிவுப் போட்டிகளைப் பத்திரிகைகள் மூலம் வெளியிட்டு நடத்துவதால் வருவாயைக் கூட்டிக் கொள்ளலாம். ஆனல், சுயபாஷையல்லாத அன்னியபாஷைப் பதங்களைக் கலந்துபத்திரிகைகள் நடத்துவதால் செல்வாக்கைக் கூட்டிக் கொள்ளலாம் என்று சொல்ல இடமில்லை.

சனசமுகத்துக்குப் பயன்படும் கட்டுரைகளை வெளியிடலாம். விளம்பரங்களைத் தேடிப்பத்திரிகைகளைப்பரப்பலாம். புதினங்களாலும் உலகஇயல்புச்சமாச் சாரங்களாலும் நிரப்பலாம். பத்திரிகை ஆசிரியர்களுடைய குறிப்புகளாலும் விரிவுரைகளாலும் அலங்கரித்துப் பத்திரிகைகளினுடைய செல்வாக்கையும் மதிப்பையும் உயர்த்திக் கொள்ளலாம்.

அன்னிய பதங்களை இடை இடையே செலுத்தித் தமிழ்ப்பத்திரிகைகளை வெளியிடுவதால் பத்திரிகைகளுடைய செல்வாக்கையும் மதிப்பையும் குன்றவைப் பதல்லால் உயர்த்துவது சாத்திய மல்ல.

அருட் செல்வமாகிய தேனினும் இனிய செந்தமிழுடன் அன்னிய பதங்களை இடை இடையே கலந்து வெளியிடுவது பெரும் அடாத செயலெனில் பொருந்தும்.

நமது திவ்ய செந்தமிழ்ப் பாஷையை அன்னிய சொற்களோடு கலந்து அதன் சுவையைக் குறையாது காக்க எல்லாம்வல்ல இறைவன் கருணை புரிவாராக!

"வழிகாட்டி"

எமது அழியாத பெரும் செல்வமாகிய "வழிகாட்டி" எமக்குக் கிடைத்தவுடன் செல்வி தேய்கிறதோ வளர்கிறதோ என்றதே நமது முதல் நோக்கம். யாழ்பாணத்தில் வளரும் பனைகள் யப்பான், அமெரிக்கா, ஐரோப்பா முதலிய தேசங்களிற்சென்றதினல் அந்தத் தேசத்தவர்கள் பனையை மூலாதாரமாகக் கொண்டு பல வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை உண்டுபண்ணி, தேசங்களில் உள்ள பல மூலை முடக்குகளுக்கும் அனுப்புவார்கள். எங்கள் நாட்டிலோ பசுவை வளர்த்துப் பாலைக் குடிக்க வருத்தப்பட்டு, பனையின் பாலைக் குடித்து அழிகிறார்கள். பனை மரத்தை ஆதாரமாகக் கொண்ட பொருள்கள் பெரிய கடைவரைக்கும் பிரயாணம் பண்ணுவதும் அருமை. அதுபோல வழிகாட்டியும் இலங்கை, இந்தியா, பர்மா முதலிய இடங்களுக்குப் பிரயாணம் செய்யாமலும், நமது சங்கத்தில் சேராத நமது சகோதர சகோதரிகள் கைகளில் ஏறுமலும் சங்கத்தங்கத்த வர்களுடன் அதன் வளர்த்தி நின்று விடுமோ என்று எண்ணினதுமுண்டு.

கார்த்திகை மாத வெளியீட்டில் 1,300 பிரதிகள் அச்சிடப்பட்டதென்பதைக் கண்ணுற்று அகமகிழ்ந்தோம். தமிழ்க் கட்டுரைக்காக விடப்பட்ட பக்கங்களும் அதிகரிக்கலானது. இதுவு மோர் பேர் மகிழ்ச்சிக்கு இடமனமே. நமது தாய் நாட்டவர்களும் ஆதரிப்பது பெருஞ் சந்தோஷமே.

ஆங்கிலத்துக்குக் கூடிய பக்கங்களும் முன் இடமும், அருட் செல்வமான இனிய செந்தமிழுக்குக் குறைந்த பக்கங்களும் பின் இடமும் வகுக்கப்பட்டது. இதையிட்டு தமிழன் என்ற வரையில் நாம் வருந்துகிறோம். சுய பாஷை என்றதைக் கூடக் கவனித்தார்களில்லை. அன்னிய பாஷையை உபர்த்தியும் சுய பாஷையைத் தாழ்த்தியும் நடப்பது முறை அன்று.

விரிந்த அறிவுடையோர் சிலர் தமிழை, ஊக்கம் எடுத்து அறிவுக்காகக் கற்கவேணும் என்று எழுதுகிறார்கள். ஆனல் அவர்களிற் சிலர்கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதுகிறார்கள். நமது சுயபாஷையைக் கற்காதவர்களுக்குப் பயன்படுமாறு போலும். அப்படிச்சுய பாஷையை வாசிக்கத் தெரியாதவர்களிருப்பின் இதைவிட வெட்கம் வேறென்ன? அன்னியநாட்டு மோகமும், அன்னிய பாஷையிலும் அன்னிய நாட்டுப் பொருள்களிலும் நாட்டமும் குறைந்த பாடில்லை.

நாம் பொருட் செல்வத்தைத் தேடி ஆங்கிலத்தைப் படிக்க வேண்டி நேர்ந்தாலும் நமது அருட் செல்வத்தை வளர்க்கும் இனிய தமிழை அவமதிப்பது வருந்தத் தக்கதன்றே? ஆடவர்கள் கும்பிக்கிரை தேடும் நோக்கங் கொண்டு ஆங்கிலத்தைக் கற்கிறார்கள். பெண்கள் அறிவு வளர்ச்சிக்கு மாத்திரம் கற்கிறவர்கள் யாது காரணம்

கொண்டு தமிழைப் புறக்கணித்து ஆங்கிலத்தை மாத்திரம் கற்கிறார்கள்?

யாழ்ப்பாணத்தவர்கள் தங்கள் தங்கள் வசதிக் கேற்றவாறு விருப்பிய சங்கங்களில் சேர்ந்து கொள்கிறார்கள். தேசப் பற்றுப் பெருகக் கூடிய அறிவு ஏற்பட்டால் இதிலும் மாறுதல் ஏற்பட இடமுண்டு. நமது சஞ்சிகைபோ யாழ்ப்பாணத்தவர்கள் எல்லோருக்கும் பொது உடமை. அதை வரவேற்று வாசிப்பது அனைவருடைய பெரும் கடமை. யாழ்ப்பாணத்தவர்களுக்கு மாத்திரமன்று மற்றவர்களுக்கும் பிரதானமாகத் தமிழ் உலகுக்கு பயன்படும் நோக்கமுடைத்து அதிகமான கட்டுரைகள் யாழ்ப்பாணத்தவர்களுக்கு மாத்திரம் பயன்படக்கூடியதாய்த் திகழ்கின்றன: தமிழ் உலக முழுவதிற்கும் பயன்படுமாறிருப்பின் பெருமை உடைத்தாகுமன்றே?

சந்தாதாரர்களைப் பெருக்கி விளம்பரங்களைக் கவர்ந்து நிற்பது நிலைநிற்கப்பாலதாகுமல்லவா?

மாதம் ஒரு முறையாகப் பிரகாசிக்கும் நமது இளஞ் செல்வியை, மாதம் இரு முறை, மும் முறையாகக் காலாந்தரத்தில் பிரகாசிக்கச் செய்து கொள்வதும் எங்களைப் பொறுத்த கடமை. பத்திராதிபரையும், பத்திரிகையை நடாத்துதும் காரியஸ்தர்களையும் மாத்திரம் பொறுத்ததன்று. வழிகாட்டியை வாசிக்கும் அன்பர்களே! இது உங்கள் ஒவ்வொருவரையும் பொறுத்த கடமை என்று உணருக!

தமிழ் உலகு, பத்திரிகைகள் வாசிக்கும் ஊக்கம் குறைந்ததென்றும், இரவல் வாங்கி வாசிக்கும் தன்மை உடைத்தென்றும் கருதப்படுகிறது. நம்மில் ஒவ்வொருவரும் வழிகாட்டியை வரவழைத்து வாசியாவிட்டால் யாழ்ப்பாணத்தவர்களாகிய நாமும் பத்திரிகை வாசிப்பதில் பராமுகமுடையவர்கள் என்று கருதப்படுவோம். யாழ்ப்பாணத்தார் அனைவரும் வழிகாட்டியை ஆதரிப்பாராக! வழிகாட்டி எங்கும் விரிந்தோங்குக!! ஈசன் அருள் புரிவாராக!!!

ஈப்போ,
20-11-37. வ. நடராசா.

சம்பாஷணை

யாம் வசிக்கும் இம்மலாய்த் தேசத்தில் பல்லாண்டு உத்தியோகம் புரிந்து ஆறுமாத லீவில் ஊர் சென்று திருமபி வந்த ஓர் (கிராணியார்) உத்தியோகஸ்தனுக்கும் யாழ்ப்பாணத்திலுள்ள அறிவு, அனுபவத்துடன் வயதிலும் முதிர்ந்த ஓர் மகானுக்குமிடையில் நடந்த சம்பாஷணையைப் பலரு மறிய இப்பத்திரத்தில் பிரசுரிக்கத் தீர்மானித்து அச்சம்பாஷணையின் பிரதம பாகத்தை இம்முறை வெளிவிடுகின்றோம்.

மகான்:—தம்பி திருச்சிற்றம்பலம்! பல வருடங்களாய் நீரென்னைக் கண்டிராதபடியால், ஓர் போது என்னை யாரென மட்டுக்கட்டவும் மாட்டீராக்கும்.

திருச்சிற்றம்பலம்:—உங்களை நன்றாய்த் தெரியும். நாம் ஊர் விட்டுப் போனாலும் நாம்போயிருக்கும் இடங்களில் பெரும்பாலும் ஊரைப் பற்றி, ஊரவர்களைப்பற்றி, நினைப்பதும், பேசுவதும் வழக்கமாதலால் நாம் மறக்கிறது அரிது. உலகத்துக்குப் பிரயோசனமான காரியங்களில் ஈடுபட்டிருக்கும் தங்களைப் போலும் நன்னரை லேசில் மறக்க முடியுமா? யான் இவ்வூர் வந்த அடுத்தநாள் என் தந்தையாரிடம் தங்களைப்பற்றி விசாரித்தேன். அவர், முன்னென்றும்போல் இன்றும் சீவிய ஒழுங்குள்ளவராய், தனக்கும், பிறர்க்கும் பிரயோசனமாய் வாழ்ந்து வருகின்றார், என்று கூறினர். அவர் கூற்று, எனக்குச் சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தாற் போலிருந்தது, பெரியவரே!

மகான்:—ஏனப்படிச் சொல்லுகின்றீர் தம்பி! உமது ரூபாலங்காரப் பேச்சின் கருத்து எனக்கு நன்கு புலப்படவில்லையே?

திருச்சிற்றம்பலம்:—என் தந்தையார் தாங்கள் ஊருக்கும் தமக்கும், பிரயோசனமாய்ச் சீவிக்கிறீர் எனக் கூறியது, எனக்குப் பேரானந்தத்தை விளைத்தது. ஏனெனில் எஞ்சாதியாருள், அவருள்ளும், தம்மூர்விடுத்து, பிறநாடுகட்கேகாதவர்மாட்கள், சுயநய நாட்டமுள்ளாரேயன்றி இதரமாந்தரின் நய நட்டங்களைக் கவனித்துச் சீவிப்பவர் மிகச் சிலர் மாத்திரமே. "பிறர் பிள்ளை தலைகடவத் தன் பிள்ளை தானே வளரும்" என்னும் ஆன்றோர் வாக்கில் எனக்குப் பெரிய நம்பிக்கை பெரியவரே! பிறர் அலுவலைத் தன்னலுவல்போல் மதித்து நடப்பவனுக்கு அவன் காரியம் லேசில் கைகூடும்.

மகான்:—தம்பி, உமது அறிவையும் ஒழுங்கையும் காண்கையில் எனக்கு உண்டாகும் உள்ளக்

களிப்பு அதிகம். எஞ்சாதியாருட் பலர் தமக்கு மாத்திரமல்ல, பிறர்க்கும் பிரயோசனமாய் வாழ்ந் திருந்தனர். அவ்வித நரர் இலேமறை காய்போல் இன்றுந்தான் இங்குமங்கும் காணப்படுகின்றனர். யான் சில நாட்களின் முன் சந்தையொன்றிற்குப் போனேன். அங்கே ஓர் நளக்கிழவி இன்னொரு மனுஷிக்கு ஓர் பழமொழி சொன்னாள். அப்பழ மொழி "தானுணபது பேயுண்பது, புறருண்பது பரமுண்பது" என்பதே. இஃது எவ்வளவு மகத்துவக் கருத்தடக்கிய வாக்கு.

இஃது இம்மட்டில் நிற்க, தம்பி! நீர் மலாய்த் தேசத்தில் யாது தொழில் புரிந்து வருகின்றீர்? உமது அறிவையும் பேச்சையும் கவனிக்கும் போது நீர் ஓர் தக்க உத்தியோகம் வகித்து வரு கின்றீர்போற் தெரிகிறது.

திருச்சிற்றம்பலம்:—யான் மலாய்த் தேச அரச ஆங்கில வித்தியாலயமொன்றில் ஆசிரியனாயிருக்கின்றேன் பெரியவரே!

மகான்:—நீர் ஓர் ஆசிரியனா? எனக்கிது பெருஞ் சந்தோஷம். உபாத்திமைபோற் கனதன காத்திரமுள்ள தொழில் உலகில் வேறியாதுமில்லை. மலாய்த் தேசத்தில் உபாத்திமாராயிருந்து லீவில் இவ்வூர் வந்திருந்த சிலரையும், இலேப்பாறிப் பென்ஷன் வாங்கிக் கொண்டிருக்கும் சிலரையும், யானறிவேன். பொதுப்படச் சொல்லுகில், அவ்வூர் உபாத்திமார் ஒழுக்கமும், கலை கர்பிக்கும் ஆற்றலுமுடையார் போற் தெரிகின்றது.

திருச்சிற்றம்பலம்:—நீங்கள் சந்தித்த உபாத்திமார் யார், யார் பெரியவரே?

மகான்:—இரண்டோர் வருடங்களின் முன், லீவில் வந்து, தன் ஜனன கிராமம் உரும்பராயில் சீவித்த தம்பிப்பிள்ளை யென்ற ஆசிரியரை அறிவேன். அவர் ஓர் சோர்நிரையான தக்க மனுஷனென்று அவர் பேச்சிலிருந்து மட்டிட்டுக் கொண்டேன். நெல்லியடிப் பக்கத்தில் உள்ள ஒருவர் சின்னையா ஆசிரியர். அவருடனும் சம்பாஷித்திருக்கிறேன். அவரும் ஓர் தீரன்போற் தோற்றியது. கொழும்புத் துறையைச் சேர்ந்தவர் ஒருவர். அவர் மரித்துப் போனாராம். அருணாசலம் அவரைப் பற்றிப் பலரும் வியப்பாய்ப் பேசக் கேட்டிருக்கின்றேன். கோப்பாய் வாசர், கதிரேசம்பிள்ளை யென்றொருவரையும் அறிவேன். அவர் இந்த ஊரில் ஆங்கிலவித்தியாலயமொன்றில் அதிபராயிருக்கின்றாராம். அவர் கல்வி பயிற்றும்விதம் மிக உசிதமானதாம். இன்னும் பல ஆசிரியர்மாரை அறிவேன். இவ்வூர் உபாத்திமாரைப் பார்க்கிலும் உங்கள் மலாய உபாத்திமார் எவ்விதத்திலும் குறைந்தவரல்ல ரென்பதைக் கண்டறிந்து கொண்டேன். இவர்களைப்போற் தான் அரசின் சேவைகளிலுள்ள மற்ற, மற்ற எம்மூரான மற்றோரும் இராப்பாரா தம்பி?

திருச்சிற்றம்பலம்:—கிளேறிக்கல், றெயில்வே, தபாலாபீசுகளில் எம்மூரவர் பலருண்டு. அவர் சிலரின், வேலைத் திறமை, ஒழுங்கு மிகவும் வியக்கற்பாலன.

மகான்:—இதர ஆபீசுகளில் உயர்ந்த பதவியில் அரசர் நியமித்துள்ள நம்மாட்கள் சிலரை, யாமுமறியச் சொல்லுந் தம்பி!

திருச்சிற்றம்பலம்:—அவ்வூர் அரசும் ஊரும் சன்மானிப்பவர் சிலராகில் அவர்கள் நாமங்களைக் கூறலாம். எல்லோரையும் யானுமறியேன். என்னுடன் தாங்கள் கேட்டபடியால் சில நாமங்கள் மாத்திரம் கூறுவேன். மல்லாகவாசன் ம. றீ. றீ. தம்பித்துரை என்பவர் மிகவுயர்ந்த பதவியிற் தொழில் புரிகின்றார். இன்னும் சின்னத்துரை, அருளம்பலம், காத்திகேசு முதலிய பலர் தாம் பிறந்த திசைக்கு இசை நிறுவி வருகின்றார். வைத்திய பகுதியிலும் எம்மூரவர்கள் பலர் கைதேர்ந்த சிறந்த வைத்தியராய் கடமை புரிந்து வருகின்றார்.

மகான்:—நம்மூரவரான வைத்தியர் சிலரை நாமுமறிய கூறும் தம்பி!

திருச்சிற்றம்பலம்:—யான் குவாலாலம்பூர் என்ற இடத்திலிருந்தேன், பல வருடங்களாய் வசித்து வந்தேன். அங்குள்ளோரைத்தான், யான் நன்றாய் அறிவேன். மற்ற மற்ற நகரிகளிலும், எம்மவர் பலர், நல்ல பதவிகளில் சிறந்து விளங்குகின்றார். வைத்தியர் சிலரின் நாமங்களோ விள்ளுமாறு நவின்றீர்கள், துரைசாமி என்றொருவர் விசுவலிங்கம் என்று பின்னொருவர், பொன்னம்பலம் என்று இன்னுமொருவர், துரையப்பா, தில்லையம்பலம் ஆதியாம் பலருண்டு பெரியவரே! இவ்வூரிலிருந்து அறிவேறிய பலர் மலாய் நாடுகட்குச் சென்று திரும்பி வந்துள்ளார். அங்குள்ள எம்மவரின் ஒற்றுமை, உத்தியோகச் சிறப்பு, கொடையாதியாம் விஷயங்களைப் பற்றி யாவரும் வியந்தே பேசியிருக்கின்றனர். சாலஞ் சென்ற பிரக்கிராசியார் காசிப்பிள்ளை அவர்கள், மலாயாவுக்கு வந்து ஊருக்குத் திரும்பி வந்தபோது, அவர் பலர்க்குங் கூறியதென்ன? எம்மாட்கள் இவ்வளவு சிறந்த உத்தரவாதமான உத்தியோகங்கள் வகித்திருக்கின்றார்களென்றும அவர்களின் பெரு மனங்கள் தமக்கு ஆச்சரியத்தை விளைத்ததென்றும் இன்னும் பலவாறுப் புகழ்ந்தும் நயந்தும் கூறியதை அறிய மாட்டீர்களோ பெரியவரே?

மகான்:—தம்பி! நீர் கூறிய பிரக்கிராசியார் மாத்திரமல்ல. பலர் மிக வியப்பாய்த்தான் பேசினதை யானறிவேன். சிங்கப்பூரைக் கண்டபின் தான் எம் தேசம் எல்லா விதத்திலும் முன்னேற்

றமடைந்திருப்பது. ஐயோ! கம்பி! இப்படி டெல்லாமிருக்க மலாய்த்தேச அரசினர் வருங்காலத்தில் நம்வாலிபருக்கு உத்தியோகம் கொடாராம். எவ்வளவு பெருந் துக்கம்.

திருச்சிற்றம்பலம்:—ஆங்கிலர் ஆணை மலாயாவிற் தொடங்கிய காலத்தில் ஊர்வர்களான மலாயர் ஆங்கில கல்வி சிறிதுமில்லாதவர். ஆதலாற் தான் இந்தியர் இலங்கையர் பலரை அரசாய் எழுதி அழைப்பித்தது. உத்தியோகத் தேடித் தாமாய் வந்த யாவருக்கும் தக்க தக்க உத்தியோகங்களீந்தனர். தற்காலத்திலோ ஆங்கிலக் கல்வி கற்ற மலாயர் வருடவீதம் தொகையில் அதிகரித்து வருகின்றார். அங்குள்ள உத்தியோகங்கள் அவர்கட்கே போர்தாதிருக்கையில், இந்தியர் இலங்கையர்க்கு உத்தியோகங்கள் கொடுக்க எவ்வாறு இயலும். அரசுக்கு அதிபர் பிரித்தானியர். ஊருக்கதிபர் அவ்வூர்ச் சுல்தான்மார். சுல்தான்மார் கூற்றுக்கே அரசு கவனிக்க வேண்டியதே. தனக்குக் கண்டு தானேயாரும் தானம் வழங்குவது பெரியவரே!

மகான்:—நீர் சொன்னவை மெத்தவுஞ் சரி தம்பி, ஆயின் அந்தர காலங்களில் உதவி செபதோரை எந்தக் காலத்திலும் மறக்கலாமோ? "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்பது மேதாவியார் வாக்கு. இதற்கு காரணம் ஒன்று சொல்லுவேன் கேளும்! சில வருடங்களின்முன் இங்கிலாந்து தேசத்தில் நிகழ்ந்த கிளர்ச்சியொன்றில் அறிவு அனுபவம் பெருத்துள்ள அங்கிலேயர் பலர் தங்கள்தேசம் இராசாதிபத்தியமாயிருப்பானேன்? பிரான்ஸ், அமெரிக்கா முதலிய தேசங்கள் யவும் அரசுமுறை பிரசாதிபத்தியம் அப்படியிருப்பது செலவுச் சுருக்கமல்லாமல் காரிய கெட்டித்தனமுள்ளோர் மாறிமாறி அரசில் சிரசாய் வரலாம். பிரித்தானியாவில் ஒரேயொரு குடும்பத்தார் மாத்திரம் சந்தானம் சந்தானமாய் தேசத்தின் அரசராய் வரவேண்டியதேன்? தேசத்திற்குரிய நன்மையோ தீமையோ யாவும் அத்தேசக் குடிபதிகட்குச் சமபங்காயன்றே இருத்தல் வேண்டுமென்று வாதாடியபோது, அக்காலத்தில் பிரதம மந்திரியாயிருந்த 'லோயிற் சோர்ஸ்' அவர்கள், சாற்றிய பதில் எல்லோரையும் மௌடக்கப் பண்ணிற்று. தக்க நியாயமென்று கண்டால், பிரித்தானியர் தாம் பிடித்த முயலுக்கு மூன்றே காலென்று குதர்க்கமாடும் குணமுடையரன்று. இப்போ தியாலம் மெத்தச் சென்றுவிட்டது. யான் சற்ற அவசியமாய்ப் போக வேண்டும். எஞ்சிய பாகத்தை இன்னோர் முறை பேசலாம் தம்பி!

திருச்சிற்றம்பலம்:—மந்திரியார் கூறிய பதில் அறிய யான் மெத்தவுமாசிக்கின்றேன். நீங்கள் போக விரும்பும்போது யானதைத் தடுக்கவும் படாது. ஆதலாற் தற்போது போய் வாருங்கள். கூடிய கெதியிற் திரும்பி வாருங்கள். 'நமஸ்காரம்' பெரியவரே போய் வாருங்கள்.

[இன்னும் வரும்]

பெண்கல்வி

இவ்வுலகில் வாழும் மானிடர் ஆன்மாவிலே, ஆண், பெண் என்ற வேற்றுமையில்லை. இவ்வேற்றுமை இரு பாலாரின் உடல் அமைப்பையொட்டி அமைந்திருப்பதேயாகும். கல்விச்செல்வம் இரு பாலாருக்கும் பொதுவானதாக இருந்தும், பெண்கள் பயிலும்கல்வியை 'பெண்கல்வி' என்று சொல்வதுபோல், ஆடவர் பயிலும் கல்வி 'ஆண் கல்வி' என்று சிறப்பாகக் குறிப்பிட்டுக்கூறக் காணோம். தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் கல்வியைப்பற்றிப் பேசும்போது, பொதுவாக 'வாழும் உயிர்க்கு' என்றும், 'மாந்தர்க்கு' என்றும் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கதாகும். பண்டைக்கால நம் திருநாட்டிலே, வேதகாலத்திய மாதர்மணிகளும் சங்க காலத்திய மங்கையர் திலகங்களும் ஆடவர் பயின்று வந்தகல்வியையே தாமும் பயின்றதாகத் தெளியக் கிடக்கிறது. ஆதலின், பண்டைய நீதி நூல்களிலே கல்வியைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'பெண் கல்வி' என்று தனியே பிரித்துக்கூறவேண்டிய அவசியம் நேராதொழிந்தது. பண்டைய பெண்மணிகள் கல்விப்பயிற்சியில் பூரணசுதந்திரம் பெற்றவர்களாக விளங்கியதால, கல்வித்துறையில் 'பெண் கல்வி' என்று பிரிவு ஏற்படுத்த அவசியம் நேராமற்போயிற்று. இவ்வாறு கூறுவதால், ஆடவர் பயிலும் கல்விக்கும், மாதர்கள் பயிலும் கல்விக்கும் எத்தகைய வேற்றுமையும் இருக்கக்கூடாது என்று கூறுவதாக எவரும் எண்ணிவிடக் கூடாது. உடலமைப்பில் மட்டுமன்றி உள்ளப்

போக்கிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பல வகைப்பட்ட வேற்றுமைகள் இருக்கின்றன என் பதை எவரும் மறுக்கமுடியாது.

ஆணுடல் தாங்கி உலவினும் பெண்தன்மை மிகுத்திருப்போரும், பெண்ணுடல் பெற்றிருப்பி னும் ஆண்தன்மை மிகுத்திருப்போரும் கூட பற் பலர் உண்டு என்பதையும் மறந்துவிடக்கூடாது. அங்ஙனமிருக்க அனைவரும் ஒரே விதமான கல் வியையே பயிலவேண்டுமென்பது இயற்கை நெறிக்குப் பொருந்தாது.

கல்வியை இரு பிரிவாகப் பிரிக்கலாம். ஒன்று பொதுக்கல்வி; மற்றொன்று தொழிற்கல்வி எழுத்து—கணக்கு—இலக்கணம் இலக்கியம் முதலியன பொதுக்கல்வியிலடங்கும். கைத் தொழில்—வியாபாரம்—குடும்ப நிர்வாகம்—பாக முறை—சங்கீதம்—வைத்தியம் முதலியன தொ ழிற்கல்வியிலடங்கும். பொதுக்கல்வியாகிய அடிப் படைக்கல்வி எவ்வளவுக்கெவ்வளவு சிறந்தமுறை யிலமையுமோ அவ்வளவுக்கவ்வளவு மேற்கல்வி யில் சிறந்து விளங்கக்கூடும். ஆடவர் கணக்கு வேறு; பெண் கணக்கு வேறு என்பதில்லை. ஆடவர் இலக்கணம் வேறு; மாதர் இலக்கணம் வேறு என்று பிரிப்பதற்கில்லை. ஆடவர் நுகரும் இலக்கியச்சுவை வேறு; மாதர் நுகரும் இலக்கியச் சுவை வேறு என்ற வேற்றுமைக்கிடமில்லை. ஆத லின், மேற்சொல்லிய அறிவு முதலியன பொருந் திய பொதுக்கல்வியில் ஆடவர்களுக்கு ஒருவகை; மாதருக்கு வேறு ஒருவகை என்று பிரிப்பது சாத்தியமில்லை.

தற்காலத் தமிழ் நாட்டிலே, பெண்கள் பெறும் அடிப்படைக் கல்வியாகிய பொதுக்கல்வி எந்நிலை யிலிருக்கிறது என்பதைச் சிறிது கவனிப்போம். நம்நாட்டிலே, நகரங்களிலும் நகரங்களைக் கட்டியும், அந்நாகரீகம் புகாத கிரா மங்களே மிக அதிகமென்பது பலரும் அறிந் ததே. பெண்களுக்கென்றே பிரத்தியேகமாக நடத்தப்படும் பெண் பாடசாலைகள் நகரங்களி லமைக்கப்பட்டிருக்கிறதேயன்றி, கிராமங்களில மைக்கப்பெறவில்லை. மேலும், நகரங்களிலுள்ள பாடசாலைகளுக்குப்பெண்கள் படிக்கச் செல்வ தும் சர்வசாதாரணமான காட்சியாக இருக்கிறது.

ஆனால் கிராமங்களிலோ அக்காட்சியைக் காண் பது மிக மிக அரிதே! நமது நாட்டில் கேவலம் பழக்கத்தினால் மட்டும் பிரபலமடைந்திருப்பன வும் குறுகிய நோக்கமுடையோர்க்கு பயன் படு வனவுமாகிய பழமொழிகள் சிலவும் வழங்கி வரு வது பெரிதும் வருந்துவதற்கு இடமாகும். அத் தகைய பழமொழிகளுள் "அடுப்பூதும் பெண்க ளுக்குப் படிப்பெதற்கு"? என்பது ஒன்று. அப்பழமொழி பெண் கல்வியை எதிர்க்கும் ஆட வர்களாலன்றி; சமையலறையையே தங்களுக்கு உரிய பள்ளிக்கூடங்களாக எண்ணிக்கொள்ளும் பேதைமாதர்கள் சிலராலும் அடிக்கடிக் கூறப் பட்டு வருகிறது, அவர்களது உணர்ச்சி—அறிவு —கடமை—கவனம்—பொழுது போக்கு முதலி யன சமையலறையைப் பற்றிய விஷயத்துடனேயே அடங்கிக்கிடக்கவேண்டும் என்பதும்; அதற்கு மேற்போவது பெண்தன்மையை மீறி நடப்பதா குமென்பதும் அவர்கள் எண்ணம்போலும்! அந்தோ! என்ன அறியாமை! சீதையும் பாஞ்சா லியும் சகுந்தலையும் சமையலறைக்குள்ளேயே சிறைப்பட்டுக் கிடந்திருப்பின், இன்று அவர்க ளது புகழொளி எங்கணும் பரவி நிற்கக்கூடுமோ? 'சாண்பிள்ளை ஆனாலும் ஆண்பிள்ளை ஆகுமோ?" 'பெண் ஜன்மமோ, புண் ஜன்மமோ!' என்னும் பழமொழிகளும் பெண்மையின் பெருமையைப் பழிப்பதற்கே பயன் படுத்தப்பட்டு வருகின்றன.

இன்றைய தமிழ்நாட்டிலே, 'பிறந்தது பெண்' என்று கேட்டவுடனே பிரசவ அறையிலேயே பெற்றெடுத்த அன்னையே பெரிதும் கலித்து விடுகிறாள். மண்ணில் விழும்போதே பெண்ணு டல் பிறரால் பெரிதும் அலட்சியம் செய்யப்படுகி றது. உலகம் முழுவதையும் பூமி தேவியாகக் கொண்டு போற்றுவோர் நிரம்பிய நம் நாட்டிலே, அழகுத் தெய்வத்தை திருமகளாகவும், அறிவுத் தெய்வத்தைக் கலைமகளாகவும், வீரத் தெய்வத் தைச் சக்தியாகவும் கொண்டு வழிபடுவோர் நிரம்பிய நம் நாட்டிலே இறைவன் திருப்பெய ருக்குமுன் இறைவியின் திருப்பெயரை அமைத் துத் துதிப்போர் நிறைந்துள்ள இவ்வாரிய பூமி யிலே—பெண்மையின் பெருமையையும மகா சக்தியையும் இனிது வெளிப்படுத்திச்சென்ற வீர நாரிமணிகள் சிறந்து விளங்கிய இத்தேசத்திலே இன்று பெண்மைப் பெருமையின் பேரொளி பெரிதும் மங்கிக் கிடப்பது பெரும் வருத்தத் திற்கிடமாகும். இந்நாட்டில் இடைக்காலத்தில் இருந்த குறுகிய நோக்கமுடைய சில புலவர்கள், பெண்மக்களை நிலையற்ற பேதைமதியினராகவும், பேய்களாகவும், மாயையாகவும் வருணித்துப்பல பலவாறு பாடியிருப்பதை யாதாரமாகக்கொண்டு பெண்களைப்பெரிதும் பழித்துப் பிரசங்கம் செய் வோர் இன்றைய தமிழகத்தில் பெருகி வருகின் றனர்.

தற்காலத் தமிழ்நாட்டிலே, தெருவில் விளையா டும் பருவத்திலே சிறுமிகளைச் சமையலறைப் பித் துப் பிடித்துக்கொண்டு விடுகிறது. சமையல் தொழில் பெண்களுக்கே பெரிதும் சிறப்பாக உரிய தாதலின், சிறு பருவத்திலிருந்தே அவர் களை அதில் விருப்பங்கொள்ள விடுவது நன்றே என்பதை மறுப்பாரில்லை. ஆயினும் சமையல்

ஒன்றிலேயே பெண்களின் பொழுது முழுதும் கழிந்துவிடவில்லை என்பதை எவரும் மறந்து விடக்கூடாது, சமையலில் தலைப்படும் நேரம் போக, மிகுந்துள்ள ஓய்வு நேரத்தைப் பழுதற்றதும், பயனுள்ளதுமான நல்வழியில் கழிக்கச் செய்யவேண்டியது பெண்ணைப் பெற்றோரின் இன்றியமையாத கடமைகளுள் தலைசிறந்ததாகும் என்பதைக் கவனிக்கப்படவேண்டும். சமையல் தொழிலை ஒப்பேற்றிக் செய்துகொண்டிருப்பதாக மட்டும் இறைவன் பெண்களுக்கு அறிவை அளிக்கவில்லையென்பதையும்; ஆன்ம உய்வுக்குப் பயன் படுத்திக்கொள்ளவும் அவ்வறிவு பெண்களுக்கு ஆண்டவனால் அளிக்கப்பட்டுள்ளது என்பதையும் தற்கால தமிழகத்தினர் நன்கு சிந்தித்துணரவேண்டும். ஆடவர்களின். இன்பசுகங்களுக்காக மட்டும்பெண்கள் பிறப்பிக்கப்படவில்லை யென்றும் அவர்களின் வாழ்க்கைத்துணையில் சிறந்த துணையாக இருந்து தம்மையும், தம்மைச்சார்ந்தோரையும் இறைவனது இன்னருளுக்கு உரியோராக்கவே பெண்மணிகள் பிறப்பிக்கப்பட்டுளர் என்பதையும் ஒவ்வொரு ஆடவனும் நன்கு சிந்தித்து உண்மை தெளியக் கடமைப்பட்டவனவன்.

"பெண்கள் படிக்கக் கற்றுக்கொண்டு விட்டால், கொண்ட கணவனை மதிக்கமாட்டார்கள்; குடும்பவேலைகளையும் செவ்வனே செய்யமாட்டார்கள்; பெரியோருக்கு அடங்கி நடக்க ஒருப்படமாட்டார்கள்" என்று பேதைகள் சிலர் பெண் கல்வியைப் பழிப்பதுமுண்டு. அப்பழிப்பு, சிறிதும் பொருந்தாத அறிவிலிகள் கூறக்கூடிய உரையேயாகும். கற்புக்கரசிகளாகிய சீதை, சாவித்திரி, பாஞ்சாலி முதலிய பெண்கள், கல்வியறிவு பெற்றதால் கற்பொழுக்கத்தில் சிறந்து விளங்கவில்லையா? இயற்கையில்—பிறவியிலேயே அமைந்த நற்குணங்கள் பெரிதும் சிறந்து விளங்கச்செய்வதற்கு, கல்வியறிவு ஒப்பற்ற துணையன்றோ! சகித்தற்கரிய கொடிய சோதனைகளுக்கு உட்பட நேரும்போது, பெண்கள் தங்களது கற்பொழுக்கத்திற்கு எத்தகைய பழுதும் நேராதவாறு தங்களைத் தாங்களே காத்துக்கொள்ளக்கூடிய மனஉறுதியை அளிப்பது கல்வியன்றோ! கற்புப்பயிருக்கு கல்வியறிவு ஒப்பற்ற எருவேயாகுமன்றோ!

ஆனால், பெண்கல்வி எத்தகைய முறையிலிருக்க வேண்டுமென்பதே கவனித்தற்குரியது. தற்காலத் தமிழ்நாட்டிலே, பெண்பாடசாலைகள் யாவும் நவீன நாகரீகம் நிலவும் நகரங்களிலேயே அமைக்கப் பட்டிருக்கின்றன வேயன்றி நவீன நாகரீம் பரவாத நாட்டுப் புறங்களில் அமைக்கப்படவில்லை என்பதை முன்னரே சொன்னேன். நாட்டுப்புறங்களிலுள்ள பாடசாலைகளில் பெண்குழந்தைகள் படிப்பது அபூர்வம். எங்கோ அருமையாகப் படிக்கும் குழந்தைகளும் ருதுவானவுடன் நிறுத்திக்கொண்டு விடப்படுவதால் அவர்கள் படிப்பு இரண்டொரு வகுப்புகளோடு முடிவடைந்து விடுகிறது. ருதுவான பின்பும் கிராமப் பாடசாலைகளில் பெண்கள் படிப்பது அசௌகரியம் என்பதை யான் ஆட்சேபிக்கவில்லை. ஆகையால் கிராமங்களிலும் பெண்பாடசாலைகள் ஸ்தாபித்தல் மிக அவசியமானது.

நகரங்களிலுள்ள பெண்பாடசாலைகளில், பெண்கள் ருதுவான பின்னும் கூட தாராளமாகக் கல்விபயின்று வருகின்றனர். ஆனால் அவர்கள் பயிலும் கல்வி நமது நாட்டு நாகரீகத்திற்கு அரண் செய்வதாக இன்றி பல வழிகளிலும் முரண்படுவதாக அமைந்திருப்பது பெரிதும் வருந்துதற்குரியது. நகர கலாசாலைகளில் கல்வி பயிலும் பெண்கள், தமிழ்நாட்டு நாகரீகத்திற்கு இணங்க உடை உடுப்பதை அநாகரீகமாகக் கொள்கின்றனர். தலையில் நல்ல வாக்கு நடுவே யிருக்க கோணவாக்கு குறுக்கே எடுத்துச் சீவிக் கொள்கின்றனர். திலகமிலங்கத்தக்க அழகிய நெற்றியை மேல்நாட்டு வாசனை மாக்களால் பாழ் நெற்றியாகப் பண்ணிக்கொள்ளுகின்றனர். நடை, உடை, பாவனைகளில் மேல்நாட்டு நாகரீகத்தையே கூடிய வரையில் தழுவி நடக்க பெருவிருப்பம் கொண்டு விடுகின்றனர். அவர்கள் கல்விபயிலும் கலாசாலைகள் பெரிதும் கிறிஸ்த்தவர்களால் நடத்தப்படுவதாக இருந்தாலும், இந்து மாணவிகள் தங்களது சொந்த மதத்தின் சிறப்புகளையும், புராதன வீரப்பெண்மணிகளின் பெருமைகளையும் தமிழ்நாட்டு நாகரீகத்திற்கு இயைந்த பழக்க ஒழுக்கங்களையே மேற்கொள்ள வேண்டியதின் இன்றியமையாமையையும் உணர்ந்துகொள்ளாமற் போகிறார்கள். அத்தகைய நவீன நாகரீகக் கல்வி பயின்றபெண்கள் இல்லற வாழ்க்கையில் புகும்பொழுது, தமிழ்நாட்டுப் பழக்க ஒழுக்கங்களும் புராதன புண்ணிய சரித்திரங்களும் அவர்களுக்குப் பெரிதும் வெறுப்பாகத் தோன்றுகின்றன. அத்தகைய பெண்கள்—அறிவு வளர்ச்சிக்கும், ஆன்ம உய்வுக்கும், கற்பு ஒழுக்கத்திற்கும், குடும்ப நிர்வாகத்திற்கும் பெரிதும் துணைசெய்யக்கூடிய செந்தமிழ் நாட்டுச் சீரிய நூல்களைச் சிறிதும் விரும்பாது மேல்நாட்டுப் பழக்கவழக்கங்களில் பெரு மோகம் கொள்ளச் செய்விப்பனவும் வீண்பொழுது போக்குக்கேயன்றி குடும்ப நிர்வாகத்திற்குரிய சீரிய பொருள்களைப்பற்றிச் சிந்திக்கச் செய்விக்காதனவுமாகிய—காமச்சுவை நிரப்பிய நாவல்களிலே ஆவல் மிகுந்து நிற்போராகின்றனர். மேல்நாட்டு நாகரீகம் வேறு, நம்நாட்டு

நாகரீகம் வேறு என்பதை அத்தகையோர் கவனிப்பதில்லை. வியாபார ஸ்தலங்களிலும் காரியாலயங்களிலும் நந்தவனங்களிலும் வீதிகளிலும் சிறிதும் கூச்சமின்றி சர்வசாதாரணமாக மாதர்கள் ஆடவர்களோடு சமானமாகக் கலந்து பழகும் மேல் நாட்டு நாகரீகத்திற்கும், எவ்வளவு கற்றிருப்பினும் இல்லத்திற்குள்ளேயே இருந்துகொண்ட கணவருடன் இன்பவாழ்வு நடத்தவே விரும்பி நிற்கும் இந்நாட்டு மாதர்களின் நாகரீகத்திற்கும் வாழ்க்கையின் நோக்கத்திலேயே எவ்வளவோ வேற்றுமைகள் உண்டென்பதை நவீன நாகரீகப் பிரியர்கள் ஒவ்வொருவரும் நன்கு கவனிக்க வேண்டும். நவீன நாகரீகப் பித்தை வளர்க்கும் கல்விபயின்ற பெண்கள் குடும்பவாழ்வில் புகும் போது, பண்டைக்காலப் பழக்க ஒழுக்கங்களில் பற்றுமிகுந்துள்ள மாமனார், மாமியார் முதலியவர்களுக்குத் திருப்திகரமான வாழ்க்கை நடத்த முடியாமற் போவதால் இல்லற வாழ்வு இன்ப வாழ்வாக அமைவதற்குப்பதிலாக பெருந்துன்ப வாழ்வாக மாறுதலியல்பன்றே!

ஆண்மை திண்மையின் மாண்பில் உயர்ந்தது; பெண்மை—மென்மையின் பெருமையில் சிறந்தது. ஆண்மை—வீரத்தால் சிறந்து விளங்கக் கூடியது; பெண்மை—அன்பாலுயர்ந்து விளங்கக் கூடியது. ஆண்மை கம்பீரத்தினால் புகழ் பெறக்கூடியது; பெண்மை அடக்கத்தினால் புகழ்பெறக்கூடியது. ஆண்மை—கடமையினால் உயர்வுறக் கூடியது; பெண்மை—கருணையினால் சிறப்புறக்கூடியது. ஆண்மை—தொண்டின் சிறப்பால் போற்றத்தக்கது. பெண்மை—திடகாத்திரத்தின் உயர்வால் புகழத்தக்கது. ஆண்மை—நிர்வாகத்தினால் சிறந்து விளங்கக்கூடியது. பெண்மை—பொறுமை நலனால் உயர்ந்து விளங்கக்கூடியது. ஆடவனது சீரிய அன்பு மலையின், அவனது சிந்தைக்கினிய மனைவியின் காதல் மணம்போன்றது. இருவரது உடல்களும் வெவ்வேறாக இருப்பினும் ஒருவர்க்கொருவர் ஒப்பற்ற துணையாக விருந்து, இருவரும் கருத்து ஒருமித்து இன்பவாழ்வு நடத்துவதே உண்மை இல்லற வாழ்வு நடத்துவதாகும். அத்தகைய சீரிய வாழ்வுக்குப் பெண்களை பண்படுத்தக் கூடிய கல்வியே உண்மைப் பெண்கல்வியாகும்.

(தொடரும்)

- நகையெனுங் கொடிய பேய் -

[சி. இரத்தினம் அவர்களால் எழுதப்பட்டது.]

இத்தேசத்தில் நம்மக்களிடையே தற்காலம் நகையெனுங் கொடிய பேய் பரவி அநேகரை வருத்தி வருகிறது. ஏழ்மை நிலையான குடும்பங்களிலுள்ள நம் சகோதரிகளிலனேகர் தம் அறிவிழந்து பணக்காரப் பெண்கள் அணிந்து கொள்ளும் விதம்விதமான ஆபரணங்களைப்போல் தங்களுக்கும் செய்வித்துக் கொடுக்கும்படித் தம் பத்தாமாரைப் பெரிதும் வருத்துகின்றனர். தமது மனைவிமாரின் மனசைத் திருப்திப்படுத்த வேண்டி அனேகர் கடன்பட்டோ, அல்லது காணி பூமிகளை ஈடு வைத்தோ, நகைகளை வாங்கி அணியச் செய்து மகிழ்கின்றனர்.

இவர்கள் மகிழ்ச்சி நீடித்து நிற்குமா? வாங்கிய கடன் ஒன்றுக்கு இரண்டாகப் பெருகி, ஈற்றில் கடன்காரர் என்ற நாமத்தைச் சூட்டி, அவர் தம் இன்பத்தைத் துன்பமாகவன்றே மாற்றிவிடுகின்றது. நகைப் பயித்தியத்தினால் எத்தனைவித மான கஷ்டங்களையும் துன்பங்களையும் அடைகின்றனர். அந்தோ எத்தனை குடும்பங்கள் அல்லலுறுகின்றன. திருவிழா, கலியாண வீடு போன்ற விசேஷ தினங்களில் அவர்கள் பத்தாமார் படும் கஷ்டம் சொல்லி முடியாது. தெருத் தெருவாய், வீடு வீடாய்ச் சென்று, இரவல் வாங்கி வந்து கொடுத்த போதிலும், இந்தக் காப்பு மிச்சம் பெரியது, அட்டிகையோ பற்றாது, சங்கிலி மிகச்சிறிது, என்ற முணுமுணுப்புத்தான் கேட்க வேண்டியிருக்கிறது. எந்நேரமும் வீட்டில் சண்டை சச்சரவு நடந்து கொண்டே இருக்கும். சில வீடுகளில் ஆடவர் தம் வறுமையின் நிலையை எத்தனை விதமாக எடுத்துச் சொன்னபோதிலும் திருப்தியே கிடையாது.

"தன்னுரை கொளாத மனைவாழ்க்கை
யது துன்னின்
வெங்நிரையம் வீழும் வகையே
விழுமிதம்மா
வன்னொடு மேவியம ராடவர்
தமக்குப்
பின்னுமொரு கூற்றுமுளதோ
பிணியுமுண்டோ

என்னும் ஆன்றோர் வாக்குப்போல் அவர்களுக்கு வேறு எமன் வேண்டுவதில்லை.

ஆனால் சில ஆடவர் தம்மனைவிமார் தடுத்த போதிலும் கேளாது, பிறர் மெச்ச வேண்டுமென்று, வரவுக்கு மிஞ்சிய செலவு செய்து கடன் பட்டு நகைகளை வாங்கி, மனைவியரை அணியச் செய்கின்றனர். இப்படியான ஆடவர்க்கு மனைவிமார்,

"ஆனமுசலில் அதிகம் செலவானால்
மானமழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும கள்வனுப் ஏழ்பிறப்புத் தீயனுய்
நல்லார்க்கும் பொல்லானுப் நாடு"

என்ற நீதி வாக்கியத்தை எடுத்துரைக்க வேண்டும். நம் தேச மக்கள் வரவுக்குத் தக்கபடி அவசியமான செலவுகளை செம்மையாகச் செய்து, மானமாக வாழ்ந்து வருவதை விட்டு, பிறர் மெச்ச வேண்டுமென்ற வீண் டம்பாச்சாரித் தனத்திற்கு அடிமையானால் நம் சமூகம் முன்னேறுவதெப்படி. நல்லொழுக்கமும், நற்குணமும், தெய்வபக்தியுமே, தம் சமூகத்திற்கு அவசியமானவை. வெளிப்பகட்டுக்காக நகைகளை அணியாதிருந்தால், நம் இயற்கையழகும் இருதய செளந்தரியமும், உயர் குணமும்குறைந்து விடுமா? ஆதலால் அறிவுடைய தனவந்தர்களாயுள்ள, சகோதரிகளே! நம் தேச முன்னேற்றங் கருதி அதிகமான நகைகளை அணியாதிருப்பீர்களாயின், அறிவில்லாத ஏழைச் சகோதரிகளின் கஷ்டங்கள் நிவர்த்தியாகும். நகை யெனுங் கொடிய பேயின் வேகத்தை அடக்க வல்லவர் நீங்களே. இப் பிசாசு நம்மை விட்டகன்றாலொழிய நாம் மீட்சியடைய மார்க்கமில்லை. எல்லாம் வல்ல இறைவன் துணை புரிவானுக.

கடிதம் 1 எனது அபிப்பிராயம்

சென்ற சில மாசங்களாக வழிகாட்டி என்னும் சஞ்சிகையைத் தொடர்பாக வாசிக்கும் பாக்கியம் பெற்றேன். அது மலாய் நாட்டில் வாழும் இலங்கையருக்கு ஒரு உண்மையான வழிகாட்டியாகவேதுலங்குகிறது. அப்பத்திரிகையில் ஐக்கிய நாணய சங்கமொன்றுலென்ன, என்பதை விளக்கி, அதனுல மனிதனடையக் கூடிய பலாபலன்களை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இப்பத்திரிகையை நடத்தும் யாழ்ப்பாணத்தவர் ஐக்கிய சங்கத்தில் மலாய வில் வாசஞ் செய்யும் ஒவ்வொரு யாழ்ப்பாணத்தானும் அங்கத்தவனுயிருந்த வேண்டியது இன்றியமையாததாகும்.

அப்பத்திரிகையில் பெண்களுக்குக் கொடுக்கப்படும் சீதனத்தைப் பற்றி பலரும் பலவாறுக வரைந்துள்ளார்கள். அவர்களுடன் சேர்ந்து நானும் அவ்விஷயம் பற்றிச் சில சொல்ல விரும்புகிறேன். சீதனம் பெண்களுக்குக் கொடுக்க வேண்டியது அத்தியாவசியமே. ஆனால் எப்படிக் கொடுபட வேண்டுமென்பதுதான் கேள்வி? ஒரு மணமகனும், மணமகளும் ஒருவரை ஒருவர் உள்ளன்புடன் நேசித்துக் காதலித்து விவாகஞ் செய்ய முன் வருவார்களாயின், சீதனம் இல்லாதொழியும். இத்தகைய விவாகம் நம்மவருள் நடப்பது மிக அரிது. யாழ்ப்பாணத்தவர் நடைமுறையிலிருந்து வரும் விவாக முறையில் சீதனமும் ஒரு அம்சமாகும். விவாகத்திற்கு முன் மணமகனே, மணமகளை ஒருவர் காண்பதில்லை. பேசுவதுமில்லை. இதனல் ஒருவரின் மனோபாவம் மற்றவருக்குத் தெரியாது. விவாகமான சில நாட்களின் பின்பே எல்லாம் தெரிய வரும். இருவரும் ஒரே குண முடையராயின் அவர்கள் மன நிம்மதியாகத் தம் வாழ்நாட்களைக் கழிப்பர். ஆனல் அது வேறுபடின் என்ன செய்வது. பிரிந்து வாழ யோசிப்பரன்றே. அப்படிப் பிரிந்து வாழும்போது அப்பெண் தனது பெற்றோரால் கொடுக்கப்பட்ட சீதனப் பொருளைக் கொண்டு வாழ்க்கையை நடத்துகிறுள். யாருடைய உதவியுமின்றி இருக்கும்போது உதவுவதற்காகத்தான் சீதனம் கொடுக்கப்படுகின்றது.

இக்கால நிலைக்கேற்ற சீதன முறையில் இரு விதிகள் கையாள வேண்டியது அத்யாவசியமாகும். அதற்கு ஆடவரது உதவி வேண்டற்பாலது. ஒரு பெண்ணுக்குச் சீதனம் கொடுக்கும் போது, மணமகனின் அந்தஸ்தும், வருமானமும் கவனிக்கப்பட வேண்டும். அவை அதிகமானல் சீதனம் குறைவாகக் கொடுபடலாம். இத்தகைய விவாகம் சீதனமின்றி நடை பெறுவதே மேல். இப்படியான விவாகங்களைச் செய்வதற்குத் தனவந்தர்களாகிய வாலிபர் முன்வரல் வேண்டும். இம்முறையில் விவாகம் செய்தால் புருடனின் வருமானத்திலிருந்தே தமது சீவியத்தையும் நடத்

திப் பிற்கால சீவியத்திற்கும் பொருள் சேமித்து வைப்பர்.

உண்மையில் கஷ்டப்பட்டுழைக்கும் குறைந்த வருமானமுள்ள வாலிபனுக்குப் பெண்ணைக் கொடுக்கும்போது அப்பெண்ணுக்கு மனச்சோர்வின்றிப் பெற்றோர் தங்களாலியன்ற சீதனம் கொடுப்பதே முறை. ஏனெனில் இச்சீதனப் பொருள் அவ்வாலிபனை இன்னும் தீவிரமாகத் தன் முயற்சியில் ஈடுபடத் தூண்டிவிடுகின்றது. அத்துடன் அவர்கள் இருவரும் தமது சீவியத்தை மனமொன்றிச் செழிப்பாய் நடத்த ஏதுவாகும்,

வாலிபர் தமக்கு வாய்க்கப் போகும் மனைவியாரின் பிற்காலச் சீவியம் தொந்தரவின்றி நடைபெற வேண்டுமென விரும்பின் இவ்வளவு சீதனம் தர வேண்டுமென்ற அனியாய விடாப்பிடியைக் கைவிட வேண்டும். தங்கள் மனைவியாரின் பெற்றோர் வருந்துவதைத் தடைசெய்ய வேண்டும் என்ற அரிய விருப்பமும், நம்மிடையே சீதனமின்றி அவதியுறும் அரிவைகள் மணந்து இன்புற்றிருக்க வேண்டுமென்ற பரோபகார எண்ணமும், உடைய வாலிபர்கள் மனத் திருப்தியுடன் வாழ்ந்து நிம்மதியாகக் காலம் கழிப்பார்கள்.

இலங்கை, கா. தூறை, ச. மு. அருளம்பலம்

கடிதம் 2

சங்கீதம்

பத்திராதிபர்,
"வழிகாட்டி"

ஐயா,

இம்மாத (கார்த்திகை) "வழிகாட்டி"யில் "சங்கீதம்" எனும் தலைப்பின் கீழ் வெளியாகியிருக்கும் கட்டுரையைப் படித்தேன். அக்கட்டுரையின் முதற் கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டிருப்பதால், அதைப் பற்றி நானும் என் அபிப்பிராயங்களைச் சுருக்கமாக எழுத முன் வந்தேன்.

அக்கட்டுரை எழுதிய ம. க. அவர்கள் என் கட்டுரை சம்மந்தமாக எந்த ஒரு குறிப்பிட்ட நோக்கங் கொண்டு அதை எழுதியிருக்கிறாரென்பதை கட்டுரையின் எந்தவிடத்திலும் பகிரங்கமாய்க்காட்டிக் கொள்ளாமலேயே எழுதியிருக்கிறார். இதானது, "புலியைப் பார்த்துப் பூனை சூடுபோட்டுக்கொண்ட கதையையே கவனப்படுத்துவதாயிருக்கிறது.

கட்டுரையாளர், எனது முதற் காரணத்தைப் பற்றி எழுதியிருப்பதில், "அந்தந்தக் காலங்களில் ஏற்பட்ட சங்கீத வித்வான்களென்போர், தங்கள் தங்களுக்குத் தோன்றியபடி பலவிதமாய் (சங்கீதத்தை) அமைத்திருப்பதற்கும, இம்மலாய் நாட்டில் சங்கீதம் கற்கும் பெண்மக்களின் சங்கீதத் தேர்ச்சிக்கும் என்ன சம்மந்தமிருக்கிறது" என ஒரு அருமையான கேள்வியைக் கேட்டிருக்கிறார். இதில் தளியேனும் அர்த்தமோ, பொருளோ இருக்குமாயின், என் முதற்கட்டுரையில் கூறிய பலவித சங்கீத அமைப்புகளில் எந்த ஒரு அமைப்பைக்கொண்டும் இந்நாட்டில் பெண் மக்கள் சங்கீதம் கற்றிருக்கவில்லை யென்பதை டல்லவோ எடுத்துக் காட்டியிருக்க வேண்டும்!

முடிவாகக் கூறுமிடத்து "பூர்வீக சங்கீத உண்மை"க்கு முன்னமைக்கப்பட்டிருக்கும் எல்லா சங்கீத அமைப்பு (நம்மவர் கைக்கொண்டது) சம்பந்த நூல்களும், இக்கால சங்கீத வளர்ச்சிக்கு முறையற்றதுதான், ஞாயமற்றதுதானென்பதை "பூர்வீக சங்கீத உண்மை"யைக் கொண்டு தகுதியுடைய எவரும் நன்கு உணரலாம். இல்லாவிடில், அந்நூல் வெளியாகி 7 வருடங்களாகியும் இந்தியாவில் நாளதுவரையில் அதை எதிர்க்க ஏன் எவரும் முன்வரவில்லை?

ஆதார சுருதியிலிருந்து ஒரு ஸ்தாயிலுள்ள ஏதாவதொரு சுரஸ்தானத்தையோ, அன்றி ஒரே தடவையில் பல சுரங்களின் ஸ்தானங்களையோ, அந்தந்த ஸ்தானத்திற்குரிய எழுத்தை (ஸரிகமபதநி)க் கொண்டு சொல்லிக் காட்டத் தகுதியுடையவர்கள் (இவர்களே சங்கீதத்தில் சுர ஞானம் பெற்றவர்கள்) என் இரண்டாவது காரணத்தை மனப்பூர்வமாய் ஒப்புக் கொண்டே தீருவார்கள். ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அல்லது ஒப்புக் கொண்டே தீர வேண்டும். உண்மை இப்படி இருக்க, எவரும் ஒப்புக்கொள்ளத் தக்க சரியான காரணம் காட்டாது என் இரண்டாவது காரணத்தைக் குறைகூறமுன் வந்திருக்கும் அக்கட்டுரையாளரே அறியாமையைப் பூணுவது பொருந்தும் அறியாமையிருக்குமிடம் குற்றம் தாண்டவமாடுவது எங்கும் பகிரங்க ரகசியம்.

மற்றும், 'இந்நாட்டிலிருக்கும் சங்கீத சபாக்களும் அதில் கற்கும், கற்றிருக்கும் பெண் மக்களில் பெரும்பான்மையோரும், கற்பிக்கும் உபாத்

தியாயர்களிலனேகரும் குவாலாம்பூர் சங்கீத அபிவிருத்திச் சபாவிலனுசரித்து வரும் முறைகளேயே கையாண்டு வந்திருக்கிறார்கள். இச்சங்கீத அபிவிருத்திச் சபா, கென்னிந்திய சங்கீதக் கலாசாலைகளில் அனுசரித்து வரும் முறைகளேயே கையாண்டு வந்திருக்கின்றது. ஆகவே அம்முறைகள் முறையானதும். ஞாயமானதும் என்பது என் சிற்றறிவு" என்கிறார். இந்த விளக்கமோ, ஆதாரமோ சிறு பிள்ளைகளே, கண்ணை மூடிக்கொள் கதை சொல்கிறேனெனக்கூறித் தூங்க வைக்கும் பெற்றோர்களின் தந்திரத்திற் கொப்பாகமே இருக்கிறது. இல்லாவிடில் அவர் கூறும்முறையானதும், ஞாயமானதுமான அமைப்பைப்பற்றி அபிப்பிராய பேதமேற்பட்டிருக்கும் இச்சமயத்தில் அவர் தன் கட்டுரையில் எழுதி எல்லோருக்கும் விளங்கவைத்திருக்கவேண்டியதல்லவா முக்கியம்!

போகட்டும்; அவர் கூறும சங்கீத அபிவிருத்திச் சபையில் நான் ஆசிரியனுய் கடமை பார்த்த காலங்களில் எந்த அமைப்பைக் கொண்டு சங்கீத பாடங்கள் நடந்ததென்பதை என்ன காரணம் பற்றித் தன் கட்டுரையில் எழுதாமல் விட்டிருப்பார்!

இந்த விவரங்களே பகிரங்கமாய் தன் கட்டுரையில் சொல்லிக் கொள்ள முடியாத நிலையிலுள்ள ஒருவர், நானும், மதுரைப பொன்னுசாமி பிள்ளையவர்களும் கையாண்ட முறைகளேப்பற்றி தன் சொந்த அளவுகோல் கொண்டுதானளந்தறிந்திருப்பாரோ, அல்லது போலிக் குணம் படைத்த இரவல் அளவுகோல் கொண்டளந்தறிந்திருப்பரோ வென எவர் சந்தேகிப்பதிலும் என்ன ஆச்சரியமிருக்கிறது?

என் மூன்றுவது காரணம் (உண்மையான கலை விருத்தியாகும்படி பாடுபடாமை) கட்டுரையாளருக்கு விநோதமாயிருக்கிறதைப்பற்றி, நான் என்ன நினைக்கிறேனென, என்னை யாரேனும் கேட்பார்களாயின், சங்கீத சம்மந்தமாக அவரைப் பற்றி இதுவரையில் அபிப்பிராய பேதம் எவருக்கேனும் இருந்திருக்குமாயின், அதை அவரே இப்போது நிவர்த்தி செய்திருக்கிறரென்று மட்டும் கூறுவேன்.

கட்டுரையாளர், சிலவுக்குத் தக்கபடி இந்நாட்டில் பெண் மக்கள் சங்கீதத்தில் தேர்ச்சியடையாததை எந்த அளவுகோலாலளந்தறிந்தாரோ (நான்) என ஓரிடத்தில் எழுதிவிட்டு மற்றோரிடத்தில், அப்படி தேர்ச்சியடையாததற்கு வேறு காரணங்கள் கூறுகிறார். அப்படியவர் கூறும் காரணங்களுக்கு என் தராசுபடியை விட்டு அவரின் சொந்தத் தராசுபடியைக் கொண்டு பார்த்தெழுதியிருப்பாராயின் கண்ணியமாயிருந்திருக்கும்.

அக்காரணங்களில் முதலாவதாக "இந்தியாவில் மாதமொன்றுக்கு 50 ரூபா வருமானம் பெறக்கூடிய ஒருவரோ சங்கீத வித்வானென நாமஞ் சூட்டி மாதமொன்றுக்கு 150 ரூபா சம்பளத்தில் உபாத்தியாயராக ஏற்படுத்துவது" என்கிறார். தன் சொந்த ஊரில் சில விண்ணப்பங்களேப் பற்றியோ, இந்நாட்டில் ஒருவரின் சில வினங்களேப் பற்றியோ, அல்லது எதற்காக எவ்வளவோ பேர் தன் நாட்டை விட்டு மற்ற நாட்டுக்குப் போகிறார்களென்பதைப் பற்றியோ நான் இங்கு ஆராய்ச்சி செய்ய வேண்டியது அவசியமில்லை யெனறுணர்ந்து, என் கட்டுரையிலிருந்து கிளம்பிய இந்தக் காரணத்தின் கருத்தை இரு வகையில் உபயோகிக்கலாமென்பது என் எண்ணம். ஒன்று, இந்தியாவிலிருந்து உபாத்தியாயரை ஏற்படுத்தியவரோ, ஏற்படுத்தியவர்களோ, அந்தக் காரியத்திற்குத் தகுதியில்லை யென்பது. மற்றது, ஏற்படுத்தப்பட்டு இந்தியாவிலிருந்து வரும் உபாத்தியாயரென்போர் உண்மையிலேயே தொழில் திறமை இல்லாமலிருப்பது. இந்த என் இரண்டாவது அபிப்பிராயத்தை கட்டுரையாளர் மனத்துள் வைத்து என்னையும் தாம் குறிப்பிடுகிறபடி இந்தியாவிலிருந்து ஏற்படுத்திய உபாத்தியாயர்களில் ஒருவனென (அவரைத் தவிர) எவரேனும் நினைக்க வேண்டுமென எண்ணி ஏற்படுத்துவது" என எப்படியும் மாற்றிக் கொள்ளத்தக்க வார்த்தைகளை உபயோகப்படுத்தியிருப்பாராயின், அதில் எவ்வளவுதூரம் உண்மையிருக்கிறதென்பதை தெளிவாக்கும் பொருட்டு கீழ்க்காணும் சில குறிப்புகளே மட்டும் இப்போது தெரிவிக்கிறேன்.

1. சங்கீத அபிவிருத்திச் சபாவின் 11-வது வருட அறிக்கைப் பத்திரம் 5-வது பக்கத்தில் என்னைப்பற்றிய விஷயங்கள் கூறும்போது "இவர் சபா உபாத்தியாயராக அமர்ந்த பின்னர் மாணவ, மாணவிகள் அதிகம் தேர்ச்சி யடைந்திருக்கிறார்களென்பது குறிப்பிடத் தக்கது" என எழுதப்பட்டிருக்கிறது.

2. நான் சங்கீத அபிவிருத்திச்சபையினின்றும் விலகி இந்தியா சென்றபின் கட்டுரையாளர் முதன் முதலாக 5-9-35 தேதியிட்டு எனக்கெழுதிய 22 பக்கங்கள் கொண்ட ஒரு கடிதத்தின் ஓரிடத்தில் என்னைப்பற்றிக் கூறும்போது "தாங்கள் எங்கு சென்றாலும் பெருங் கீர்த்தியுடனிருப்பீர்களென்பதை நான் பூரணமாய் நம்புகிறேன். யான் சொற்ப நாட்கள் தென்னிந்தியாவில் [சில பாகங்களில்] சந்தித்த வித்வான்களென்ற பட்டதாரிகளிலும் பார்க்க தாங்கள் எவ்வளவு மேம்பாடுடையவர்களென்பதை யான் அறிவேன்.

தாங்கள் இன்னும் சொற்ப காலமிருந்து இச் சபாவை ஒரு உன்னத நிலைக்குக் கொண்டுவர அம்பாளருக்குச் சம்மதமில்லாமல் போய்விட்டது" என எழுதியிருக்கிறார்.

3. நான் மறுபடியும் சங்கீத அபிவிருத்திச் சபைக்கு ஆசிரியனுய் வரவேண்டுமென எனக்குப் பல கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

4. என்னிடமிருக்கும அவரின் கடிதப்படி இவ்வூர் இஷ்டமித்திர நடன சபைக்கு ஆசிரியனுய் என்னை ஏற்படுத்தும்படி மேற்படி சபையாரைத் தூண்டிவிட்டிருக்கிறார்.

5. இஷ்டமித்திர வித்தியாதரர் நடன சபையார் எனக்கெழுதிய முதற் கடிதத்தின் அடுத்த நாளே அக்கட்டுரையாளர் எனக்கு [இந்தியாவுக்கு] அனுப்பிய கடிதத்தின் ஓரிடத்தில் "இச்சமயத்தில் தாங்கள் எம்முடன் ஒத்துழைப்பீர்களானுல், இச்சபாவை இன்னும் உயர் நிலைக்குக் கொண்டுவரலாமென்பது என் துணிபு" என்றும் மற்ருேரிடத்தில் "தாங்கள் என்மீது எவ்வித அவநம்பிக்கையும் கொள்ளாது உங்கள் அந்தரங்க அபிப்பிராயத்தைத் தெரிவித்தால் யான் எதுவிதத்திலும் தங்களுக்குத் தருவித்து விடுகின்றேன்" என்றும் எழுதியிருக்கிறார்.

இன்னும் எத்தனையோ ருசிகரமான விஷயங்கள் அவரின் கடிதங்களிலிந்தாலும், அவர் எனக்கெழுதிய எல்லாக் கடிதங்களிலும் நான் மறுபடி சங்கீத அபிவிருத்திச் சபைக்கு ஆசிரியனுய் வரவேண்டுமென்ற நோக்கமே நிறைந்திருப்பதால் அவைகளை யெல்லாம் இப்போது வெளியாக்க எனக்கு மனமில்லை. ஆனுல் அவசியம் நேரும் போது எந்த ஒரு கடிதத்தையும் வெளியாக்கத் தவறிவிட மாட்டேன்.

மேற்கண்ட விஷயங்களை நன்கு ஆராய்ந்து "அவலை நினைத்து உரலை இடிப்பது" யார்? என்பதைத் தீர்மானிக்கும் உரிமையை வாசகர்களுக்கே விடுகிறேன். மேலும், இந்நாட்டில் எவரேனும் என்னையொரு சங்கீத வித்துவானென எண்ணியிருப்பார்களாயின், அவ்வித எண்ணம் 100-க்கு 90 பங்குக்குமேல் இக்கட்டுரையாளராலேயே ஏற்பட்டிருக்கவேண்டுமென்பதை நான் எப்போதும் ஒப்புக்கொள்ள மறுக்கமாட்டேன்.

ஆனுல் நானுக அவர் குறிப்பிடும் வித்வான் எனும் பட்டத்தையடைய வெண்ணியதே கிடையாது. ஏனெனில் சங்கீதக் கலையில் எவ்வளவு பயிற்சியடைந்திருந்தால் வித்வானெனும் பட்டத்திற்குத் தகுதியென்பது நான் 20 வருடகாலமாய் பார்த்த எந்த சங்கீத நூல்களிலும் காணவில்லை. இன்னும் ஒன்றிரண்டு கர்த்தா ராகங்களிலிருந்து சுலபமாய் உற்பத்தியாகும் ஜன்ய ராகங்கள் அனைத்தையும் ஒரு மனிதன் அனுபவபூர்வமாகக்கொண்டு வருவதற்கு அவனின் ஆயுள் போதாதென, என் 13-வது வயதில் என் உபாத்தியாயர் ஒரு நாள் கூறியது இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

அக்கட்டுரையில் ஓரிடத்தில் "பூர்வீக சங்கீத உண்மை" யெனும் நூலை எழுதிய பொன்னச்சாமிப்பிள்ளையவர்களின் அபிப்பிராயங்களனைத்தையும் சங்கீத ஆராய்ச்சியாளரோ, அன்றி வீணை, பிடில் வாத்தியங்கள் கையாளுவோரோ ஒப்புக் கொள்வார்களென்பது சந்தேகம்" என எழுதப் பட்டிருக்கிறது. இதற்கு நான் கூறுவதெல்லாம் இதில் சந்தேகமில்லையென்றும், வீணை, பிடில், வாசிப்போரும், ஆராய்ச்சியாளரும் ஒப்புக்கொண்டிருக்கும் அபிப்பிராயங்கள் அந்நூலிலேயே சேர்க்கப்பட்டிருக்கிறதென்றும், "வழிகாட்டி"யில் இடங்கிடைத்தால் அவைகளை வெளிப்படுத்தத்தயாராயிருக்கிறேனென்பதுவுமேயாகும்.

கட்டுரையாளர், எந்தத்தேசத்திலும் (சங்கீதத்தில்) 12 சுரஸ்தானங்கள் ஒவ்வொரு ஸ்தாயியிலும் இருப்பதாகக்கூறிவிட்டு, பிறகு கர்நாடக சங்கீதமென்றும், நமது சங்கீதமென்றும்கூறுகிறார். இந்தக் கர்நாடக சங்கீதமும், நமது சங்கீதமும் எந்தேசத்திலுமில்லாத சங்கீதங்களாவென்பதுவும் கவனிக்கத்தக்கது. மேலும், அந்த நமது சங்கீதத்தை ஆராய்ச்சி செய்யுப்போது சங்கீத நூலாசிரியர்கள் 24 ஸ்ருதிஸ்தானங்கள் ஒவ்வொரு ஸ்தாயியுமிருப்பதாக உதாரணம் தெரிவிக்கிறார்களாம். சுரஸ்தானத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்யும்போது ஸ்ருதிஸ்தானம் என் வந்ததோ தெரியவில்லை. ஒருவேளை சுரஸ்தானத்தையே ஸ்ருதிஸ்தானமெனக் குறிப்பிட்டிருந்தால் அதை எவரும் ஆட்சேபிக்கமாட்டார்கள்.

சங்கீத நூலாசிரியர்கள் தெரிவிப்பதாகக்கூறும் உதாரணத்தின் ஓரிடத்தில், மத்திபத்தின் கீழ் ஆறு சுரங்களும் மேல் ஆறு சுரங்களும் கட்டப்பட்டிருக்கிறது. இதன்படி பார்க்கப் போனுல் மொத்த சுரங்கள் 12 தானுகிறது. ஒருவேளை அந்நூலாசிரியருக்கு ஆறும், ஆறும் எத்தனையென்பது தெரியாதபோலும்; மாருரிடத்தில் "வீணையில் தூல வடிவமாக 24 மெட்டுகளும் சூக்கும வடிவமாக 24 ஓசைகளும் பொருந்தியிருக்கின்றன" என எழுதப்பட்டிருக்கிறது

இந்த 24 மெட்டுகளிலிருந்து உண்டாகும் 24 ஓசைகளை சப்த சுரங்களால் முற்றுப்பெறும். ஒரு ஸ்தாயி என்பது ஏதாமொரு நூலாசிரியரின் எண்ணமாயிருந்தாலும், அன்றி ஆராய்ச்சியாளரின் எண்ணமாயிருந்தாலும் அவர்களுக்கு சங்கீதத்தில் அணுவளவு அறிவுகூடக் கிடையாதெனத் திட்டமாய் சொல்லலாம். ஏனெனில், நான்குறிப்பிடும் "பூர்வீக சங்கீத உண்மை"யும் வீணையின் அமைப்பைக்கொண்டே எழுதப்பட்டிருக்கிறதென்று மட்டும் கூறினுல் போதும். அன்றியும்,

நான் சங்கீத சம்மந்தமாக இதற்குமுன் எழுதிய கட்டுரைகளும், இந்தக் கட்டுரையின் கருத்தும்

பொதுவாக, சங்கீதம் பயிலுவோரெவரும் சரியான அடிப்படையைக் கைக்கொண்டால் கூடியவரையில் மேலுக்குவசலாமென்ற களங்கமில்லாத ஒரு நோக்கமேயன்று வேறில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ம. க. அவர்களும் நானும் எவ்வளவோ நேசமாயிருந்திருக்கிறோமென்பதற் கடையாளமாக அவரால் எனக்கெழுதப்பட்ட பல கடிதங்கள் என்னிடமிருக்கின்றன. என்னவிருந்தும் அவரின் கட்டுரைக்குப் பதில்கூறவேண்டியது என் கடமையாகிவிட்டது. இனியாகிலும், திரு. ம. க. அவர்களும் மற்றெவரும், மனப்பூர்வமாய் சங்கீதத்தை விருத்தி செய்யும் நோக்குடையவர்களானாலும், அதில் உண்மை அமைப்பு எது? போலி அமைப்பு எது? என்பதை அறிந்து கொள்ள இச்சை கொள்வார்களானாலும் நான் குறிப்பிடும் "பூர்வீக சங்கீத உண்மை" நன்கு ஆராய்ச்சி செய்து பார்க்கட்டும், அதில் விளங்காதவைகளேதுமிருந்து என்னைக்கேட்டால் எப்போதும் அவர்களின் சந்தேகத்தை என்னாலானமட்டும் போக்கி வைக்கிறேன். இப்படிச்செய்வது எவருக்கேனும் திருப்தியில்லாவிட்டால், சில பெரியோர்களைக் கொண்டு ஒரு மத்தியஸ்த சபை ஏற்பாடு செய்து அதன்முன்பாக எவருடனும் விவாதித்து 'பூர்வீக சங்கீத உண்மை'யின் அமைப்பே மற்றெல்லா நூல்களிலும் பார்க்க சிறந்ததென்பதை நிரூபித்துக் காட்டுவதற்கும் தயாராயிருக்கிறேன்.

இப்படியான ஓர் ஒழுங்கு முறைக்கு வாமுடியாத எவரும் வீணில் மனம் போனபடி பேசுவதினாலும் எழுதுவதினாலும் எவ்வித பிரயோசனத்தையும் அடைய மாட்டார்களென்பதோடு, போலிச் சங்கீத அமைப்பு என்றும் நீடூழிவாழ உதவி புரிந்த பாவத்திற்குமாளாவார்கள்.

"வெண்ணெயைக் கையில் வைத்துக்கொண்டு நெய்க்கழுவாரோ" சமூகத்திற்கு மாத்திரமன்றி சங்கீதத்திற்கும் இடங்கொடுக்கும் "வழிகாட்டி"க்கு நானும் உண்மைக் கலை விரும்புவோரும் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

புல்லாங்குழல், நடேசன்.

கடிதம் 3

தமிழனங்கின் சந்தேக நிவர்த்தி

மத்திராதிபர்,
வழிகாட்டி.

ஐயா,

பெண்ணுரிமை யென்னுந் தலையங்கத்துடன் என்னால் வரையப்பட்ட கட்டுரையில் நம் சமூக அன்பரொருவரால் சில ஐயவினாக்கள் தங்களது எட்டாவது இதழில் நிகழ்த்தப்பட்டிருந்தன.

அவற்றுள் முக்கியமாகத் திருமண விடயத்தில் நம் தொன்மையை இழந்தோமென்னுங் கூற்றுக்கு, அந்நிபர் திருமண முறையே எம்தொன்மை யென காமத்தைக் காதலென வெண்ணி ஐயவினாக்கள் நிகழ்த்துமவர் கருத்துக்கு அறிவாளிகள் இரங்காமலிரார்.

அந்தன்றித் திருமண காலத்திற் பெண்களினுடன் பாடுங் கேட்டல் வேண்டுமென்பதற்காதாரமாகக் கூறப்பட்டதை நிராகரித்து அதனால் பல கஷ்டங்கள் விளையுமென்று வற்புறுத்துவது மன்னியில்

"பெண்ணுதவுங்காலை பிதா விரும்பும் வித்தையே
யெண்ணில்தனம் விரும்பும் என்றாய்—நண்ணியுள
கூரிய நல்சுற்றங் குலம் விரும்புங் காந்தனது
போழுகுதான் விரும்பும் பெண்" என்னுஞ் செய்யுளிலுள்ள ஈற்றடியை மாத்திரம் மேற்கோளாகக் கொண்டு என் கூற்றிற் சிலவற்றைத் திரித்து தமது மனோபாவனைக்கு என் கட்டுரையிற் சில பொருத்தமிருப்பதாகவும் பாவனையாகக் கூறுகிறார். அத்துடன் பெண்ணுரிமை கடியப்பட்டிருக்கிறதென்று கூறும் ஆண்மக்களின் கூற்றுக்கு ஆதாரமில்லை யென்பதாகவும் கூறி அதை நிவர்த்திக்குமாறு கூறுகிறார். ஆகையால் யான் கீழே பொறிப்பன அதற்குகந்த சஞ்சீவியாகுமென்பதே யென் துணிபு.

அக்கட்டுரையில், மணம் பற்றிய விடத்தில் வெகு சுருக்கமாகவும், அக்காலங்களிலே நம் சகோதரிகளின் உடன்பாடு கூடல் முக்கிய மென்பதற்குச் சாதகமாகவும், அதுபற்றி நம் தொன்மையை இழந்துவிட்டோமென்றும் குறிப்பிடப்பட்டிருப்பதை வாசகர்கள் நோக்குமாறு வேண்டுகின்றேன். இங்கே மண விடயத்தில் பண்டைய முறையையே குறிப்பிடுகிறேனென்பது தெளிவு. ஆகவே நம்முன்னோரால் வகுக்கப்பட்ட பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம், அசுரம், இராக்கதம், பைசாசம், காந்தர்வமென்னு மெண்வகை மணங்களுள் ஈற்றிற் கூறப்பட்ட காந்தர்வ மணத்தையே யவர்கள் பெரும்பாலும் ஆதரித்தனரென சரித்திரங்கள் கூறுகின்றன. காந்தர்வ

மணத்தைக் களவு அல்லது காதல் மணமென்றுஞ் சொல்வர். இவ்விடத்திலன்பர் அந்நியரைச் சுட்டிக்காட்டி அவர்கள் அதை ஆதரிப்பதாக மலிகிறார். ஆனலவர் மேலைத் தேசத்தவர்களைத்தான் அந்நியர் என்ற சொல்லுக்குப் பொருள்கொள்ளுகிறரென்பது அவரது வினாக்களிலுருந்து விளங்கக்கிடக்கின்றது. அங்கேயுள்ள பெண்கள் தங்களுக்கு ஏற்ற வரனை வரித்தம் பலகேடுகள் நிகழ்கின்றனவெனக் காமத்தைக் காதலெனத் கருதுகிறார். அவர் கூறுவது போல் ஏற்ற வரனென்றால் இசைந்த அல்லது ஒத்த அல்லது தக்க கணவனென்றர்த்தங் கொள்ளும். அத்தகைய கணவன் ஒத்தகல்வி, ஒத்த பண்பு, ஒத்தஉடல் நலம், ஒழுக்கம் வாய்க்கப்பட்டவனாயிருக்க வேண்டும்: அவனை அவர்கள் ஏற்றவரை வரிப்பதாயின் அன்பர் குறிப்பிடும் கேடுகள் நிகழ்வதற்கிடமில்லை. ஆகவே அவர்கள் தமக்கு ஏற்காத முறையில் வரிப்பதினால் அவை நிகழ்கின்றனவென்பதே என் கருத்து. காதல் தெய்வீகத்தன்மை பொருந்தியது. அது அன்பினின்றுந் தோன்றுவது. காமம் அவாவினின்றும் பிறப்பது. காதல் அழியாதது. காமம் அழிந்துபோவது. காமம் பல விடங்களிலும் பிறக்கும். காதல் ஒரே இடத்தில் படிந்த வேட்கை. காதல்உலகை வளர்க்கும் காமம் உலகைத் தேய்க்கும். காதலைப்பற்றிப் புகழாத புலவரில்லை யென்றே சொல்லலாம். அத்தகைய மணத்தினைச் சத்திரங்கள் கட்டவேண்டி நேருமென்றன்பர் கூறுவதை யாதாரித்தாலும் அறிவுடைய உலகம் ஒருபோதும் ஏற்காது. ஆனல் அத்தகைய மணங்கள் தற்சமயம் நம்மளிடையே அவ்வளவு சாத்தியமில்லையென்று அவர் கூறினால் நானும் என் கட்டுரையில் மறுப்பதற்கில்லை.

இன்னோரிடத்திலவர், "தற்காலத்தில் நகை புடவை வாங்குவதுபோலவே ஓர் மணமகளையும் வாங்குகிறார்கள். எனப் பொருத்திபது சரியே" என்று என் கூற்றைத் திரிக்கிறார். அது எவ்வழியிற் பொருந்து மென்பதைத் தயவு செய்து அறிவித்தால் மிகவும் நல்லாயிருக்கும.

பிறிதோரிடத்தில், மணமகளைப் பற்றிய விருப்பத்தை ஓர்பெண்ணினிடம் கேட்டால் சிறுபிள்ளை தவறிளைத்து விடுமென்பதற்காதரவாக அன்பர் கூறும் மேற்கோளின்படி, தந்தை, தாய் முதலியோர் எப்படி வித்தையையும், பொன்னையும் முக்கியாம்சமாகக் கருதுகிறார்களோ அங்ஙனமே ஓர் பெண்ணும் தனக்கு வரவிருக்கும் நாயகனின்முகையும் ஓராம்சமாகக் கருதுவாள். ஆயினும் அவளுந்தன் விருப்பத்துக்கூற அருகதையுடைய வளாவென்பதைச் சற்றே பார்ப்போம். நம் முன்னோர் பெண்களின் பருவத்தைப் பேதைப் பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்ணென முக்கியமாக ஏழாக வகுத்திருக்கிறார்கள். அவைகளுள் மடந்தைப் பருவத்தின் பிற்கூறும், அரிவைப் பருவமுமே மணத்திற் கேற்ற காலங்களாகும். அக்கால வெல்லைக்குள் அவர்களும் சொற்ப கல்வியறிவைப் பெறுகிறார்கள். அதன்மூலம் அன்பின் நுட்பத்தையும், உலகவிடயங்களையுஞ் சற்றே அறியச் சந்தர்ப்பமேற்படுகின்றது. அன்பின் நுட்ப மறியவே மங்கல் கல்விகற்பது. பின் மணமென்னும் மூலமாகவே அதை அனுபவத்திலறிகின்றனர். அறிவினின்றாற்றெடுத்தோடும் அன்புப் பிரவாகமே ஏனைய உயிர்களிடத்தும் மூட்டும் பாசமாகும். அதுதான் இந்துமத நூல்கள் கற்பிக்கும் தெய்வம். ஆனலிங்கே மதப்பேச்சும் புகுத்தவதாகத் தப்பபிப்பிராயம் கொள்ளாதிருக்குமாறு வேண்டுகிறேன். அஃதன்றி ஓர் பெண்ணின் வாழ்க்கைச் செல்வம் அவள் கணவனென்று யான் கூறின் அன்பரும் மறுக்க முடியாது. அத்தகைய ஒருவன் அவளுடைய அன்பிற்கிசைந்தவனாயிருக்க வேண்டும். அன்புவழியில் இருமை கெடுத்து ஒருமை கூட்டுவதுதான் மணமென்று என் கட்டுரையிற்கூறப்பட்டிருப்பதையுங் காணலாம். இன்னும் மனமில்லா விடத்தில் மணம் நிகழ்தலில்லை. அப்படி நிறைவேறினும் அது கருமணமன்றித் திருமணமாகா.

"ஒத்த அன்பான் ஒருவனும், ஒருத்தியும்
கூடுகின்ற
காலத்துப் பிறந்ததே பேரின்பம்"

'காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு
பூண்டதே பேரின்பம்!"

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" என்னும் ஆன்றோர் வாக்குகள் சிந்திக்கற்பாலது. அத்துடன் ஓர் பெண்ணின் விருப்புக்கிசையாதவன் அவளுக்கு பணமாலை சூட்டுதலறமுமன்று. ஆகையாலவர்களுந் தம் விருப்பினைக்கூற அருகதையுடையோரென்பதும், அதுவே மணமென்னுஞ் சொல்லுக்குப்பொருத்தமுடைத்தென்பதும் வலியுறுத்துணிபு.

அடுத்த வினவில் உரிமைபற்றிக் கூறுமிடத்தில், நம் சகோதரிகள் இல்லற அரசிளாய்ச் சர்வ சுதந்தரத்தோடும், புருஷன் பிள்ளைகென்ற பாசத்தால் மகா சந்தோஷத்தோடு வீட்டுவேலைகளை முடித்து ராணிகளைப்போல் வாழ்கிறார்களென்று அன்பர் கூறும் பெருமை கேட்டு நானும் சந்தோஷியாமலிருப்பதற்கில்லை. ஆனல், புருஷன், பிள்ளைகளைக்கண்டு இல்லற அரசிகளாவதற்கு ஓவ்வோர் இல்லற அரசருக்கும் எவ்வளவு தட்சணை வைக்கப்பட்டதென்பதை அன்பர் மறந்துவிட்டாரேனும்.

இருந்தும் அதைத் தட்சணை யென்றுற் பொருந்தாதென்றும், ஓர் மணமகனையே விலைக்கு வாங்குகிறார்களென்றுலே பொருந்து மென்வுங் கூறுகிறார். அவர் பொருத்துவதுபோல் ஒருவரை இன்னொருவர் விலைக்கு வாங்கினால் வாங்கியவருக்கு மற்றவர் அடிமை. அப்படியானால் நம் சகோதரிகளின் பாதுகாப்பிலும், அதிகாரத்திலும் நாமிருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறுக எங்கள் வழமை இருக்கிறது. ஆகையால்வர் கூற்றுப் பொருந்தாவென்றுற் தப்பில்லை. இன்னுஞ் சந்தேகமானால் ஆறுமுக நாவலரும் ஓர் சமயத்தில் "கன்னியையுங் கொடுத்துக்கானி, விளைநிலம், பொன்னுங் கொடுக்கும் வழக்கமுடைத்து நம்நாடு." என்று கூறியிருப்பதை நினைப்பூட்டினால் சந்தேகம் செலவு பெற்றுக் கொள்ளுமென்றே நம்புகிறேன். ஒருவர் ஓர் மகளைப் பெற்று வளர்த்துக் கல்விகற்பித்து ஓர் இல்லற அரசியாகப் போகுங்காலத்தில், பொன்னும், பொருளுஞ் சேர்த்துக் கொடுப்பதென்றால், அவர் கூறி ஐயபுறும் அந்த.....டைக்காரன் வழக்கந்தான், நாம் கொண்டுள்ள பழக்கமென்று கூறினால்என்பொருந்தாது. ஆகையால்நம்சகோதரிகளை நம்மிலும் உரிமையிற் குறைந்தவர்களாகவே நாம் கருதுகிறோமென்று என்கட்டுரையிற் கூறப்பட்டிருப்பது மல்லாமல் இன்னும் பல ஆண் சிங்கங்கள் கூறிப் பரிதவிப்பதுமை. பொய்யாகாதல்லவா? இஃதன்றி ஓர் மகள் தாரமிழப்பின் எவ்விதநிவர்த்தியுண்டென்றும், ஓர் ஆண்மகன் தாரமிழப்பின் எவ்வளவு சீக்கிரம் விமோசனம் கிட்டுமென்றும் அவரும் நன்கறிவாரென்றே நம்புகிறேன்.

"கற்பு நிலை சொல்ல வந்தார் இரு
கட்சிக்கும் அதுபொதுவில் வைப்போம்."
(பாரதியார்)

இவையாவும் பிறப்புரிமையிலேயே அடங்குமாகையால் எவ்வழியில் அவை கடியப்படுத்துகிறதென்பதை நுண்மதி கொண்டு நோக்குவாராக. "மனசாட்சி ஒருபோதும் பொய்பகராது."

இன்னும் அவர் கூறும் ஓர் முக்கிய விடயம் என்னைக் குறிப்பிடாமலிருக்கவும் முடியவில்லை. அதாவது நமது சகோதரர்கள் சர்வ சுதந்தரமுமிழந்து பாம்பாட்டியின் கையிலகபபட்ட பாம்பு போல் அல்லலுறுகிறார்களென்று அவர் கூறுவது ஏற்றுக்கொள்ளக்கூடியதே. நாம் சர்வ சுதந்தரமுமிழந்ததினாலேதான் நம் நாட்டுமக்கள் செய்தொழிலுக்காதரவின்றிச் செய்யுந் தொழிலறிவுழியுமின்றி வறுமைப் பிணிவாய்ப்படுகிறார்களென்று என் துக்கத்தையுந் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆனாலவர் குறிப்பிட்டு வினவுவதுபோல் என் கட்டுரை ஒருவரிருவரையோ அன்றி இந்நாட்டில் அதிகாரவர்க்கத்தினரின் கீழ்ச் சேவைபுரியும் நம்மவரையோ மாத்திரந்தான் நோக்காகக் கொண்டதல்ல. தம்மைப்போலவே நம் நாட்டு மக்களெல்லோரும் என்று அன்பரின் எண்ணம் போலும்.

ஈற்றில், பாலன் "வழிகாட்டி"க்கு என் மனமுவந்த நன்றியைக்கூறி, வாசகர்களின் நல்லெண்ணத்தைப் பணிவுடன்கோரி, அன்பருக்கு என் பிரியாவிடை கூறி நிற்கும்,

இ. முருகேசு,
சென்னல்.

நீங்களறிவீர்களா?

ஸ்திரீயின் கண்களில் மிளகுப்போடி வீசப்பட்டது சிங்கையில் வழிப்பறிக்கொள்ளை.

ஒரு சீனஸ்திரீ சிங்கையில் ஒரு றோட்டு வழியாகப் போய்க்கொண்டிருக்கையில் நான்கு சீனர்கள் திடீரென்றத்தான்றி அவளதுகண்களில் மிளகுப்பொடியை வீசி அவளிடமிருந்து 75 வெள்ளி பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்துக் கொண்டு போய்விட்டனராம். கொள்ளைக்காரர் ஆயுதம்தாங்கியிருந்தனரா இல்லையா என்று அவளால் நிச்சயமாய்க் கூறமுடியவில்லை. ஆனால் நகைகள் கழற்றப்படும்போது அவளது நெஞ்செலும்பின்மேல் எதோ கூர்மையாக அழுத்தப்பட்டதாய் உணர்ந்தாளாம். இது நடந்தது கார்த்திகை மாசம் 10-ம் தேதி. பொலிசார் புலன் விசாரித்து வருகின்றனராம்.

ஜெர்மன் யுவதிகளின் உளவுவேலை.

பிரிற்றனில் எவ்விதக் காரியமுமின்றி வந்து உட்கார்ந்திருக்கும் ஜெர்மனியர்களை தேசத்தை விட்டுக்கிளப்புவதென அத்தேசத்தவர் தீர்மானித்திருக்கின்றனராம். சில ஜெர்மன் யுவதிகளின் நடவடிக்கைகளையும் கவனிக்க வேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. அனேக ஜெர்மன் யுவதிகள் இங்கிலாந்தில் ராணுவ அதிகாரிகள்

வீட்டில் வேலைக்கமர்ந்திருக்கிறார்களென்றும், அவர்கள் பல இரகசியங்கள் ஜெர்மனியிலுள்ள தங்கள் உறவினர்க்கு தெரிவித்திருக்கிறார்களென்றும் தெரிகிறது.

மணம்புரிந்த 11-ம் நாள் விவாகரத்து.

விலிப் ஜேம்ஸ் டேவிட்சனும், திருமதி டோரதி மூரும் ஒரே கலாசாலையில் கல்வியபியின்று வந்தனர். பின்னர் இருவரும் காதலித்தனர். மணமும் நடைபெற்றது. 11 நாட்கள் கழிந்தன. காதலர் தம் வாழ்க்கை மலர் வெதும்பிவிட்டது. மணமற்ற மலர் வேண்டாமென அவ்விருவரும் விவாகரத்து செய்ய முற்பட்டனர். பிட்ஸ்பர்க் நியாயஸ்தலத்தில் வழக்கு நடந்தது. டேவிட்சனுக்கு பிதுரார்ஜித சொத்து 8,000 பவுன். அவனது 30-ம் வயதில் 140,000 பவுன் கிடைக்கும். மற்றும் டோராதிக்கு 40,000 பவுன் கொடுக்கும்படி தீர்ப்பளிக்கப்பட்டதாம்,

---

கண்ணைப்பிடுங்கிய சாது.

நருமதை ஆற்றங்கரையில் உள்ள ஒருமடத்தில் வந்து வந்த போலபாபா என்ற சாது ஒருவர் தம்முடைய மாணவர்களுக்கு உலகமாயையைப்பற்றிப்போதித்து வந்தாராம். அப்போது உலகத்தைக் கண்டு மயங்கச் செய்வது கண்களே என்று அவர் கூறினர். அப்போது அருகிலிருந்த கோபம் சொல்லிமுடியாது. அக்கோபத்தின் பலனாக அவர் தமது இரு கண்மணிகளையும் தோண்டிவிட்டார். உடனே அவர் ஜப்பல்பூர் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டார். அங்கு மரணம் ஆறிவருகிறதாம்.

ஒரே மனைவியை மும்முறை மணந்தான்.

பூகோஸ்லேவியாவில் கோர்பிகோவிச் என்னும் முஸ்லீம் ஒருவன் இருக்கிறான். அவன் பத்தாண்டுகட்குமுன் கடிவா என்னும் நங்கையை மணந்தான். சில மாதங்களுக்குப்பின் இருவரும் ஷெரியட் நீதிமன்றம் மூலம் விவாகரத்து செய்து கொண்டனர். ஒரு வருடம் கடந்தது, இருவரும் ஒரு கிராமத்தில் சந்தித்தனர், காதல் கொண்டனர், உடனே மணந்தனர். இல்லற சகடம் வாழ்க்கை தொடியில் சரியாக ஓடவில்லை பல குடும்பச் சச்சரவுகள் நிகழ்ந்தன. உடனே இருவரும் விவாகரத்து செய்துகொண்டனர். இப்பொழுது மறுபடியும் காதல் தேவன் அவரை ஒன்றுபடுத்த வந்து விட்டானும். ஷெரியட் நீதிமன்றத்திலேயே அவர்கள் மணத்தைப் பதிவு செய்துகொண்டார்கள். ஓரே மனைவியை மும்முறை மணந்த விநோதம் பாருங்கள்]

வைத்தியருக்குச் சேருப்படி.

ஜப்பல்பூர் போலீசார் ஒரு வைத்தியரைகைது செய்து இருக்கின்றனர். வழக்கு வெகு ருசிகரமானது. இளமையும் அழகும் நிரம்பிய ஐனப் பெண் ஒருத்தி அவ்வூர் தர்ம ஆஸ்பத்திரியில் வைத்தியம் செய்துகொள்ளச் சென்றாளாம். அவளைத் தனியாகப் பரிசோதனை செய்ய வேண்டுமென்று வைத்தியர் சொன்னதாகவும், கள்ளங்கபடமின்றி அப்பெண்ணும் அதற்கு ஒப்புக்கொண்டு தனி அறை ஒன்றினுட் சென்றதாகவும் சொல்லப்படுகிறது. ஸ்டெதாஸ்கோப் என்பது ஒரு கருவி. அதன் ஒரு நுனியைக் காதில் மாட்டிக் கொண்டு மற்றொரு நுனியை மார்பில் வைத்துப் பார்த்தால் இருதயத்தின் [illegible]யை அறியலாம்.

அந்தக் கருவிமூலம் அ[illegible]ணின் இருதயத்தைப் பரிசோதிப்பதுபோல் டாக்டர் பாவனை செய்தாரென்று கூறப்படுகிறது. பாவனை செய்ததோடு மாத்திரம் நிற்கவில்லையாம். மார்பில் கருவியை வைத்துப் பார்ப்பதுபோலக்காலித்தனமாக ஏதோ செய்தாராம். உடனே வந்ததாம் பெண் மணிக்குக் கோபம். தன் காலில் பூட்டியிருந்த செருப்பைக் களற்றிக்கொண்டு அந்த வைத்தியருக்கு நன்றாக ஆராதனை செய்துவிட்டு வீட்டுக்கு ஓடிப்போய்த் தன் கணவனிடம் சொல்லிவிட்டதாகத்தெரிகிறது.

ஆஸ்பத்திரி அதிகாரிகள் அந்த (டாக்டரை) வைத்தியரை வேலையை விட்டு நீக்கிவிட்டார்கள்.

செருப்புத்தணலைச் சாப்பிடும் இந்தியர்.

சாதாரணமாக தணலின்மீது யாதொரு பயமுமின்றி திருவிழாக் காலங்களில் சிசுக்கள் முதல் வயோதிகர்வரை நடந்து செல்வதைப்பற்றி நாம் அனேகரும் கண்ணினால் பார்த்தும் காதால் கேட்டுமிருக்கிறோம். ஆனால் உலகத்தில் நெருப்புக் கோழி என்று சொல்லப்படும் ஒரு ஜந்துவைத் தவிர மொழுந்து விட்டுக்கொண்டிருக்கும் தணலைச் சாப்பிட்டதாக நம் தலைமுறையில் எங்கும் கேட்டதுகூட இல்லை. அப்படிப்பட்ட மகா புருஷனும் ஒருவர் தற்போது இருந்து வருவதாகக் கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து வெளியாகிறது.

பாஞ்சால தேசத்தில் அமிர்தசரஸ் ஜில்லாவைச்சேர்ந்த ஸோஹால் என்னும் ஊரில் பண்டித ஹரிகோபால் என்னும் ஒருவர் இருந்துவருகிறார்.

அவருக்கு தணலை எடுத்து விழுங்குவதென்றால் நமக்கெல்லாம் ஹல்வாத்துண்டு ஒன்றை விழுங்குவதாயின் எவ்வளவு கஷ்டமோ அவ்வளவு கஷ்டமாயிருந்தான். யாதொரு கூச்சமும் இன்றி விழுங்கி விடுகிறார்.

சென்றவாரம் பிரோஸ்பூருக்குக் கலியாணத்துக்காகப்போயிருந்த பண்டித ஹரிகோபால் செய்த காரியம் எல்லோரையும் மூக்கின்மேல் விரலை வைக்கும்படி செய்துவிட்டது. எரிந்துகொண்டிருந்த அடுப்பிலிருந்து லாகுசாந்தமாக அவர் ஒரு கரித்தணலை எடுத்து யாதொரு கூச்சமுமின்றி அதை அப்படியே வாயில்போட்டு மென்றபடியே உள்ளே தள்ளிவிட்டார். அதனால் அவருக்கு எவ்வித கஷ்டமும் ஏற்படவில்லை. வாய்க்குள் தணலைப் போட்டு மெல்லுகையில் வாயிலுள்ள உமிழ் நீர் பட்டுத்தணல் அணையும்போது உண்டாகும் உஸ் என்ற சத்தமும் அங்கிருந்த யாவர்க்கும் கேட்டதாம். தணலை விழுங்கிபபின் பண்டிட் ஹரிகோபால், அங்கு கூடியிருந்தவர்கள் முன் வாயை நன்றாகத் திறந்து காட்டினாராம். வாய்க்குள் எவ்வித காயமும் காணப்படவில்லையாம். இதைப்பார்த்த அனைவரும் திடுக்கிட்டுப்போய்விட்டார்களாம்.

———:0:———

மருமகளைக்கொன்ற வேள்ளை மாமி.

தமிழ் நாட்டில்தான் மாமி மருமகள் சண்டை ஏற்படும் என்று எண்ணியிருந்தோம். ஆனால் ஆங்கில நாட்டிலுமே மோசமாய் இருக்கிறது. தனது மருமகளைக் கொலை செய்த குற்றத்திற்காக, பிரமதி ஜோசபையின் மேரி என்னும் கூஷவராத் தொழிலாளர் ஒருவரது மனைவிக்கு இங்கிலாந்தில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டதாம்.

ஜோசபைன் மேரி ராணுவத்தில் உத்தியோகமாயிருக்கும் தனது மகனுக்கு பணக்கார இடத்தில் கலியாணம் செய்துவைக்கத் தீர்மானித்திருந்தாள். தற்போது கொலை செய்யப்பட்டு இறந்த பெண்ணை மகன் காதலிக்க ஆரம்பித்துள்ளதை அறிந்த தாய் திப்பறிபவர்களைக்கொண்டு அப் பெண்ணின் நிலைமையை விசாரித்து அறிந்தாள். அப்பெண்ணைப்பற்றி அவளுக்குப் பொய்யான தகவல் கொடுக்கப்பட்டதாய்த் தெரிகிறது. அவள் நிலைமையை அறிவதாய்க்கூறியே விவாகம் நடைபெறவிடாமல் இரண்டு வருடம் கடத்திவிட்டாள். கடைசியில் கலியாணம் இரகசியமாக நடைபெற்றுவிட்டதாம். இதை அறிந்த தாய் மிகுந்த ஆத்திரம் அடைந்தாளாம். அவளைத் தொலைக்காமல் விடுவதில்லை, எனக்குத் தூக்குத்தண்டனை கிடைத்தாலும் கரியமில்லை. மருமகளைக் கொல்ல வேண்டும் என்று சபதம் செய்தாளாம்.

ஒருநாள் பெண்ணின் வீட்டிற்குள் மாமியார் பிரவேசித்து, மருமகளை நெஞ்சை நெரித்துக் கொலை செய்து, தற்கொலை செய்த பாவனையாகக் கழுத்தில் சுருக்கிட்டுச் சமையலறையில் தொங்கவிட்டு விட்டாளாம்.

தனது தாய்க்கு விரோதமாக மகன் லெப்டினண்ட் சாட்சிகூறுகையில், பிரக்ஞையற்று விழுந்துவிட இருந்தாராம். அவர் தமது சாட்சியத்தில் அநேக தடவைகள் தான் தன் சாயைச் சமாதானப்படுத்த முயன்றும் ஒன்றும் பிரயோஜனமில்லாமல் போய்விட்டதென்றும், ஒருநாள் தனது தாய் தன்னைப் பார்க்க வந்திருந்த சமயம் ஒரு இரவு முழுதும் தன்னை ஏளனம் செய்து நிந்தித்ததாகவும் கூறினார். மகன் சாட்சி சொல்லிக்கொண்டிருக்கையில், கைதிக்கூட்டிலிருந்த அவரது தாய், "என் மகனே" என்று விம்மி அழுது, மகனின் சாட்சியத்தைத் தடுக்கப் பிரயத்தனப்பட்டாள். ஆனால் மகன் தாயின் முகத்தைப் பார்க்கவில்லை.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டபின் அம்மாதைப் பந்தோபஸ்தாகச் சிறைக்குக்கொண்டுபோகும்போது, தெருவில் ஏராளமான சனங்கள் கூடி அவளைக்கொல்லு, கொல்லு என்று கூச்சலிட ஆரம்பித்துவிட்டனராம்.

———:0:———

பெண்கள் தேச ஊழிய சங்கம்.
காந்தியடிகளின் 69-வது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணப் பெண்கள் தேச ஊழிய சங்கத்தவரால் சென்ற மாசம் 3-10-37 பிற்பகல் நாலு மணியளவில் யாழ்ப்பாணக் கலாசாலை மண்டபத்தில், பாரத நாடுய்ய அவதாரம் செய்த மகாத்மா காந்தி அடிகளின் 69-வது ஆண்டு நிறைவு விழா உருக்கமாகக் கொண்டாடப்பட்டது, அதுசமயம் இந்துக் கல்லூரிப் போதகாசிரியர் அவர்களால் அரிய சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டதாம். பின்னர் சங்கத்தவருள் ஒருவராகிய ஸ்ரீபதி செல்வரத்தினம்மாள் என்னும் பெண்மணியால், சங்கத்தின் சார்பாக நன்றிகூறப்பட்டதும், தேசபக்தன் ராஜகோபாலன் என்பவர் தாய்மாராகிய உங்களிடத்தான் அதிதீவிர சக்தி உள்ளதெனவும், அவற்றை நற்பயனளிக்கத்தக்க வகைகளில் உபயோகப்படுத்தி நாட்டுக்கும், வீட்டுக்கும், நன்மைபுரியுமாறும் வேண்டிக்கொண்டார். அதன்பின் ஸ்ரீமதி மகேஸ்வரி தேவி என்னும் பெண்மணியால் பாரதியார் பாடல்கள் சில பாடப்பட்டுக் கூட்டம் இனிது முடிவடையப் பெற்றதென ஈழகேசரி கூறுகிறது.